Koviloor Digital Library

பி.ஸ்ரீ.

ஆழ்வார்கள் வரலாறு

6

Acc. No } 26736
@ 22

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஆழ்வார்கள் வரலாறு

(ஆறாம் பாகம்)

திருமங்கையாழ்வார்

பி.ஸ்ரீ

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26136

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
ப. எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004

Koviloor Digital Library

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு - 2002
இரண்டாம் பதிப்பு - 2010
மூன்றாம் பதிப்பு - 2013

© பதிப்பாளர்

விலை: ரூ. 75-00

Typesetting : Amaravathi Graphics, Chennai-33
Printed at : Logha Offset Printers, Chennai - 14

Koviloor Digital Library

4-2

அணிந்துரை

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஊற்றம் மிக்கவரும், ஆழ்வார்கள் திவ்ய சூக்திகளில் குடைந்து நீராடியவரும், முறையாகத் தமிழ் இலக்கியத்தை ஆராய்ந்தவருமான பி.ஸ்ரீ. அவர்கள் எழுதியுள்ள, 'காதலால் கதிபெற்ற' திருமங்கை மன்னன் திவ்ய சரித்திரத்தைப் பார்க்குப் பாக்கியம் பெற்றேன்.

ஸ்ரீசம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் சமகாலத் தவராகப் பெற்று, ஆலிநாடன், அடையார் சீயம், கொங்கு மலர்க் குழலியர்வேள், மங்கை வேந்தன், கொற்ற வேற்பரகாலன், கலியன் என்று பல நாமங்களால் போற்றப்படும் இவ்வாழ்வாரைக் குறித்து இலக்கியச்சுவை குன்றாது பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுதப்பெற்ற ஆராய்ச்சி நூல் இது.

ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை இப்பெரியாரைப்பற்றி, இவ்வாழ்வாராகிறார் உடம்பை நிழலிலே வைத்து ஆத்மாவை வெயிலிலே வைத்துப் போந்தார் ஒருவராயிற்று. ஆத்மாவை வெயிலிலே வைக்கையாவது பகவத் விஷயத்திலே முதலில் இழியாமை; உடம்பை நிழலிலே வைக்கையாவது அநாதிகாலம் விஷயப்ரவணராய், அதுவே யாத்திரையாகப் போருகை; நிழலாவது பகவத்விஷயமிறே என்று தம் வியாக்கியானத்தில் முதலில் குறிப்பிடுவர்.

அப்பரையும் சம்பந்தரையும் போலவே சிறந்த கவிபாடும் திறன் பெற்றவர் திருமங்கை மன்னன். இவர் இயற்றிய பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல்,

Koviloor Digital Library

திருவெழுகூற்றிருக்கை என்ற ஆறையும் 'மாறன் பணித்த தமிழ்மறை நான்கிற்கும் ஆறு அங்கம்' என்பர்.

இந்நூலில் இவ்வாழ்வாரின் வாழ்க்கைப் பகுதிகள் சுவையுடன் பேசப்படுகின்றன. கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னாளில் அவதரித்தது முதல் நூற்றைந் தாண்டுகள் தம் பூதவுடலோடு இப்பூவுலகை அலங்கரித்து பின் திருக்குறுங்குடியில் பரம பதித்தது ஈறாக ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் மனத்தை ஈர்க்கும் வகையில் குறிக்கப் பட்டிருக்கின்றது.

திருமங்கை மன்னனின் திவ்ய சூக்திகளை ஆராய்வது எளிதன்று. அதைத் தமக்கே உரிய பாணியில், சுவைக்க சுவைக்க இன்பம் பிலிற்றும்வண்ணம், சொற் கூட்டும் பொருட் கூட்டும் சீராக அமையவைத்து, புதியதொரு இலக்கிய வடிவில் வடித்துத் தந்த பி.ஸ்ரீ. அவர்களுக்குத் தமிழ் உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

எஸ். ஸ்ரீநிவாசன்
தில்லித் தமிழ்ச் சங்கம்

Koviloor Digital Library

தெய்வத் திருப்பணிக்காகவும் காதலியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும் திருமங்கை மன்னன் பல களவுகள் செய்தார். அவர் பெற்ற தண்டனை எவரும் பெறுவதற் கரியது! தம் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய எம்பெருமான் மீது மனம் கசிந்து மங்கை மன்னன் பாடிய பாசுரங்கள் ஞான விளக்குகளாகவும் பக்திக்காதல் ஜோதியாகவும் ஒளி வீசுகின்றன.

குமுதவல்லி நாச்சியார், திருமங்கை மன்னனைப் பக்திப் பாதையில் திருப்பிய சுவையான வரலாற்றையும் இந்த நூலில் படித்து ரஸிக்கலாம்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

		பக்கம்
1.	தீராத விளையாட்டு	7
2.	கணவனைத் திருத்திய காதலி	13
3.	மணலைத் திரட்டி மரக்காலிலிட்டு அளந்தது	23
4.	வாள்வலியால் மந்திரம் கொண்டது	30
5.	கதைகளும் கற்பனைகளும்	39
6.	கள்வனைக் காட்டிய மந்திரம்	55
7.	கப்பலில் பாதிப் பாக்கு	65
8.	பெரிய கோயில் அழகு செய்த பெரியார்	71
9.	திருமங்கைமன்னனும் திருஞானசம்பந்தரும்	81
10.	பாசுரங்களில் திருமங்கைமன்னன்	90
11.	திருமங்கைமன்னனின் வடதேச யாத்திரை	100
12.	தமிழ் நாட்டில் க்ஷேத்திர யாத்திரை	112
13.	யாத்திரை பூர்த்தியாகிறது	128
14.	பக்தர் சொல்லும் காதற் கதைகள்	136
15.	காதலும் அழகும்	147
16.	திருமங்கை மன்னன் அருளிய திருநெடுந்தாண்டகத்திலிருந்து	156
	மணவாள மாமுனிகளின் ஈடுபாடு	168

Koviloor Digital Library

காதலால் கதி பெற்றவர்

1. தீராத விளையாட்டு

ஏசப்போகிறார்களே, தெரியாதா? தெரிந்தும் அப்படிச் செய்வானேன்?

'தயிர் உண்ட பொன் வயிறு'

இந்தக் கவலை அவனுக்கில்லை. 'தயிர் போய் விட்டதே!' என்ற கவலை அவளுக்கும் இல்லை. 'எப்படி யாவது அந்த முகத்தைப் பார்க்கக் கிடைத்ததே!' என்ற திருப்தி பரஸ்பரமாயிருக்கிறது.

அவனுக்கு அந்த விளையாட்டில் பரம திருப்தி. அவன் வயிறு குளிர, அவள் நெஞ்சும் குளிர்கிறது. தீராத விளையாட்டு; ஓயாத தொல்லை; ஆனால் குறையாத திருப்தி!

ஏதோ ஒரு காலத்தில் நடந்ததாம் கோகுலத்திலே அந்த விளையாட்டு; எக்காலத்திலும் உலகம் பேசும்படி, ஏசும்படி, உலகத்தார் ஏசவேணுமென்றே போய்ச் செய்த காரியம் போலவும் இருக்கிறதாம்.

உண்மைதானே. இக்காலத்திலும் அந்த விளையாட்டுப் பிள்ளையை - அந்தக் கள்ளக் கிருஷ்ணனை - ஏசுவோர் இல்லையா?

ஆனால் தயிருண்ட அந்த வயிறு! தயிரை மட்டுமா உண்டது? தயிர்க்காரியின் உள்ளத்தையும் உண்டது; உணர்வை யும் வாரி உண்டது.

Koviloor Digital Library

தயிர், தயிர்க்காரி, 'கள்ளப் பிள்ளை' யென்று ஏசினவர் எல்லாரையும் உண்டது. என்ன பசி! ஆ. என்ன வயிறு! என்ன உணவு!

வாய்குளிர ஏசினவரையும் உண்டது; வயிறு எரிய ஏசினவரையும் உண்டது. ஏசினவர், ஏசுகிறவர், ஏசப் போகிறவர்களையும் உண்டுவிட்டதாம்! இப்படியும் ஒரு பசியா!

அந்த 'ஆய்ப்பாடி'யோடு, அகில உலகத்தையும் உண்டதாம் 'தயிருண்ட பொன் வயிறு.' பசி தீர்ந்ததா?

உயிர்களையும் உண்டு காப்பாற்றுகிறது

தன் பசி தீரவா அவன் உண்டது? பழைய உலகம், புதிய உலகம் - ஏசும் உலகம், ஏசாத உலகம் - எல்லாவற்றையும் பட்சபாதமில்லாமல் வைத்து இரட்சிக்கத்தானே! இரட்சை வேணுமே என்ற அந்த நமது பசிதீர அவன் உண்டானாம்.

உலகங்களையெல்லாம் உண்டும், அவன் பசி தீர்ந்த பாடில்லை. அந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளையின் வயிற்றில் இன்னும் இடம் இருக்கிறதாம்; வேண்டிய இடம் இருக்கிறதாம் - இன்னும் எத்தனை எத்தனை உலகங்கள், அண்டங்கள் தோன்றினாலும் அவற்றையெல்லாம் ஒருங்கே வைத்து இரட்சிப்பதற்கு. இதுதானே அவன் பசி?

தோன்றிய உலகம், தோன்றுகிற உலகம், தோன்றப் போகும் உலகம், தோன்றாத உலகம் எல்லாவற்றையும் வாரி உண்டும் நிறையாத வயிறு! என்றென்றும் நிறையாத வயிறு!

நிறையாத வயிறு; எனினும் குறையாத திருப்தி! - ஆம்; இந்தத் தீராத விளையாட்டிலே.

உலக ஆக்கம், உலக ரட்சை, உலக அழிவு எல்லாம் இந்த விளையாட்டே! ஆக்கத்திற்காக அழிவு; அழிவுக்காக ஆக்கம்; இரட்சைக்காக ஆக்கமும் அழிவும்! - ஆ ஆ, என்ன விளையாட்டு!

Koviloor Digital Library

கண்ணன் சட்டித் தயிரைக் கொட்டியும் உண்டும் அளைந்தும் விளையாடுவது போன்றது, என்றும் தீராத இந்த முத்தொழில் விளையாட்டும்!

அறக் கருணையும் விளையாட்டே; மறக் கருணையும் விளையாட்டே! காதலும் திருவிளையாடல்; சாதலும் திருவிளையாடலே.

எவ்வளவு பெரிய தத்துவத்தை, எவ்வளவு பெரிய சமய உண்மையை, எவ்வளவு எளிமையாகவும் வேடிக்கையாகவும் வெளியிடுகிறது கள்ளக் கிருஷ்ணனின் குழந்தை விளையாட்டு!

நரகாசுரன் முதலான அசுரர்களை வதம்செய்து உலகத்துயர் தீர்ப்பதும், சிஷ்ட பரிபாலனம்போல், இந்தத் தீராத விளையாட்டின் ஓர் அம்சமே. இன்றும் இந்த விளையாட்டு இடையறாது நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இந்தத் தீராத விளையாட்டு, நமது காலத்தில் உலகத்தை நரகமாக்கும் அசுர சக்திகளையும் எப்படியாவது திருத்திவிடும் அல்லது தீர்த்துவிடும். நோயைத் தீர்த்து நோயாளியை இரட்சிக்கும் என்பது உறுதி.

வயிற்றில் இடமும் இருக்கிறது; ஜீர்ண சக்தியும் இருக்கிறது! தீராத விளையாட்டில் தீராத காதலும் இருக்கிறது; அவனுக்குந்தான், நமக்குந்தான்.

இப்போது பாடிப் பாருங்கள் இந்தப் பாட்டை:

ஆழ்கடல்சூழ் வையகத்தார்
ஏசப்போய், ஆய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்த
தயிர்உண்டான் காணேடீ!
தாழ்குழலார் வைத்த
தயிர்உண்ட பொன்வயி(று),இவ்
ஏழ்உலகும் உண்டும்
இடம்உடைத்தால்! சாழலோ.

Koviloor Digital Library

(வையகத்தார் - உலகத்திலுள்ளவர். ஆய்ப்பாடித் தாழ்குழலார் - கோகுலத்திலுள்ள பெண்கள். இடம் உடைத்து - இடம் உடையது.)

மேலே சொன்ன சிந்தனைகளைத் தத்துவ கலா ரஸிகர்களின் உள்ளத்தில் எழுப்பக்கூடிய பாசுரம் இது.

இப்பாட்டிலே திருமங்கையாழ்வாருக்கு ஆத்ம சோதனையின் பயனாகக் கிடைத்த அனுபவம் ஒன்றைக் காணலாம். கண்ணொளியின்றி இயற்கை யழகுகளை நாம் கண்டு களிக்க இயலுமா? அகக்கண் இன்றி அதி சூட்சுமமான சமய உண்மைகளைக் கண்டு அநுபவிக்கவும் இயலாது. திருமங்கையாழ்வார் கண்ணனது அருளையே உட்கண்ணாக இசைத்துக்கொண்டு சமய உண்மைகளை ஆராய்ந்து பார்த்தவர்.

அருள் விருந்து

பர்சாத்தாபக் கண்ணீர் வடித்துத் தம்மைத் தூய்மை செய்து கொண்டபின், குறிக்கோள் ஒன்றும் இல்லாமல் தம் வாழ்க்கை கழிந்துகொண்டிருக்கிறதே என்று வருந்தினார். இறைவனோடு உறவு கொள்வதுதான் திசை தெரியாமல் அலைந்துகொண்டிருக்கும் ஆத்மாவுக்கு ஒரு நல்வழி காட்ட உதவும் என்று நம்பினார். கண்ணனை இஷ்ட மூர்த்தியாகக் கொண்டு உறவுகொள்வது நமக்கு எளிதெனக் கண்டார்.

பண்டித பாமர ரஞ்சகமான கிருஷ்ண லீலைகளில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். வெண்ணெயும் தயிரும் திருடியுண்ட கள்வன் அன்பர்களின் உள்ளங்கவர் கள்வனாக வும் இருப்பதை தம் பக்தி அநுபவத்திலே கண்டுகொண்டார்.

பக்திஅநுபவம் அதிகரிக்க அதிகரிக்க, ஸ்ரீகிருஷ்ண லீலைகளின் உட்பொருளும் தத்துவப் புதையல்களும் மேலும் மேலும் தெளிவாகத் தொடங்கின. பகுத்தறிவைக் கடந்தது பக்தி. ஆனால் பகுத்தறிவை மறுப்பதன்று; மறப்பதன்று; மறைப்பு தனது என்ற உண்மையையும் தம் அநுபவத்தால் கண்டறிந்தார்.

Koviloor Digital Library

தம் உணர்ச்சிகளையெல்லாம் புருஷோத்தமனான கண்ணன்பால் செல்லவிட்டார். கண்ணனைக் காதலனாகக் கண்டார்; தாயாகவும் தந்தையாகவும் கண்டார். குருவாகக் கண்டார்; குழந்தையாகவும் கண்டார். கண்ணன் காதல் என்ற பெருவழியிலே நடந்தார்; பிறருக்கும் வழி காட்டினார்.

'நல்லது கெட்டது நாம் அறியோம்; பாரத்தை அவன்மீது சுமத்திவிட்டு, அவன் அருள்வழியே போய்க் கொண்டிருப் போம், போய்ப் பணி செய்துகொண்டிருப்போம்' என்ற நிலை யில் வாழ்க்கை நடத்திவந்தார். இந்த வாழ்க்கை முறையில் கடுந்தவங்களுக்கோ நோன்புகளுக்கோ இடமில்லை; கிருஷ்ணபக்தி ஒன்றிலேயே உள்ளம் ஓடிக் கொண்டிருந்தது.

இந்தக் கிருஷ்ணபக்தி இதயத்தில் ஊறி ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்துவிட்டது; உடம்பின் ஒவ்வோர் அணுவுக்கும் அணுவாயிற்று. இந்த நிலையில் 'உண்ணும் உணவும் பருகும் நீரும் சுவாசிக்கும் காற்றும் எல்லாம் கண்ணன்; கண்ணனே' என்ற உணர்ச்சி உறுதிப்பட்டது.

வெண்ணெயுண்ட வயிறு மண்ணையுண்டதும், தயிருண்ட பொன் வயிறு உயிர்களையும் உலகங்களையும் பட்சிப்பதுபோல் இரட்சிப்பதும் ஆகிய திருவிளை யாடல்களையும், பகவானுடைய வேறு திருவிளையாடல் களையும் நினைத்து நினைத்து நெஞ்சுருகிப் பாடினார். தமக்குக் கிடைத்த அமைதியும் ஆறுதலும் பிறருக்கும் கிடைக்கவேண்டும் என்ற ஆசை அதிகரிக்கவே, பாடல்கள் பெருகி வெள்ளமிட்டன.

இந்தப் பாடல்களில் இப்பெரியாரின் பக்தி வாழ்வு - ஆத்ம சரிதம் - தெளிவாகக் காணப்படுகிறது. இவர் புசித்த அருள் விருந்தை நாமும் இப்பாடல்களில் புசித்து நமது ஆத்ம தாபத்தையும் ஒருவாறு போக்கிக்கொள்ள முயலலாம்.

ஜீவநாதம்

'ஆழ்கடல் சூழ் வையகத்தார்' என்று தொடங்கும் பாசுரம் திருமங்கையாழ்வாரின் சிறந்த பாசுரங்களில் ஒன்று.

Koviloor Digital Library

இவர் பாடிய கிருஷ்ண பக்திப் பாடல்களில் இதற்கு ஒரு நல்ல இடம் உண்டு. பக்தி மதத்தின் அடிப்படையான தத்துவம் ஒன்றை எவ்வளவு வசீகரமாக வெளியிடுகிறது அப்பாசுரம்!

இறைவன் ஊழிக்காலத்திலே எல்லாவற்றையும் தன் வயிற்றிலே வைத்துக் காப்பாற்றுகிறான் என்ற புராண கதையோடு, குழந்தைக் கண்ணன் உறிகளில் ஆய்ச்சிமார் வைத்திருந்த தயிரைக் களவாடியுண்ட புராண கதையையும் பிணைத்து எவ்வளவு அ்ரிய பெரிய தத்துவப் புதையலை நமக்கு எடுத்துக் காட்டுகிறார் திருமங்கையாழ்வார்!

இறைவன் திருவயிற்றிலே தயிருக்கு இடமுண்டு; தரணியிலுள்ள பொருள்களுக்கெல்லாம் இடமுண்டு; பக்தர்களுக்கு இடமுண்டு; துறவிகளுக்கும் இடமுண்டு; புலனடக்கம் இல்லாதவர்களுக்கும் இடமுண்டு. ஆஸ்திகர் களைப்போல் நாஸ்திகர்களுக்கும் இடமுண்டு. என்ன விசாலமான வயிறு! என்ன பெருங்கொள்கை இது!

பக்திமதம் எவ்வளவு பெரிய நம்பிக்கை மதமாக விசுவரூபம் எடுத்திருக்கிறது இந்தச் சிறு பாட்டிலே! பகவானுக்குக் காமுகராக வாழ்ந்த திருமங்கையாழ்வாரின் வாழ்க்கைக்கும் வாக்கிற்கும் உரியதொரு ஜீவநாதத்தை இதில் கேட்கிறோம்.

இந்த ஜீவநாதம் எத்தனை பாசுரங்களில் எப்படி யெல்லாம் தன்னை வெளியிட்டுக் கொள்கிறது! எத்தனை கற்பனைகளில், கதைகளில், நாடகத் துணுக்குகளில், இயற்கை வருணனைகளில் ஒலிமிக்க செஞ்சொற்கோவைகளில் இந்த ஜீவநாதத்தைக் கேட்டுப் பரவசமாகிறோம்!

இவர் காட்டும் இறைவனின் தீராத அருள்விளை யாட்டிலே இருள் சூழ்ந்த நமது வாழ்க்கைப் புதிருக்கும் பொருள் கிடைக்கக்கூடும்.

Koviloor Digital Library

2. கணவனைத் திருத்திய காதலி

நடனம் பார்த்துக்கொண்டிருக்கிறார் அரசர். திருவெள்ளக் குளத்துக் கோவிலைச் சேர்ந்த அரங்க மேடையில்தான் அவள் நாட்டியம் ஆடுகிறாள்; அவள் மேடைக்கு நடந்து வந்த அந்த நடைட்யே இவர் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது.

நடந்தது கிடந்த(து), என்
உள்ளம் நண்ணியே

என்று சீதை ராமனது நடையழகில் ஈடுபட்டாளாம். அந்த விதமாக அரசரும் குமுதவல்லியின் நடையழகிலே ஈடுபட்டார்.

அந்த நடையையும் நடிப்பின் ஒரு பகுதியாக்கிக் கொண்டவள்போல் வந்து அரங்கமேடையிலே நின்ற அந்த நிலைதான் என்ன? ஒரு ராணியின் மாட்சிக்குச் சிறிதும் குறைவில்லாத மாட்சியுடன் நின்றாள் அழகு ராணி. அவள் தமது உள்ளத்திற்குள்ளேயே நடந்து வந்துவிட்டதுபோலவும், அவளைத் தன் இதய சிம்மாசனத்திலேயே தாம் கொலு வீற்றிருக்கச் செய்தது போலவும் அரசர் ஒரு பகற் கனவும் கண்டார்.

கிண்கிணிகள் 'கிண்கிண்' என்று ஒலிக்க நாட்டியம் தொடங்கியதுமே அரசர் விழித்துக்கொண்டார். தமது அனுமதியுடன் இதய சிம்மாசனத்திலிருந்து இறங்கி மறுபடியும் அரங்கமேடை ஏறித் தமக்காகத் தம்மீது கொண்ட உணர்ச்சிகளையே அப்படி ஆடிக் காட்டுகிறாளோ?

எத்தனையோ நடனங்களை ஏற்கனவே பார்த் திருக்கிறார், நடன சூட்சுமங்களை ரஸித்தும் அநுபவித் திருக்கிறார். அப்போதெல்லாம் நடிகையை மறந்து

Koviloor Digital Library

நடனத்தையே பார்த்து ரஸித்தார். ஆனால் இப்பொழுதோ நடனக்கலையே உருவெடுத்து வந்து ஆடுவதுபோல் அல்லவா தோன்றுகிறது!

தெய்வ பாஷையில் காலட்சேபம்

சபை ஒரே நிசப்தமாய், எங்கும் கண்களாய், எங்கும் காதுகளாய் நடன இன்பத்தைப் பருகிக்கொண்டிருக்கிறது. அரசருக்கோ அந்தச் சபை ஒரு தேவசபையாகி, அவளும் ஒரு தேவகன்னிகையாகி நடம்புரிவது போலவும், அந்தக் காட்சியைத் தாம் தேவாமிர்தத்தைப் பருகி வெறிகொள்வது போல் அநுபவிப்பதுபோலவும், ஓர் ஆச்சரிய பரவச உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

'பாஷையால் இப்படியெல்லாம்பேச முடியுமோ? அபிநயம் தெய்வ பாஷைதான்!' என்று எண்ணமிடுகிறார். அந்தப் பொன்மேனியின் ஒவ்வொரு சலனமும் ஒரு கவிதை போலத் தோன்றுகிறது, கவியரசாகவும் பேர் பெற்றிருக்கும் இந்த அரசருக்கு.

இசைத் தென்றலில் அசைந்தாடும் பூங்கொடியாகக் காண்கிறாள் ஒரு சமயம்; இசைந்து கூத்தாடுகிறது இந்த ரஸிகர் உள்ளமும். பூங்கொடி பளிச்சென்று பேருணர்ச்சி வசமாகி மின்னற்கொடியாக ஜொலிக்கிறது; கண்ணைப் பறிக்கும் அந்த அழகு இவர் கருத்தையும் பறித்துக்கொள்கிறது.

குரலின் இனிமையைத்தான் எப்படி வியந்து அநுபவிக்கிறார்! 'இதுவோ தேவ கானம்! இத்தகைய இசையில் பாடி நாமும் தமிழைத் தெய்வத் தமிழாக்க வேண்டும். இந்த ஆசை நிறைவேறுமா?' என்று தமக்குள் தாமே சொல்லிக் கொள்கிறார்.

புல்லாங்குழல் போலக் கொஞ்சுகிறது குரல். கிருஷ்ண லீலை ஒன்றை அபிநயித்துக் காட்டுகிறாள். கண்ணனுடைய ஒரு குழந்தை விளையாட்டு.

வெண்ணெய் திருடி அலுத்துப்போனவன் தயிரைத் திருடி உண்ண ஆசைப்படுகிறான். கண்ணனுடைய

Koviloor Digital Library

வெண்ணெய் களவே ஆய்ப்பாடி எங்கும் பேச்சும் ஏச்சுமாக இருக்கிறது. ஆய்ச்சிமார் இவனுக்கு எட்டாத உயரத்தில் உறிகளைக் கட்டி, அந்த உறிகளில் வைத்திருந்த தயிரையும் எப்படியோ எட்டித் திருடிச் சாப்பிட்டுவிடுகிறான் என்றால் ஏச்சு அதிகப்படாதா?

'எவ்வளவு தயிரைச் சாப்பிட்டுவிட்டாய், கண்ணா? உனக்கு ஜீர்ணமாகாதே!' என்றுதான் யசோதைத் தாய் கவலைப்படுகிறாள். அதற்குக் கண்ணன் கண்ணையும் முகத்தையும் சுழற்றிக் கொண்டு, ''எனக்கா ஜெரிக்காது? வயிறு நிறையவே இல்லையம்மா! எவ்வளவு இடம் இருக்கிறது!'' என்று தன் வயிற்றைத் தொட்டுக் காட்டி இளநகை யரும்புகிறான்.

தாயும் புன்னகை புரிந்து, ''கள்ளப் பயலே! வா இங்கே! உன் களவைக் கண்டுபிடித்துவிட்டேன்; உன்னை அடிக்கப் போகிறேன் பார்!'' என்று கையை ஓங்குகிறாள். ''கண்டு பிடிக்க முடியாதம்மா! ஆரும் கண்டுபிடிக்க முடியாது!'' என்று சொல்லிக்கொண்டே கண்ணன் ஓடுகிறான்.

இந்தக் கிருஷ்ண லீலையைத்தான் எவ்வளவு அழகாய், எவ்வளவு பொருத்தமாய் அபிநயித்துக் காட்டிவிடுகிறாள் குமுதவல்லி! 'இந்த ஆட்டம், இந்த அபிநயம், இந்தக் கற்பனைத்திறன் எல்லாம் என் பாட்டில் அமைந்தால் அது தெய்வத் தமிழாகிவிடுமே' என்று நினைக்கிறார் அரசர்.

சில காதற்காட்சிகளையும் நடித்துக் காட்டுகிறாள் குமுதவல்லி. சீதையும் ராமனும் சந்தித்துக் காதலிப்பதாகவும், ராமன் காதலியைச் சந்திக்க வரும்போதும் லட்சுமணனுடன் வரவே சீதை நாணத்துடன் ஒன்றும் சொல்லாமல் இருந்து விடுவதாகவும், ராமன் தன்னுடைய தம்பியுடன் திரும்பிப் போனதும் சீதை தோழியுடன் தன் வருத்தத்தைத் தெரிவிப் பதாகவும் ஒரு காட்சியை நடித்துக் காட்டுகிறாள் நடிகை.

கோபிகா ரமணிகளின் காதலும் ஊடல்களும் அபி நயித்துக் காட்டப்படுகின்றன. காதலைப் பக்தியாக்கிப்

Koviloor Digital Library

பக்தியையும் காதலாக்கி நவரஸ பாவங்களுடன், 'இப்போது தான் இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நம் கண்முன் நடைபெறு கின்றனவோ!' என்று சபை பிரமிக்குமாறு இசையாலும் விழிகளாலும் சைகைகளாலும் அவற்றையெல்லாம் உயிர்ப்பித்துக் காட்டுகிறாள்.

'முடிவில்லாத ஒரு நாட்டியம் முடிவில்லாததொரு நடன அரங்கிலே நடைபெறுகிறதோ!' என்று தோன்றுகிறது அரசருக்கு. ஆனால் திடீரென்று முடிந்துவிடுகிறது நடனம். சபையோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார்கள். அரசர் திடுக்கிட்டு ஒரு நீண்ட பேரானந்தக் கனவிலிருந்து விழித்துக் கொண்டது போல் புறவுலகின் உணர்ச்சி பெறுகிறார்.

இவரை 'ரஸிக உலகிலும் ஓர் அரசர்' என்று தெரிந்து கொண்டாள் குமுதவல்லி. 'சிற்றரசராயினும் பேரரசர்களும் வியந்து பாராட்டும் பராக்கிரமசாலி அவர். கலையுலகிலும் கல்வியுலகிலும் உண்மையாகவே ஒரு பேரரசர்!' என்று ஒரு தோழி, குமுதவல்லிக்குத் தெரிவிக்கிறாள்.

அன்னங்கள் சூழ அன்னங்களின் ராணி ஒய்யாரமாக அடியிட்டுப் போவதுபோல் குமுதவல்லி போய்விட்டாள். எனினும் அவள் இவர் நெஞ்சைவிட்டுப் போய்விடவில்லை. இவர் அவள் யார் என்பது குறித்து விசாரித்துச் சில விவரங்களைத் தெரிந்துகொண்டார்.

குமுதவல்லியின் கதை

'அவள் பாகவதரான ஒரு வைத்தியர் வீட்டுப் பெண். இந்த ஊருக்கு அந்த வைத்தியர் கொஞ்ச காலத்திற்கு முன்புதான் வந்து சேர்ந்தார்' என்று ஒருவன் அரசரிடம் தெரிவித்தான். 'அந்தக் குடும்பத்திலே பக்தி அதிகம்; அவர்கள் அநாவசியமாகக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை; ஊர் வம்பு, உலக வம்புகளில் ஈடுபடுவதில்லை' என்றும் சொன்னான்.

'அவர் பாகவதர்களோடு பொழுது போக்குவார்; அவள் சிறந்த நடிகையாக இருந்தும் அரசர்களின் அரண்மனை

Koviloor Digital Library

களிலோ பிரபுக்களின் மாளிகைகளிலோ போய் ஆடுவதில்லை; ஈசுவர சந்நிதிகளில்தான் ஆடுவாள்' என்று ஒருவன் செய்தி சொன்னான். 'அந்த ஆட்டங்களிலும் அபிநயங்களிலும் பக்தி பரிமளிக்கிறது; தெய்வ ஒளி வீசுகிறது' என்று அரசரும் ஒப்புக்கொண்டார்.

குமுதவல்லி அந்த வைஷ்ணவ வைத்தியரின் சொந்தப் புதல்வி இல்லை என்று ஒருவன் சொன்னபோது அரசர் சற்று வியப்புடன், 'அப்படியானால் சுவீகார புத்திரியா?' என்று கேட்டார். அது குறித்து ஒரு கதையையும் சொன்னான் அவன்.

பல ஆண்டுகளுக்கு முன் நடந்ததாம் அந்த நிகழ்ச்சி. ஒரு தாமரைப் பொய்கைக்குப் பக்கத்திலே ஒரு குழந்தை காணப்பட்டது, குமுதமலரும் கையுமாக. குழந்தையில்லாத வைத்தியர் அந்தக் குழந்தையைக் கண்டதும், 'பகவானது அருளால் மலடு நீங்கப்பெற்றேன்' என்று நெஞ்சு குளிர்ந்து, குழந்தையை எடுத்துக் கொண்டுபோய்த் தமது சொந்தப் புதல்வி போலவே வளர்த்து வருகிறார். குமுத மலருடன் காணப்பட்டதால் குமுதவல்லி என்று பெயரிட்டிருக்கிறார்.

அந்தக் குமுதமலரைக் குறித்தும் அவன் ஓர் அதிசயக் கதை சொன்னான். அந்தத் தாமரைப் பொய்கைக்குப் பக்கத்திலுள்ள பூஞ்சோலை அபூர்வ அழகு வாய்ந்தது. அந்த அழகை அநுபவிப்பதற்காகத் தேவலோகத்துக் கற்பகச் சோலையிலிருந்துகூடத் தெய்வப் பெண்கள் இறங்கி வருவார்களாம். அவர்களில் சிலர் ஒரு விமானத்தில் வந்திறங்கிப் பூக்கொய்து கொண்டிருந்தபோது, ஒருத்தி புறப்பட வேண்டிய சமயத்தையும் மறந்து குமுதமலர் கொய்வதில் ஈடுபட்டிருந்தாளாம். மற்றவர்கள் அவளை மறந்துவிட்டு விமானம் ஏறிப் போய்விட்டார்களாம்.

இப்படி அவன் கதை சொன்னதும் அரசர் இள நகையரும்பி, 'அந்தத் தெய்வப் பெண்ணே குழந்தையாகிக் குமுத மலரும் கையுமாக வைத்தியருக்குப் புதல்வியாகி விட்டாளோ!' என்று கேட்டார். அதற்கு அவன், 'அப்ஸரஸ்

Koviloor Digital Library

ஆனதால் தானே இப்படிப் பிரமிக்கத்தக்க நடனத் திறமை ஏற்பட்டிருக்கிறது!' என்று பதில் சொன்னான்.

அரசர் சொன்னார் : 'அந்த வைத்தியருக்கு எப்போதும் பாகவதர்களின் தோழமை உண்டென்று சொல்லு கிறீர்களே. அவர் வீட்டுக்கு எத்தனையோ பக்தர்கள் வந்து போவார் களல்லவா? அவர்களுடைய ப்ஜனைகளுக்கும் காலட் சேபங்களுக்கும் இடையே வளர்ந்ததால் அந்தப் பெண்மணிக்கும் பக்தி ஏற்பட்டிருக்க வேண்டும். இயற்கை மேதையாலும் தக்க பயிற்சியாலும் நடனக்கலையிலும் தேர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். மேகத்தைக் கண்டு மயில் ஆடுவதுபோல் பகவான் என்ற நீலமேகத்தைத் தரிசித்து அவளும் தன் பக்திக் காதலை நாட்டியத்தால் வெளியிட்டிருக்க வேண்டும்.

'நாட்டியத்தை ஒரு தெய்வக்கலை யாக்கிவரும் இவள் ஒரு தெய்வப் பெண்ணாகத்தான் இருக்கவேணும்' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்டு அரசர் அரண்மனைக்குத் திரும்பினார். அன்றிரவு குமுதவல்லியின் அற்புத நடனத்தை யும், அவளைக் குறித்துத் தாம் கேள்விப்பட்ட கதைகளையும் குறித்து மனோராஜ்யம் செய்துகொண்டேயிருந்தார்.

'நம்முடைய உள்ளமே அவளது நடனக்காட்சிகளில் ஈடுபட்டு எத்தனை கற்பனைகளைச் செய்துகொண்டிருந்தது! சாமானிய ஜனங்கள் கற்பனைக் கதைகளிலே மயங்கிப் போவதில் என்ன அதிசயம் இருக்கமுடியும்!' என்று எண்ணினார்.

கனவும் கல்யாணமும்

'சிலம்பு ஆர்க்க வந்து தெய்வமகளிர்கள் ஆடும் சீர்' உள்ள அந்தப் பொய்கையும், அதன் கரையிலுள்ள பூஞ்சோலை யும் அடிக்கடி நினைவிறகு வந்தன. அப்ஸரசுகள் பூக் கொய்வதும், அவர்களில் ஒருத்தி குமுதமலர் கொய்வதும் இவர் கண்முன் நிகழலாயின.

Koviloor Digital Library

மற்றவர்கள் இவளை மறந்து தனித்திருக்க விட்டுவிட்டு விமானமேறி ஆகாய மார்க்கமாய்ப் போய்விடுவதையும் பார்த்துவிடுகிறார். குமுத மலரும் கையுமாயிருக்கும் அந்த மங்கையர்க்கரசியை, 'ஐயோ, தனித்து நிற்கிறாளே!' என்ற எண்ணத்துடன் அவசரமாகத் தாமே அணுகிச் சென்று, 'நீ யாரம்மா?' என்று கேட்கிறார்.

'அந்த வைஷ்ணவ வைத்தியர் வருவதற்குள்ளே நாம் போய் யோக க்ஷேமம் விசாரிக்கவேணும்' என்று தோன்றுகிறது இவருக்கு. ஆம்; அவர் வருவதற்கு முன் - அவள் குழந்தையாகி அவருக்குப் புதல்வியாவதற்குமுன்!

திவ்யரூபத்தோடு காட்சியளித்த அந்த மங்கை தன் பெயரை இவரிடம் குமுதவல்லி என்று தெரிவித்துக் கொள்ளாமல் தன்னை, 'மங்கை' என்றே அறிமுகப் படுத்திக் கொள்கிறாள். 'திருமங்கை என்ற அப்ஸரஸா நீ?' என்கிறார் திருமங்கை மன்னன். ஆம், இந்த அரசர் திருமங்கை மன்னனேதாம்.

அவள் விழிகாட்டி வழிகாட்டித் தம்மை எப்படியோ அழகும் இசையும் கலந்த ஒரு புதிய உலகத்திற்கு அழைத்துக் கொண்டுபோகிறாள். அங்கே தன் மாய வித்தையால் இவருக்கு ஓர் அற்புதமான புதை பொருளைக் காட்டுகிறாள்.

'என்ன அதிசயம்! கனவு காண, நான் உறங்கவும் இல்லையே' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொள்கிறார் திருமங்கை மன்னன். பொழுது புலர்ந்தது. 'மாறனார் வரி வெஞ்சிலைக்கு ஆளாவதா?' என்ற எண்ணமும் உண்டாகிறது.

'நின்றவா(று) நில்லா' நெஞ்சினை உடையராய்த் தம் தோழர்களை நோக்கி, ''நீங்கள் அந்த மருத்துவரைச் சந்தித்து அவளை எனக்கு மணம் செய்விக்கவேண்டும்'' என்றார். அவர்களும் உடனே அந்தப் பாகவதரின் அகம் புகுந்து திருமங்கை மன்னனின் உள்ளத்தை உணர்த்தினார்கள்.

Koviloor Digital Library

திருமங்கையைத் திருமங்கை மன்னனுக்கு மணம் செய்து கொடுப்பதே பொருத்தம் என்றார்கள்.

அதற்கு அந்த வைத்தியர், ''நான் சம்மதித்தால் போதுமா? என் பெண்ணின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டாமா?'' என்று பதில் சொன்னார். அப்போது குமுதவல்லி அங்கு வந்து தன்னுடைய தந்தையிடம் ரகசியமாகப் பேச விரும்புவதாகச் சைகை காட்டினாள்.

வைத்தியர் தமது புதல்வியுடன் போய்ச் சற்று நேரத்தில் திரும்பிவந்தார். வந்தவர் திருமங்கை மன்னனின் தோழர்களை நோக்கி, ''என் மகள் ஒரு பாகதரையே மணந்துகொள்ள விரும்புகிறாள்; மன்னரை மணந்துகொள்ள விரும்பவில்லை'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். அவர்கள் திரும்பிவந்து திருமங்கை மன்னனிடம் செய்தி சொன்னார்கள்.

பிறகு திருமங்கை மன்னன் தாமே புறப்பட்டார். பாகவதர் அகம் புகுந்து அவருடன் இடைகழியில் உரையாடிக் கொண்டிருக்கும்போதே, குமுதவல்லி தன் தோழி ஒருத்தி யுடன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

நடனம் செய்தபோது அணிந்துகொண்டிருந்த ஆடையோ ஆபரணமோ இப்போது அவளை அணி செய்ய வில்லை. 'அதனால் அழகு குறைவதற்கு மாறாக அதிகரித் திருக்கிறதே!' என்று அதிசயித்தார்.

அவளோ இவரைக் கண்டதும் தன் தோழியை நோக்கினாள். அந்தத் தோழி குமுதவல்லியை நோக்கி, ''ஆம், நேற்று நாம் கோவிலில் பார்த்தவர்தாம். இவரது கீர்த்தி செவிக்கு இனியது; அழகு கண்ணுக்கு இனியது'' என்று காதோடு காதாய்ச் சொல்லிக் குறும்பாகச் சிரித்தாள்.

அதற்குக் குமுதவல்லியும் தோழி காதில், ''அது தெரியும் அம்மா! அதற்குள்ளே மறந்துவிடுவேனா? உத்தம பக்தரல்லவா என் கண்ணுக்கும் இனியர், செவிக்கும் இனியராவார்?'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டாள். பிறகு அவர்கள் இருவரும் அங்கிருந்து போய்விட்டார்கள்.

Koviloor Digital Library

அவர்கள் பேசியதில் ஒன்றும் திருமங்கை மன்னன் காதில் விழவில்லை. ஆனால் தோழியின் சிரிப்பையும் குமுதவல்லியின் முகவாட்டத்தையும் அலட்சியமான பார்வையையும், வைத்தியருடன் பேசிக்கொண்டிருக்கும் போதே கவனித்தார். தம்மை விஷ்ணு பக்தராக அவர்கள் மதிக்கவில்லை யென்பதை உடனே ஊகித்துக்கொண்டார்.

பாகவதர் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு முன்பே திருமங்கை மன்னன் தமக்கு அவசர வேலை ஒன்று இருப்பதாகச் சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டார். உடனே திருநறையூருக்கு விரைந்து சென்றார். திருநறையூர் நம்பி திருமுன்பு நின்று ஒரு பிரார்த்தனை செய்துகொண்டார்.

'தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்தரு சக்கரத்தின் கோயில் - பொறியாலே ஒற்றுண்டு' என்று சொல்லுகிறபடி வைஷ்ணவ முத்திரை தரித்துக்கொண்டார். திவ்யமாகத் திருமண் காப்பு அணிந்து, தாமரை மணி, துளசி மணி தரித்து, வைஷ்ணவக் கோலத்துடன் வந்து நின்றார். மறுபடியும் திருநறையூர்ப் பெருமான் திருமுன்பு.

அந்த அர்ச்சாவதார மூர்த்தியின் திருமுக மண்டலத்தை நோக்கினார். 'இவ்வளவு சீக்கிரமாக எவ்வளவோ அருமையான வைஷ்ணவப் பிறவி எடுத்துவிட்டீரே!' என்று பெருமாளின் திருமுகத்திலே ஒரு குறும்புப் புன்னகை அரும்பியது போலத் தோன்றியது.

'சுபஸ்ய சீக்ரம்' - சுபமான காரியம் சீக்கிரமாக நடைபெற வேண்டியதுதானே; அவளோடு கல்யாண மேடையில் வீற்றிருக்கக் கூடுமென்றால் எதுதான் அரிது?' என்று பகவானை நோக்கி விண்ணப்பம் செய்துகொண்டார் திருமங்கை மன்னன். பகவானை வணங்கிவிட்டு அங்கிருந்து குமுதவல்லியின் சுவீகாரத்தந்தையிடம் விரைந்து திரும்பினார்.

வைத்தியரையும் குமுதவல்லியையும் கண்டார். ''நான் வைஷ்ணவக் கோலத்துடன் திருநறையூர்ப் பெருமாளை

Koviloor Digital Library

ஆராதித்து வந்திருக்கிறேன். என்னிடம் நீங்கள் இனி என்ன குறை காண்பீர்கள்?'' என்று கேட்டார், கம்பீரமாக நிமிர்ந்து நின்று.

குமுதவல்லியோ, ''பெருமாளை ஆராதிப்பது சிறப்புடையதே; அதைக் காட்டிலும் சிறப்புடையது பாகவதர்களை ஆராதிப்பது'' என்றாள். உடனே திருமங்கை மன்னன், ''இனி நான் பகவானுடைய அடியார்களான பாகவதர்களையும் ஆராதிப்பேன்'' என்றார்.

குமுதவல்லி இவரை நோக்கி, ''இனி நீர் ஏழைகளான ஆயிரத்தெட்டுப் பாகவதர்களை ஓராண்டாவது அமுது செய்வித்து வரவேணும், அப்படியானால் நான் உம்மைக் கணவராக அங்கீகரிப்பேன்'' என்றாள். இப்படிச் சொன்னவளுடைய கண்களையும் முகத்தையும் உற்று நோக்கினார் திருமங்கை மன்னன்.

''இதற்கும் இசைகிறேன்'' என்று சொல்லித் திருமங்கை மன்னன் விடை கொண்டு போனார். அப்படியே ஒரு வருஷ காலம் பாகவத கைங்கரியம் செய்து திரும்பி வந்து, வைத்தியரையும் அவர் திருமகளையும் நோக்கி, ''இனி இதே பாகவத கைங்கரியத்தை நித்திய நியமமாகக் கொண்டு விட்டேன்'' என்று உறுதி கூறினார்.

அப்பால் ஊரும் நாடும் அறியக் குமுதவல்லியென்ற திருமங்கையின் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. 'குமுதவல்லி மணவாளர் வாழ்க! திருமங்கை மணவாளர், வாழ்க' என்று எல்லாரும் திருமங்கை மன்னனை வாழ்த்தினார்கள்.

Koviloor Digital Library

3. மணலைத் திரட்டி மரக்காலிலிட்டு அளந்தது

குமுதவல்லி மணவாளர் தம் காதலியின் விருப்பத்திற்கு இணங்கத் திருமாலின் தொண்டர்களுக்கு அறுசுவை அடிசில் அளிப்பதையும், வேண்டிய பணிகள் புரிந்து அவர்களை மகிழ்விப்பதையும் விரதமாகக் கொண்டு தம்முடைய செல்வங்களைத் தாராளமாகச் செலவழித்தார். தமது சொத்துக்களெல்லாம் இந்த விரதத்தில் விரயமான பின்பும் அடியவர் பணியைத் தொடர்ந்து நடத்த விரும்பினார்.

இவர் சோழமன்னனுக்கு அடங்கிய ஒரு சிற்றரசர். அவனுக்குக் கட்டவேண்டிய பகுதிப் பணங்களையும் பாகவதர்களுக்கே செலவு செய்துவிட்டார். அது குறித்துச் சோழன் விசாரணை செய்தான். ஏழை அடியார்களுக்குக் கொடுத்துக் கொடுத்துத் திருமங்கை மன்னன் ஏழையாகி விட்டதாகத் தெரியவந்தது.

சிறைப்பட்டார்!

சோழ பூபதிக்குக் கோபம் பொங்கியது. 'இவ்வளவு பொறுப்பற்ற ஒருவனிடம் நமது ராஜ்யத்தின் ஒரு பகுதிக்கு உரிய ஆட்சியைக் கொடுத்தோமே!' என்று கவலைப்பட்டான். 'பகுதிப் பொருளை உடனே கொடுக்கவேண்டும்' என்று நிர்ப்பந்தித்தான்.

திருமங்கை மன்னனோ, ''என்னிடம் பொருள் ஏது? நான் மேற்கொண்டிருக்கும் அன்பர் பணிக்கே இன்னும் எவ்வளவோ பொருள் தேவையாக இருக்கிறதே!'' என்று சொல்லிவிட்டார். சோழனுக்குக் கோபம் அதிகரித்தது.

Koviloor Digital Library

அவன் தன் படைத்தலைவன் அழைத்து, ''நீ போய் அந்த நீலனை (திருமங்கை மன்னனின் இயற்பெயர் இது)க் கைப்பிடியாகக் கொண்டுவரவேண்டும். அவனுடைய அரண்மனையிலுள்ள பொருள்களையெல்லாம் விற்று அவன் கட்ட வேண்டிய பகுதிப் பணத்திற்கு ஈடு செய்துகொள்ள வேண்டும்'' என்று சொன்னான். படைத் தலைவன் நால்வகைப் படைகளையும் கூட்டிக்கொண்டு திருமங்கை மன்னனுடைய நகரமாகிய திருவாலி திருநகரியை நோக்கிப் புறப்பட்டான்.

இத்திருநகரியை அடைந்ததும் தன் படைகளை அணிவகுத்து வளைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தான். ஆனால் திருமங்கை மன்னன் 'ஆடல்மா' என்ற தம் குதிரைமீது ஏறிக்கொண்டு, வாள் வலியும் வேல் வலியும் தோள் வலியும் தோன்றப் போராடிச் சோழனுடைய சேனைகளைத் துரத்தி விட்டார்.

பிறகு சோழனே படையெடுத்து வந்தான். அவன் தந்திரமாக இவரைப் பிடித்துக் காவலுக்கு உட்படுத்தினான். இவரைச் சோழன் இவர் உகந்த திருநறையூர் நம்பியின் கோயிலிலேயே சிறைப்படுத்தி வைத்தான்.

பசிக்கு உணவும் கொடுக்காமல் இவரைச் சோழ கிங்கரர்கள் ஹிம்ஸிக்கத் தொடங்கினார்கள். அந்த நிலையிலும் இவருக்குப் பாகவத கைங்கரியம் நடைபெறாமல் போய் விட்டதே என்ற ஒரே கவலைதான்.

அன்று இரவில் இவர் ஒரு கனவு கண்டார். அதில், ''நீர் காஞ்சி மாநகரத்திற்குச் சென்றால் அங்கே பொருள் கிடைக்கும்; அதைச் சோழனுக்குக் கொடுத்துவிடும்'' என்று யாரோ கூறுவது காதில் விழுந்தது.

அற்புதம் நிகழ்ந்ததாம்

திருமங்கை மன்னன் வைகறையில் எழுந்து சோழ மன்னனின் மந்திரியை நோக்கி, ''நீ என்னுடன் காஞ்சிக்கு

Koviloor Digital Library

வந்தால் உன் அரசனுக்குத் தரவேண்டிய பகுதிப் பொருள் களைக் கொடுத்துவிடுவேன்'' என்றார். 'இவர் திருட்டுத் தனமாகக் காஞ்சீபுரத்தில் சோழ மன்னனுக்கு உரிய பொருள் களைச் சேமித்து வைத்திருக்கிறாரோ?' என்று எண்ணிய மந்திரி, சோழன் உத்தரவு பெற்று இவரைக் காவலுடனே காஞ்சிக்கு அழைத்துச் சென்றான்.

''நீர் ஒப்புக்கொண்டபடியே அந்தப் பொருள் முழுமை யும் செலுத்தப்படவேண்டும்; உடனே அப்படிச் செய்ய வேண்டும். எங்கள் மகாராஜா ஏற்கனவே உம்மிடம் பெருங் கோபம் கொண்டிருக்கிறார்; இனி எங்களையும் கோபித்துக் கொள்வார். மரியாதையாக இப்பொழுதே பகுதித் திரவியங் களையெல்லாம் கொட்டிக் கொடுத்துவிடவேணும்'' என்றான் மந்திரி.

திருமங்கை மன்னனோ பதில் ஒன்று சொல்லாமல் பகவானுடைய திருவடிகளில் தம்முடைய நெஞ்சை ஒப்பித்துக் கண்களை மூடிக்கொண்டிருந்தார். அந்தத் தியான வாசலைத் திறந்துகொண்டு யாரோ முகம் காட்டிக் குரல் காட்டி, வேகவதி தீரத்திலே பொருள் இருக்கும் இடத்தையும் அடையாளத்தோடு காட்டுவது போலத் தோன்றியது.

திருமங்கை மன்னன் சோழனுடைய மந்திரியையும் படைவீரர்களையும் அங்கே அழைத்துக்கொண்டு போனார். அவ்விடத்தில் பூமியைக் கல்லிச் சோதித்துப் பார்த்ததில் பெரும் பொருள் இருக்கக்கண்டார். பகுதித் தொகைக்குமேல் மதிக்கக்கூடிய பொன்னும் மணியும் கிடைத்துவிட்டன.

திருமங்கை மன்னன் பகுதித் தொகையை வட்டி சேர்த்து ராஜ மனுஷ்யர்களிடம் கொடுத்துவிட்டார். ''மிகுதியாயிருந்த திரவியத்தை என்ன செய்யப்போகிறீர்?'' என்று மந்திரி கேட்கத் திருமங்கையார், ''அன்பர் பணிக்காக இறைவன் அருளிய பொருள் இது!'' என்று பதில் சொன்னார்.

Koviloor Digital Library

மந்திரியோ மறுபடியும் பழங் கணக்குகளைப் புரட்டிப் பார்த்து, "நீர் செலுத்தவேண்டிய தனதானியங்களில் தனங்களைச் செலுத்திவிட்டீர், தானியம் எங்கே? சொல்லும், எங்கே மறைத்து வைத்திருக்கிறீர். அதையும் இன்றே இப்போதே கொட்டி அளந்துவிடவேண்டும்" என்று நிர்ப்பந்தித்தான். திருமங்கை மன்னன் மறுபடியும் கண்மூடி மௌனமாகித் தியானத்தில் அமர்ந்தார்.

"அந்தப் பேராசைக்காரனுக்கு ஆற்றின் மணலைத் திரட்டி அளந்துகொடும்!" என்று யாரோ சொல்வதுபோலத் தோன்றியது. "அவர்களுக்குக் கண் இல்லையா?" என்று திருமங்கை மன்னன் மோனக்குரல் காட்ட, "கண் இருந்தும் பார்க்காத குருடர்கள் உலகில் உண்டு" என்று எதிர்க்குரல் பதில் அளித்தது.

திருமங்கை மன்னன், மந்திரி முதலானவர்களை ஆற்றின் வேறொரு பகுதிக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கே மணலைத் திரட்டி, மரக்காலிட்டு அளக்கத் தொடங்கினார். ராஜ மனுஷ்யர்களின் கண்ணுக்கு அந்த மணலெல்லாம் செந்நெல்லாகத் தோற்றம் அளித்தது.

மந்திரி மகிழ்ச்சியடைந்து திருமங்கை மன்னனை நோக்கி, "ஐயா, நீர் சிரமப்படவேண்டாம். எங்கள் வேலையாட்கள் அளந்துகொள்வார்கள். சோழனுக்கு உரிய தானியத்தைக் குறைவில்லாமல் அளக்கவேண்டுமல்லவா?" என்று சொல்லி, ஆசை தீர அவ்வளவு நெல்லையும் கவர்ந்துகொண்டு வண்டி வண்டியாகச் சோழனுக்கு அனுப்பிவைத்தான்.

சோதனையும் வெற்றியும்

'ஏழைத் திருமங்கை மன்னன் எவ்வளவு பொருளையும் தானியங்களையும் மறைத்துவைத்திருந்தார்!' என்று அதிசயமாக மந்திரியும் பிறரும் சோழனிடம் செய்தி சொன்னார்கள்.

Koviloor Digital Library

சோழனுக்கோ கொஞ்சம் பயம் வந்துவிட்டது; 'திருமங்கை மன்னன் சாமானியராக இருக்க முடியாது!' என்றே எண்ண மிடத் தொடங்கினான்.

பிறகு சோழன் இவரை அழைத்து நடந்ததையெல்லாம் விவரமாகத் தெரிந்துகொண்டான். 'ஆபத்திலே பாஞ்சாலிக் குப் புடைவை சுரந்தாற்போல் இவருக்கும் இறையருளால் திரவியம் சுரந்ததுகாண்!' என்று சோழன் தன் மந்திரிகளை நோக்கிச் சொல்லிவிட்டு, ''இந்தப் பொன்னையும் மணியை யும் தானியக் குவியல்களையும் நம்முடைய பொக்கிஷத்தில் சேர்த்துவிடாமல் ஒருபுறமாய் ஒதுக்கி வைத்திருங்கள்'' என்று ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான்.

சோழனுடைய விருந்தாளியாகத் தங்கிய திருமங்கை மன்னன் அந்தச் சோழராஜ சபையில் விசேஷமாய்க் கௌரவிக்கப் பெற்றார். மந்திரிகளோ, 'இவர் ஒரு மந்திர வாதியாக இருக்க வேண்டும்; விரைவில் இவர் கொடுத் திருக்கும் பகுதிப் பொருள்களெல்லாம் மண்ணும் மணலுமாக மாறிவிடும்!' என்றே எதிர்பார்த்தார்கள்.

மாணிக்கவாசகர் கதையிலே சிவபெருமான் அருளால் நரிகள் பரிகளாகி மறுபடியும் நரிகளாகிவிட்டன என்று வருகிற தல்லவா? அப்படியே திருமங்கை மன்னன் செலுத்திய பொருள்களும் மண்ணாகிவிடும், மணலாகி விடும் என்று அமைச்சர்கள் நினைத்தார்கள். ஆனால் பொன்னும் மணியும் தானியக் குவியல்களும் அப்படியே இருந்துவிட்டன.

சோழ மன்னனுக்குத் திருமங்கை மன்னனிடம் பக்தியும் விசுவாசமும் அதிகரித்தன. அந்த மன்னன் இந்த மன்னன் கால்களில் விழுந்து, ''உமக்கு எவ்வளவோ தொந்தரவு கொடுத்தேன். உமது கைங்கரியத்திற்கும் இடையூறு செய்து விட்டேன்; மன்னித்தருள வேணும்'' என்று வேண்டிக் கொண்டான்.

Koviloor Digital Library

''அந்தப் பணம் எங்களுக்கு உதவாது; தங்களுடைய அன்பர் பணிக்கே உரியதாகும்'' என்று சொல்லி அவர் கொடுத்திருந்த பகுதிப் பொருள்களையெல்லாம் அபராத காணிக்கையாகத் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

திருமங்கை மன்னன் விடைகொள்ளும்போது, சோழன் தன்னுடைய பொக்கிஷத்திலிருந்தும் தாராளமாகப் பொருள் களை எடுத்துக்கொடுத்து, ''இவற்றையும் தங்கள் கைங்கரியத் திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். திருமங்கை மன்னனும் இறையருளை வியந்து வாழ்த்திச் சோழனுக்கு ஆசி கூறித் தம் ஊருக்குத் திரும்பி விட்டார்.

திரும்பி வந்ததும் தருமக் கொழுந்தாகிய திருமங்கை மன்னன் கருணைக் கொழுந்தாகிய குமுதவல்லியை நோக்கி, ''திருமங்கையே! நமது கைங்கர்யத்துக்குப் பகவானுடைய கிருபையால் ஏராளமாகப் பணம் கிடைத்திருக்கிறது'' என்று குதூகலமாகத் தெரிவித்தார். அவளோ, ''எல்லாம் இறை வனுடைய சோதனைதான்; அவன் சுகத்தைக் கொடுத்தும் சோதிக்கிறான். துன்பத்தைக் கொடுத்தும் சோதிக்கிறான்!'' என்று பதில் சொன்னாள்.

ஈசுவர சோதனையில் தமது காதலர் முழு வெற்றியும் பெற வேண்டும் என்பது குமுதவல்லியின் ஆசை. கைங் கரியத்தைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருக்க வேணும் என்பதை வற்புறுத்திய வண்ணமாயிருந்தாள். தொண்டு ஒன்றே ஈசுவர சோதனையில் வெற்றி பெறுவதற்கு ஆற்றலும் வசதியும் தரும் என்பது அவள் துணிவு.

★ ★ ★

திருமங்கை மன்னனைப்பற்றிய இந்தக் கதைப்பகுதி பாண்டிய மன்னன் குதிரைகள் வாங்க வேண்டுமென்று கொடுத்து பணத்தை அன்பர் பணிக்குச் செலவிட்டு, அவன் 'குதிரைகள் எங்கே?' என்று நிர்ப்பந்தித்தபோது இறை

Koviloor Digital Library

யருளால் நரியைப் பரியாக்கிய அந்த அச்சிலேதான் வார்க்கப் பட்டிருக்கிறது. பிற்காலத்து முஸ்லிம் நவாப் ஒருவனுக்குச் சேரவேண்டிய பகுதிப்பொருளை, அவனிடம் உத்தியோகம் பார்த்து வந்த ராமதாஸர் என்பவர் கைங்கரியத்திற்கு உபயோகித்துக் கொண்டார் என்ற கதையும், மணிவாசகர் கதையையும் திருமங்கை மன்னன் கதையையும் நினை வூட்டுவதுதான்.

இத்தகைய அற்புதக் கதைகளுக்குத் திருமங்கை மன்னனின் பா்சுரங்களில் அகச்சான்று ஒன்றும் இல்லை. பிற்காலத்துப் பக்தர்களின் கற்பனைகள் பக்த சரித்திரங்களில் அற்புதங்களாக விளைந்திருக்கக்கூடும்.

சோழ மன்னனுக்குக் கொடுக்கவேண்டிய தன தானியங்களுக்காக மண்ணையும் மணலையும் மாற்றிக் கொடுத்த கதையில் கற்பனைத் திறமும் நன்றாக அமைந்துவிட வில்லை; படிப்பினையும் செம்மையாகக் காணப்படவில்லை.

சோழ மன்னனுக்கு அடங்கியிருந்த சிற்றரசரான இவர், 'ஒரு மனிதனை எஜமானனாக மதித்து இறைவனுக்கும் அடியார்களுக்கும் உரிய கடமைகளைச் செய்யாமல் இருப்பது சரியன்று' என்று துணிந்து, உடனே அந்தப் பதவியை உதறித் தள்ளியிருக்கக்கூடும். இந்த உண்மையைத் திரித்து 'நம்பிக்கை மத' த்தின் பெயரால் கட்டி வைத்த ஒரு நம்பிக்கை மோசக் கதைதான் 'மணலை மரக்காலிட்டு அளந்த' இந்தக் கதை.

Koviloor Digital Library

4. வாள் வலியால் மந்திரம் கொண்டது

பொருளெல்லாம் செலவாகிச் சோழன் வெகுமான மாகக் கொடுத்த பொருள்களும் பாகவதர்களுக்கு விநியோகிக் கப்பட்டபின் திருமங்கை மன்னன் கடன் வாங்கியும் கைங்கரியத்தை விடாமல் நடத்திக்கொண்டு வந்தாராம். கொஞ்ச காலத்தில் கடன் கொடுப்பதற்கும் ஆள் இல்லை என்று தெரிந்தது.

விநோத – விபரீதக் கற்பனைகள்

காதலியின் விருப்பத்திற்கு இணங்க எப்படியாவது அன்பர் பணியை விடாது தொடர்ந்து நடத்தி வரவேண்டு மென்ற பிடிவாதத்துடன், 'இனி என்ன செய்யக்கூடும்?' என்று சிந்தித்துப் பார்த்தார். 'களவு செய்தாவது கைங்கரியம் செய்ய வேண்டியதுதான்' என்று முடிவு கட்டினாராம்.

எத்தனையோ போர்களில் தமக்குப் படைத்துணையாக இருந்த பராக்கிரமசாலிகளில் சிலரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களில் ஒருவன் எந்த வெள்ளத்தையும் லட்சியம் செய்யாமல் நீந்திப் போகக்கூடியவன். அவனுக்கு, 'நீர்மேல் நடப்பான்' என்ற ஒரு விநோதப் பெயரைக் கொடுத்து, ''நமது புதிய முயற்சிகளில் நீயும் ஒரு புதிய ஆற்றலை வெளியிட வேண்டும்'ஹ என்று சொன்னாராம்.

ஒருவன் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் மாயமாக மறைந்துபோவதில் வல்லவன். அவனுக்குத் திருமங்கை மன்னன், 'நிழலில் ஒதுங்குவான்' என்ற ஒரு புதுமைப் பெயரைச் சூட்டினார். ''உன்னுடைய பணி நமது புதுமை முயற்சிக்கு மிகவும் அவசியமானது'' என்றார்.

Koviloor Digital Library

'எந்தக் கோட்டைக் கதவானாலும் திறந்துவிடும் அவன் கை பட்டபோதே' என்று புகழப்பட்டிருந்த ஒருவனுக்கு, 'தாழ் ஊதுவான்' என்று பெயர் சூட்டினார். இவனுடைய ஆற்றல் தமது புதிய முயற்சிகளுக்கு இன்றியமையாதது எனக் கருதினார்.

எதிரிகளைப் பிடித்துக்கொள்வதில் வல்லவனாக இருந்த படை வீரன் ஒருவன் நிழல் தெரிந்தாலும் அந்த ஆளை அப்படியே பிடித்துக்கொண்டு வந்துவிடுவானாம். அவனுக்குச் 'சாயை பிடிப்பான்' என்று புனைபெயரிட்டார்.

எந்த உயரத்திலும் தொத்தி ஏறக்கூடியவன் ஒருவன்; காற்றில் ஏறி விண்ணையும் சாடக்கூடிய ஆற்றல் உள்ளவன் என்று அவனைக் கூறுவதுண்டு. அவனைக் 'காற்றில் ஊருவான்' என்றும், 'விண்ணில் தொத்துவான்' என்றும் பட்டப் பெயர்களால் கௌரவித்தாராம் திருமங்கை மன்னன்.

இத்தகைய பராக்கிரமசாலிகளுடன் வில், அம்பு, வேல், வாள், தடி, கவண், சமுதாடு முதலான ஆயுதங்களையும் ஏராளமாகச் சேகரித்துக்கொண்டார். தம்முடைய இந்தப் புதுமைப் படைக்கு வழக்கறிஞன் ஒருவன் வேண்டுமென்று அந்தப் பதவிக்குத் 'தோலாவழக்கன்' என்பவனை நியமித்தார்.

திடீரென்று களவுகளும் கொள்ளைகளும் அதிகரித்தன. சோழ ராஜதானியான உறையூருக்குப் போகும் ராஜ பாதை யிலும், சோழர்களின் துறைமுக நகரமான காவிரிப் பூம் பட்டினம் போகும் வழியிலும் திருடர் பயம் அதிகரித்து விட்டதே என்று அரசாங்க அதிகாரிகளும் கவலைப்பட்டனர்.

தெற்கே மதுரைக்குப் போகும் வழியிலும் மலை நாட்டுக்குப் போகும் வழியிலும் வடநாட்டுக்குச் செல்லும் வழிகளிலும் களவுகளும் கொள்ளைகளும் அதிகரித்து விட்டனவே என்று யாத்திரிகர்கள் கவலையடைந்தனர். 'ஆனால் என்ன விநோதமான திருடர்கள்!' என்ற பேச்சும் தேசப் பிரசித்தமாக எழுந்தது.

Koviloor Digital Library

லோபிகள், பாவிகள், இரக்கமற்றவர்கள், வஞ்ச நெஞ்சர்கள் முதலானவர்களையே கொள்ளையடிப்பாராம் திருமங்கை மன்னன். அவ்வளவு பொருளும் அடியவர் பணியிலேதான் செலவாகும். தப்பித் தவறி ஏழைகளோ சாதுக்களோ பொருளைப் பறிகொடுக்க நேர்ந்துவிட்டால் அந்தப் பொருள் மறுபடியும் எப்படியோ வீடு தேடிப் போய் உரியவரை அடைந்துவிடும்! இப்படியெல்லாம் பிரஸ்தாபங்கள்.

ஒருநாள் அம்மையார் ஒருத்தி ஒரு தங்கப்பாத்திரத்தைச் சுத்தி செய்வதற்காக நள்ளிரவில் வெளியே கொண்டுவந்தாள். 'என்ன செல்வச் செருக்கு! எத்தனை ஏழைகளின் ரத்தம் இப்படி ஒரு பாத்திரமாகியிருக்கவேண்டும்!' என்ற எண்ணத்துடன் வெடுக்கென்று அந்தப் பாத்திரத்தைப் பறித்துக்கொண்டான் திருமங்கை மன்னனுடன் வந்த கிங்கரன் ஒருவன்.

அந்த அம்மையாரோ சிறிதும் அச்சமின்றி, ''திருடா! நீ அவ்வளவு ஏழையா? என் கணவர் பக்திப் பிரசாரம் செய்து விட்டு இப்போதுதான் உணவு கொண்டார் இந்தப் பாத்திரத்திலே. இன்று தன் நன்றி புலப்பட ஒரு பாகவத அபிமானியான செல்வன் அவருக்குக் கொடுத்த வெகுமதி இது. நாளை நாங்கள் இதைக் கோவிலுக்கே கொடுத்து விடலாமென்று நினைத்திருந்தோம். கள்வன் கொண்டு போகிறான், உள்ளம் கவர் கள்வனுக்கு நாங்கள் கொடுக்க விரும்பிய பொருளை!'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே போனாள்.

அவள் போய்க் கதவை அடைப்பதற்கு முன் பாத்திரம் அந்த வீட்டுக்குள்ளே புகுந்துவிட்டது! 'அவள் பயப்பட வில்லை; நான் பயப்படுகிறேன். பக்தசிகாமணிகளை அறியாமற் போனோமே!' என்று விசனமுற்றுத் திருமங்கை மன்னன் பாத்திரத்தை உள்ளே வீசிவிட்டார்.

Koviloor Digital Library

வழிப்பறி செய்து வாழ்வு பெற்றது!

ஒருநாள் இரவு; பால் நிலா வீசுகிறது. ஒரு காட்டு வழியில் இரண்டு பக்கங்களிலும் கள்வர்கள் மறைந்திருக் கிறார்கள். அந்த வழியே ஒரு பெருங் கல்யாணக் கூட்டம் போய்க்கொண்டிருக்கிறது.

நகைகளின் சுமை தாங்கிகள்போல நடந்துகொண்டிருந்த பெண்களை நோக்கிக் கள்வர்கள், ''இனி அந்தச் சுமை உங்களுக்கு வேண்டாம்!'' என்று சொல்லி அந்த நகைகளை யெல்லாம் பறித்துக்கொள்கிறார்கள். ஆண்பிள்ளைகளுடைய பட்டாடைகள், மோதிரங்கள், முதலியவற்றையும் கவர்ந்து கொள்கிறார்கள்.

அவ்வளவு பெரும் பொருள் அவர்களுக்கு இதற்கு முன் வேறு எந்த நாளிலும் கிடைத்ததில்லை. கள்வர் கூட்டத்தின் தலைவரான திருமங்கை மன்னன் அந்தச் செல்வங்களை யெல்லாம் மூட்டை மூட்டையாகக் கட்டித் தோழர்கள் மூலமாக அனுப்பிவிடுகிறார்.

கடைசியாகத் தாமும் போவதற்கு முன் அந்தக் காட்டி லிருந்த ஒரு மரத்தின் கிளைமேல் ஏறி, 'இன்னும் யாராவது வருகிறார்களா?' என்று அங்கும் இங்கும் பார்க்கிறார். 'ஆஹா. இன்று நமக்கு அதிர்ஷ்டத்திற்கு மேல் அதிர்ஷ்டம் வந்து கொண்டிருக்கிறது!' என்ற குதூகலத்துடன் கீழே இறங்கி வருகிறார்.

அழகான இளைஞன் ஒருவன் புது மணவாளக் கோலத்தில் வந்துகொண்டிருக்கிறான். அவனுடன் அவன் மனைவியும் வந்துகொண்டிருக்கிறாள். எத்தனை நகைகள் அந்த அம்மாளின் பொன்மேனி மீது! மாப்பிள்ளைதான் எவ்வளவு விலைஉயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து கொண்டிருக்கிறான்!

''ஒஹோ, உன்னுடைய பரிவாரந்தானா ஏற்கனவே எங்களுக்குப் பெருஞ்செல்வம் கொடுத்திருக்கிறது? வா, வா;

Koviloor Digital Library

உன் வரவு எங்களுக்கு நல்வரவுதான்!'' என்று சொல்லிக் கொண்டே திருமங்கை மன்னன், தம்பதி கண்ணெதிரில் வந்து கைகொட்டிக் கூத்தாடத் தொடங்குகிறார்.

மாப்பிள்ளை இவரை நோக்கி, ''ஏன் இப்படிக் கொக்கரித்துக் கூத்தாடுகிறீர்? நீர் யார்?'' என்று கேட்கிறான். மணப்பெண் பயந்து முகம் கவிழ்ந்து நிற்கிறாள். ''இளங்கன்று பயம் அறியாது'' என்று திருமங்கை மன்னன் நினைக்கிறார்; ''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்கிறார்.

அதற்கு மாப்பிள்ளை, ''நான் வேட்டகத்திலிருந்து என் மனைவியுடன் வந்து கொண்டிருக்கிறேன்; நீர் ஏன் எங்களை இப்படி வழி மறித்துக்கொண்டு துள்ளுகிறீர்?'' என்று உள்ளுக்குள்ளே ஏற்பட்ட பயத்தை மறைத்துக்கொள்வது போலப் பேசுகிறான்.

''பயப்பட வேண்டாம், மாப்பிள்ளையே! எனக்கும் உன்னைப் போல் மனைவி உண்டு. என் உயிரான திருமங்கைக்கு அதோ மகாலட்சுமிபோல் இருக்கும் உன் மனைவியும் ஒப்பாகமாட்டாள்!'' என்று சொல்லிவிட்டுச் சும்மா நிற்கிறார் ஒருகணம்.

''அதற்கும், நீர் எங்களை வழி மறித்து நிற்பதற்கும் என்ன தொடர்பு?'' என்று மாப்பிள்ளை கேட்கிறான். திருமங்கையைத் திருப்தி செய்வதற்காகத் தாம் பாகவத கைங்கரியம் செய்து வருவதாகவும், அந்தப் பெரும்பணியில் தம்முடைய உடைமைகளை யெல்லாம் செலவழித்த பின் வழிப்பறியில் ஈடுபட்டிருப்பதாகவும் திருமங்கை மன்னன் தெரிவிக்கிறார்.

''வழிப்பறியிலா மூண்டிருக்கிறீர்? ராஜ லட்சணத்துடன் ராஜாவாக இருந்த உமக்கு இந்தத் தொழில் தகுமா? இத்தொழிலில் இவ்வளவு குதூகலமா உமக்கு? ஆடுகிறீர், பாடுகிறீர்!' என்கிறான் மாப்பிள்ளை.

Koviloor Digital Library

திருமங்கை மன்னனோ, ''என் தொழிலைப்பற்றி உனக்கு ஏனப்பா இந்தக் கவலை? எங்கள் கைங்கரிய வாழ்க்கை ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தை அடைந் திருக்கிறது. இந்த நிலையில் நீங்கள் விலை மதித்தற்கரிய செல்வங்களோடு வருவதென்றால் நான் ஆடிப்பாடி மகிழ்வதில் என்ன அதிசயம் இருக்க முடியும்? இனி வீணான கால தாமசம் இல்லாமல் நீங்களே உங்களுடைய உடைமை களையெல்லாம் கொடுத்துவிட வேண்டும்'' என்கிறார் திருமங்கை மன்னன்.

மாப்பிள்ளை மனைவி முகம் பார்த்து, ''இனி நாம் என் செய்வது? கள்ளனிடத்தில் அல்லவா சிக்கிக் கொண்டோம்?'' என்று சொல்லுகிறான். திருமங்கை மன்னன் தடியை ஓங்கவே, ''சற்றுப் பொறுத்துக்கொள்ளும். எல்லா நகைகளை யும் கொடுத்துவிட வேண்டுமா?'' என்று கேட்கிறான் மாப்பிள்ளை.

திருமங்கை மன்னன் வேலைக் காட்டியதும் மாப்பிள்ளையே மனைவியின் நகைகளைக் கழற்றிக் கழற்றிக் கொடுக்க ஆரம்பிக்கிறான். ''மாப்பிள்ளையே! உன்னுடைய உடைமைகளையும் கொடுத்துவிடு'' என்று அவசரப் படுத்துகிறார் திருமங்கை மன்னன்.

மாங்கலியத்தைக் கழற்ற வேண்டாமென்று மணப் பெண்ணுக்குச் சொல்லிவிட்டு, மாப்பிள்ளையை நோக்கி, ''நீ அந்த மோதிரத்தையும் கொடுத்துவிட வேண்டியதுதான்!'' என்று கண்டிப்பாகக் கூறுகிறார்.

மாப்பிள்ளை தன் விரலை நீட்டி, ''இந்த மோதிரம் எப்படி இறுகியிருக்கிறது பாரும்! இதை எப்படிக் கழற்ற முடியும்!'' என்று கேட்கவே, திருமங்கை மன்னன், ''இப்படிக் கழற்றுவேன்!'' என்று கையை எட்டிப் பிடித்துத் தம் பல்லால் அந்த மோதிரத்தைக் கழற்றிவிடுகிறார்.

Koviloor Digital Library

தமக்குக் கிடைத்த பொருள்களையெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டித் தூக்கிக்கொண்டு போக விரும்புகிறார் திருமங்கை மன்னன். ஆனால் தாம் கட்டிய மூட்டையை அவரால் அசைக்கவும் முடியவில்லை. தமது முழுப் பலத்தையும் உபயோகித்துப் பார்க்கிறார்; பயன்படவில்லை.

திருமங்கை மன்னனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. ''ஓ மணவாள வேஷதாரியே!'' என்று இவர் சினத்துச் சீறி அழைத்த போது அந்த மாப்பிள்ளையின் முகத்திலே ஒரு புன்னகை தோன்றுகிறது. ''ஆம்; நான் வேஷதாரிதான்'' என்கிறான் மாப்பிள்ளை.

''மந்திரவாதம் பண்ணிவிட்டாயோ?''

''ஆம் நான் அது செய்தேன்.''

''நம்மையும் மயக்கப் பார்க்கிறாய் போலும்.''

''ஆம்; என் அழகு எல்லாரையும் மயக்கக்கூடியது தானே!''

''அந்த மாய மந்திரம் எது?''

''மையலேற்றி மயக்க என் முகமே மாய மந்திரந்தான்!''

திருமங்கை மன்னனுக்குக் கோபம் அதிகரிக்கிறது. வாளை உருவிக்கொண்டு, ''அந்த மந்திரத்தை நமக்கு அறிவித்தால் ஒழிய நீ நம்முடைய வாளிலிருந்து மீளப்போகிற தில்லை காண்!'' என்று பயமுறுத்துகிறார். மாப்பிள்ளையும் பயந்தவன்போல நின்று, ''நான் உமக்கு அந்த மந்திரத்தைச் சொல்லுகிறேன், வாரும்'' என்று அவர் கழுத்தைக் கட்டி அணைத்துக்கொண்டு, ''அந்த வாளை உறைக்குள்ளே தள்ளிவிடும். பயத்தோடு அந்த மந்திரத்தை உச்சரிக்க முடியாது'' என்கிறான்.

திருமங்கை மன்னனோ வாளை உறையிலிட்டுத் தரைமேல் வைத்துவிடுகிறார். மாப்பிள்ளை, திருமங்கை

Koviloor Digital Library

மன்னனின் கழுத்தைக் கட்டி அணைத்த வண்ணம் அவர் செவியில் சகல வேத வேதாந்த ஸாரமான திரு எட்டெழுத்து என்ற மகாமந்திரத்தை உபதேசிக்கிறான்.

'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரம் காதில் விழுந்ததும் திருமங்கை மன்னனுக்கு மாப்பிள்ளை அதற்கு முன்கொடுத்த செல்வங்களுக்கெல்லாம் மேலான ஒரு செல்வம் எப்படியோ கிடைத்துவிட்டது போலத் தோன்றுகிறது.

உடனே ஒரு புதுவாழ்வு பெற்றுவிட்டது போன்ற உணர்ச்சியும் ஏற்படுகிறது, ''இந்த எட்டெழுத்தே என் பெயர்'' என்று அவன் சொன்னது போலவும் தோன்றுகிறது. ''பேராளன் பேரோதும் பேறு பெற்றேன்!'' என்று குதூகலம் அடைகிறார்.

''இத்தகைய மஹோபகாரியை நிலமிசை விழுந்து வணங்க வேண்டும்; காலைக் கட்டிக்கொள்ள வேண்டும்'' என்ற ஆசை திருமங்கை மன்னனுக்கு ஏற்படுகிறது. ஆனால் எதிரே நின்ற மணவாளனையும் காணவில்லை; மண வாட்டியையும் காணவில்லை.

''என் அழகிய மணவாளனைக் காணவில்லையே'' என்று அழுதுகொண்டே ஆகாசத்தை நோக்குகிறார். அந்த மணவாளன் பொன்மலைமீது நீலமேகம் மின்னலோடு படிந்திருப்பதுபோல் கருடன்மீது வான வீதியில் உலாவக் காண்கிறார்.

''நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்'' என்று உருகி நிற்கிறார். விண்ணில் தோன்றிய அந்த அழகிய மணவாளனை வானவர்களும் முக்தர்களும் திரள் திரளாக வணங்கிக் கொண்டிருப்பதையும் அவர்களுடைய முகங்கள் தம்மால் கொள்ளையடிக்கப்பட்டவர்களின் முகங்களைப்போல் இருப்பதையும் நோக்கி நோக்கி, 'ஐயோ, கள்வன் ஆனேன்!

Koviloor Digital Library

கண்டவாறு திரிந்தேன்' என்று கலங்குகிறார். எனினும், 'அந்த அழகிய மணவாளன் என்னளவும் தாழவிட்ட கருணையினால் உய்ந்தேன்!' என்று தெளிகிறார்.

'அந்தோ! அழகு வடிவமாகிய அந்த அன்னையின் அணிகளையும் அநியாயமாகக் களவாடினேனே!' என்று மறுபடியும் அழுகிறார். 'அன்னையின் அருள்தானே என்னையும் ஆட்கொண்டு உய்வித்தது' என்று மறுபடியும் தொழுகிறார்.

'என் அழுக்குடம்பு — எச்சில் வாயால் உன்னைத் தீண்டவும் துணிந்தேனே; எனினும், ''அஞ்சேல்'' என்று அருள் செய்தாயே' என்று திருமங்கை மன்னன் கதறும்போது, வேணுகானம் போன்ற இசைக்குரல் அவர் காதில் வந்து விழுகிறது.

''ஆழ்வாரே! அந்தத் தமிழ் மணம் கமழும் வாயால் நமது புகழைப் பேசுவீர். உம்மை நம்மோடு உறவாக்கிய குமுத வல்லியுடன் இந்த உலகின் இருள் நீங்க அன்பர் பணிகளைத் தொடர்ந்து புரிவீர். எல்லாவற்றுக்கும் மேலாக உமது பாட்டுத் திறத்தால் நாட்டை உய்விப்பீர்!''

பகவான் அந்தர்த்தானமாகிறான். ஆனால் அந்த அழகு வேறு எங்கேயோ போய்விடவில்லை. தமது உள்ளத்திற் குள்ளேயே புகுந்துவிட்டதாகத் தோன்றுகிறது திருமங்கை மன்னனுக்கு.

Koviloor Digital Library

5. கதைகளும் கற்பனைகளும்

சோழமண்டலத்தின் ஒரு பகுதி திருவாலி நாடு; இதைச் சார்ந்தது திருக்குறையலூர் என்ற ஊர். இதில் கள்ளர் குலத்திற்குத் தலைவனாயிருந்த நீலன் என்பவனுக்குப் புதல்வராகத் தோன்றினார் திருமங்கை மன்னன் என்ற திருமங்கையாழ்வார். இவருக்கும் நீலன் என்றே பெயர்.

'நீலன் மகன் நீலன்' என்று பிரசித்தமாகிவிட்டார் இவர். கல்விப் பயிற்சியுடன், வில் வித்தை, மல் வித்தை, வாள் வித்தை, குதிரை யேற்றம், யானை யேற்றம் முதலான உடல்வலித் தொழில்களிலும் பயிற்சி பெற்று அதி நிபுணராகி விட்டார். இவரது திறமையையும் வீரத்தையும் கேள்விப்பட்ட சோழ மன்னன் இவரைத் தம் படைத்தலைவருள் ஒருவராக நியமித்தான்.

இவர் மிகவும் பராக்கிரமசாலியாக விளங்கிச் சோழனுக்குப் பல போர்களிலும் வெற்றி கிடைக்கச் செய்தார். சில ஆண்டுகள் கழிந்த பின் சோழன் இவரைத் திருவாலி நாட்டுக்குச் சிற்றரசராக்கி வைத்தான். 'கலியன்' என்ற பட்டப்பெயருடன் இவர் இந்தப் பதவியையும் தம் தந்தையின் உரிமைகளையும் திறம்பட வகித்து வந்தார்.

இந்த நிலையில்தான் இவர் திருமங்கையென்ற குமுதவல்லியை மணம் புரிந்து, அவள்மீது கொண்ட காதலால் தாமும் பரம பாகவதராகிவிட்டார். பாகவத கைங்கரியத்திலே தம்முடைய செல்வங்களுடன் சோழனுக்குரிய அரசிறையாகத் தம்மிடமிருந்த செல்வங்களையும் செலவிட்டாரென்றும், பிறகு களவிலும் மூண்டு நின்றாரென்றும் கதைகள் வழங்குகின்றன.

Koviloor Digital Library

எப்படியாவது பாகவத கைங்கரியத்தை இடையூறின்றி நடத்தவேண்டுமென்ற நியமத்துடன் தன்னலமற்ற வாழ்க்கை நடத்தி வந்த இக்கள்வர்மீது பகவான் கருணைகூர்ந்து புதுமண வாளக் கோலத்துடன் மணவாட்டியும் தானுமாக வந்து பொருள்களைப் பறிகொடுத்ததாகவும், அப்போது திருமந்திரத்தை இந்தக் கள்வருக்கு உபதேசித்ததாகவும் சொல்லுகிறார்கள் அல்லவா? ஆனால் இவரது பாசுரங்களில் இவர் கள்வராக இருந்தார் என்பதற்கு அகச்சான்றே இல்லை.

கள்வன் ஆனது எப்படி?

'கள்வனேன் ஆனேன்' என்று பாடியிருக்கிறார். 'சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து' என்று தம்மைக் குறித்துப் பாடியிருக்கிறார். இதனல் இவர் களவில் ஈடுபட்டி ருந்தார் என்று ஊகிப்பது சரியன்று. தொண்டரடிப் பொடியாழ்வாரும் தாம் 'சூதனாய்க் கள்வனாகி'க் காலங் கழித்ததாகப் பாடியிருக்கிறார். அப்பர் என்ற திருநாவுக்கரசு சுவாமிகளும் தம்மைக் 'கள்ளத்தேன்' என்று சொல்லிக் கொள்கிறாரே!

இறைவனுக்கு உரிய ஆத்மாவை 'எனது' என்று அபிமானிப்பதையும் 'களவு' என்று பக்தர்கள் கருதுகிறார்கள். இதை 'ஆத்மாபகாரக் களவு' என்பர். பக்தராவதற்கு முன் தாங்கள் இருந்த நிலையை நினைத்துத்தான் அப்பரும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் தங்களைக் கள்வர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். திருமங்கையாழ்வாரும் தம்மை அப்படியே கள்வர் என்று குறிப்பிடுவதாகக் கருதுவதுதான் பொருத்தமாகும்.

மேலும் திருமங்கை மன்னன் சிற்றரசராகவும் படைத்தலைவராகவும் இருந்த காலத்தில் போர்புரிந்து தமது மன்னனுக்காகப் பகைவர்களின் செல்வங்களையும் நாடுகளை யும் கவர்ந்திருக்கக் கூடுமல்லவா? நாடு திருடும் அரசனும் பக்தர் கண்ணுக்குத் திருடன்தானே!

Koviloor Digital Library

இதற்குமேல் இவர் வாக்கிற்குப் பொருள் கொண்டு இவரைக் கள்வராக்குவது சரியன்று. இவர் கள்ளர் வகுப்பில் பிறந்ததும், இவரது களவு குறித்துக் கதை கட்டுவதற்கு ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

உரையாசிரியராகிய பெரியவாச்சான் பிள்ளை ஆத்மாப காரக் களவுடன் களவுத் தொழிலிலும் திருமங்கை மன்னன் ஈடுபட்டிருந்ததாகக் கருதுகிறார். அதனால் திருமங்கை யாழ்வார் இழிவான களவு முறைகளையும் கையாண்டார் என்ற கதை உரைகாரருக்கு முற்பட்ட காலத்திலேயே நாட்டில் நிலவி வந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம்.

ஒரு மந்திரத்தின் மகிமையை அல்லது பகவானது திருப்பெயரின் பெருமையை வெளியிடுவதற்காகப் பக்தர்களும் பௌராணிகர்களும் இத்தகைய கதைகளைப் பரப்புவது உண்டு.

காலையில் இரு'ட்டிலிருந்து ஒளி வருவதையும், அந்தி மயங்க நிலா வருவதையும் பார்த்திருக்கிறோமல்லவா? இக்காட்சியை ஓர் இயற்கை அற்புதம் எனலாம். அப்படியே அறியாமை இருளிலிருந்து ஞான ஒளி வருவதாகவும், பொய்யிருட்டினிடையே இறைவனது அருள்ஒளி பரவுவதாக வும் அற்புதக் கற்பனைகள் செய்து பார்ப்பதில் பக்த, பௌராணிக உள்ளத்திற்கு ஒரு திருப்தி; அபாரமான திருப்தி.

இயற்கையையும் உலகத்தையும் உற்று நோக்கினாலும் மரணத்தினிடையே வாழ்வும், பொய்யினிடையே உண்மை யும் ஒளி பெறுவதைக் காண்கிறோம். புராண கவிகளும் ஒரு மந்திரத்தின் மகிமையை நிலை நிறுத்துவதற்காக, 'ஒருவன் செய்யாத அக்கிரமம் இல்லை; எனினும் இறைவனருளால், குறித்த மந்திர மகிமையால், வினைகளெல்லாம்வெந்து சாம்பலுமின்றி மறைந்துவிட்டன!' என்று கதை கட்டியிருக் கிறார்கள்.

Koviloor Digital Library

திருமங்கையாரைப் பற்றிய குருபரம்பரைக் கதைகளில் இத்தகைய மனோபாவத்தைக் காண்கிறோம். இவர் வாக்கோ இந்த ஆழ்வார் திருடித் திருப்பணி புரிந்தார் என்பதை மறுக்கும்படி அமைந்திருக்கிறது.

கள்வனேன் ஆனேன்;
படிறுசெய் திருப்பேன்;
கண்டவா திரிதந்தே னேலும்,
தெள்ளியேன் ஆனேன்;
செல்கதிக்(கு) அமைந்தேன்,
சிக்கெனத் திருவருள் பெற்றேன்.

(படிறு - அடங்காத்தனம்; கொடுமை. கண்டவா - கண்டவாறு. திரிதந்தேனேலும் - திரிந்து உழன்றேனாயினும். தெள்ளியேன் - தெளிவுபெற்றவன். சிக்கென - உறுதியாக.)

என்ற வாக்கைத்தான் ஊன்றிப் பாருங்கள்.

'தெய்வத் திருப்பணிக்காகக் களவு செய்தேன்; களவு முறையில் கொடுமையும் செய்திருப்பேன்; அதற்காகக் கண்டவாறு திரிந்துகொண்டிருந்தேன்; அந்தப் பொய் வாழ்வி லிருந்து தெளிவு பெற்று நற்கதியும் அருளும்பெற்றேன்' என்று இவரே கூறியிருப்பதாகப் பொருள் கொள்வதற்கு என்ன ஆதாரம் இங்கே கிடைக்கிறது? அப்பர் சுவாமிகள் தமது பாசுரத்தில், 'அமுத ஒளி வெளி, கள்ளத்தேன்... ... கவலைக் கடல் வெள்ளைத்தேனுக்கு எவ்வாறு விளைந்ததே!' என்று கூறியிருக்கிறாரே, - அந்த அச்சில்தான் திருமங்கையாரின் வாக்கும் அமைந்திருக்கவேண்டும்.

இந்த இரண்டு பக்தர்களும் தங்கள் பழைய வாழ்க்கை யையும் புதிய அருள் வாழ்க்கையையும் முரண்பட வைத்து அந்த நிலையைப் பெரும்பணிவுடன் நோக்குகிறார்கள். அற்பப் பிழைகளும் பிரமாதமாகத் தோன்றுகின்றன இந்த நோக்கிலே; இந்தத் தற்சோதனை முறையிலே.

Koviloor Digital Library

இத்தகைய புது வாழ்விலிருந்து திருமங்கையாழ்வார் தமது பழைய வாழ்க்கைக்குத் திரும்பவேயில்லை என்பதற்கும் இவர் வாக்கில் ஆதாரம் கிடைக்கிறது:

இனிஎப் பாவம்வந்(து)
எய்தும்சொல் லீர்!எமக்(கு),
இம்மை யேஅருள் பெற்றமையால்?

குருபரம்பரைக் கதைகளோ, இவர் திருவருள் பெற்ற பின்பும் களவாடிக் கொள்ளையடித்துத் திரவியம் தேடித் திருவரங்கத்துக் கோயில் மதில்களைக் கட்டிவைத்ததாகத் தெரிவிக்கின்றன.

வாள் வலியால் பெருமாளிடம் திருமந்திர உபதேசம் பெற்று, 'அருள்மாரி' என்றும் பிரசித்தராகிவிட்டபின், பெருமாள் இவரை நோக்கி, ''நீர் உம்முடைய பரிவாரத்துடன் நம்முடைய திருப்பதிகள் தோறும் போய்ப் பாடிவாரும்'' என்று அருளிச் செய்தாராம். இவரும் அப்படியே தமது மனைவியுடனும் படைவீரர்களுடனும் வட இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் உள்ள திருப்பதிகளுக்குப் போய்ப் பாசுரங்கள் பாடி வந்தார். அப்போது திருவரங்கத்திலே மதில் முதலியவை கட்டித் திருப்பணி செய்யவேண்டுமே, பொருளுக்கு எங்கே போவது என்ற கவலை ஏற்பட்டது.

கோவிலிலும் கொள்ளையா?

நாகைப்பட்டினத்திலே புத்தர் கோவிலில் ஒரு தங்க விக்கிரகம் இருப்பதாகக் கேள்விப்பட்டாராம். ''அதைக் கொண்டுவந்து கைங்கரியத்தைப் பூர்த்தி செய்துவிடலாமே!'' என்று இவரிடம் நண்பர்கள் ஆலோசனை கூறினார்களாம். அக்கோயில், கட்டும் காவலுமாக அமைந்திருப்பதை அறிந்துகொண்டு இவர், தேர்ந்தெடுத்த சில நண்பர்களுடன் அங்கே போய்ச் சேர்ந்தாராம்.

Koviloor Digital Library

ஆலயத்தைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்; ஓரிடத்திலும் வழி இருப்பதாகத் தெரியவில்லை. பௌத்தர்கள் மாத்திரம் போய் வருவதற்கு நிலவறை வழி ஒன்று ரகசியமாக அமைக்கப்பெற்றிருந்தது. அதன் வாசல், வெகுதூரத்தில், காடடர்ந்த ஓரிடத்தில், பலமான கதவுகளுடனும் காவல் களுடனும் இருந்தது.

அந்த வாசலின் வழியாக நுழைவது இயலாதென்று மேலே ஏறி ஸ்தூபியைக் குடைந்து வழிசெய்துகொண்டு உள்ளே இறங்கினால், உட்புறத்திலுள்ள யந்திரம் ஒன்று இறங்க முயன்றவனை உள்ளே இழுத்துக்கொண்டு துண்டித்து விடுமாம்.

இந்த விவரங்களைத் தெரிந்துகொண்ட திருமங்கை மன்னன், ''அந்த யந்திரத்தைச் செய்த சிற்பி எங்கே இருக் கிறான்?'' என்று விசாரித்தார். அவன் இலங்கைத் தீவில் இருப்ப தாகத் தெரியவந்தது. ''அவன் அந்த யந்திர ரகசியத்தைப் பிறருக்குத் தெரிவித்தால் தலை போய்விடும்'' என்றும் கேள்விப்பட்டார்.

''அது எப்படி?'' என்று விசாரித்தபோது, ''அவன் ரகசியத்தை அறிவித்த அன்றே அப்போதே பௌத்தர்கள் அவன் தலையைச் சேதித்துவிடுவார்கள்; அந்த நிபந்தனைக்குச் சிற்பியும் உடன்பட்டு ஏராளமான திரவியங்களைப் பெற்றுச் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறான்'' என்று பதில் கிடைத்தது.

திருமங்கை மன்னன் சில நண்பர்களுடன் ஓடம் ஏறி, இலங்கைக்குப் போய், அந்தச் சிற்பியைச் சந்தித்தார். ''நீங்கள் யார்? உங்கள் ஊர் எது?'' என்று சிற்பி கேட்க. இவர், ''நாங்கள் வியாபாரிகள்; நாகப்பட்டினத்திலிருந்து வருகிறோம்'' என்று பதில் சொன்னார். ''அவ்வூரில் தேவஸ்தானம் பத்திரமாய் இருக்கிறதா?'' என்று அவன் விசாரித்தான்.

திருமங்கை மன்னன் உடனே தன் வயிற்றைப் பிசைந்து கொண்டு வருந்தினாராம். சிற்பிக்குக் கவலை அதிகரித்தது.

Koviloor Digital Library

அந்த நிலையில் திருமங்கை மன்னனின் நண்பர்களில் ஒருவன் சிற்பியை நோக்கி, ''ஒழிந்திருந்த துக்கத்தை மறுபடியும் ஊற்றெடுத்துப் பொங்கச்செய்தாயே!'' என்றான். சிற்பியோ மேலும் கவலை பொங்க, ''அதை விவரமாகச் சொல்லவேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

''அயல் நாட்டார் படையெடுத்து வந்து, ஆலயத்தின் ஸ்தூபியை இடித்து, உள்ளே இறங்கித் தங்க விக்கிரகத்தை அபகரித்துக்கொண்டு போய்விட்டார்களே!'' என்று இவர்கள் சிற்பியிடம் செய்தி சொன்னார்களாம். அதனால் தாங்கள் அடைந்திருக்கும் துக்கத்திற்கு அளவில்லையென்றும் சொன்னார்கள்.

சிற்பி கவலைக்குள் ஆழ்ந்தான். அச்சமயம் திருமங்கை மன்னனுடன் வந்திருந்த 'ஆலிக்குறும்பன்' என்பவன், ''அந்த ஆலயத்திலிருந்த மகுடசூத்திரத்தின் ரகசியத்தை வெளியிட்டிருப்பவன் தலையும் இனிமேல் கழுத்தில் எப்படித்தான் தங்கியிருக்கப்போகிறதோ?'' என்று வருந்திக் கூறினான்.

சிற்பியோ நடுங்கிக் கையிலிருந்த தாம்பூலத்தை நிலத்தில் சோரவிட்டுக் கண்ணீர் வடித்துக் கைகால் ஓய்ந்து, அப்படியே ஒருபுறம் சாய்ந்து பிதற்றத் தொடங்கினான்.

''ஐயோ! என்னால் ஒரு சூதும் நடந்ததில்லையே!'' என்று அவன் வாய் திரும்பத் திரும்பப் புலம்பியதைக் கண்ட ஆலிக் குறும்பன் விசேஷ அநுதாபத்துடன், ''அப்பா! உன்னைத் தவிர வேறு யாருக்குத்தான் அந்த ரகசியம் தெரிந்திருக்க முடியும் என்றல்லவா நாகப்பட்டினமெங்கும் பேச்சாயிருக்கிறது?'' என்று சொன்னான். அப்போது ஆலிக் குறும்பனின் கண்களில் நீர் துளிக்க, அதைத் துடைத்துக் கொண்டே அவன் பேசினான்.

அதுகண்ட சிற்பி சொன்னான்; ''ஐயா! என்னால் ரகசியம் வெளிப்படவேயில்லை என்பதைத் தங்களிடம் உறுதியாகத் தெரிவிக்கிறேன். நான் அந்தக் கோயிலின் மகுடசிகரத்து அடிவாரத்தில் வைத்த சூத்திரத்திலிருந்து இழியவிட்ட

Koviloor Digital Library

பிணையல் சங்கிலியைக் கோமுகி விழுகிற ஜலதாரையின் கீழே கல்லுக்குள் இருப்பாணியில் இறுக்கிய போது நாகைக் கம்மாளரில் யாரோ ஒருவன் என்னையும் அறியாமல் பார்த்திருக்கவேண்டும். அவன் பொருளாசையால் அந்த ரகசியத்தை விற்றிருக்க வேண்டும். ஐயோ! அவன் என் தலைக்கு ஆபத்து விளைவித்துவிட்டானே! நான் என்ன செய்யப் போகிறேன்!''

இப்படிச் சொல்லிச் சிற்பி மிகவும் பரிதவித்தான். இதுவரை மௌனமாக இருந்து அவன் சொன்னதையெல்லாம் நன்றாய்க் கிரகித்துக்கொண்டிருந்த திருமங்கை மன்னன் அவனைப் பார்த்து, ''நீ சொன்னபடியே சங்கிலியின் மர்மம் வெளிப்பட்டிருந்தாலும், சிகரத்திலுள்ள சக்கரத்தின் ரகசியம் எப்படி வெளிப்பட்டிருக்க முடியும்?'' என்று விசேஷ அநுதாபத்துடன் கேட்டார்.

அதற்குச் சிற்பி, ''ஐயா! எப்போது சங்கிலி தளர்ந்ததோ அப்போதே மேலிருந்த சக்கரத்தின் சக்தியும் குறைந்து போகும் என்பதில் தங்களுக்கு ஏன் இவ்வளவு சந்தேகம்? அவ்வளவு வலிமைக் குறைவு ஏற்பட்டதும் அந்தச் சக்கரத்தை நிறுத்தி விடுவதற்கு, வாழை மலிந்து கிடக்கிற நாட்டில் வேறு உபாயம் தேடவேண்டியதில்லை! எல்லாம் என்னுடைய தலைவிதி. தலைபோகிற விதிதான்!'' என்று கதறத் தொடங்கி விட்டான்.

அதன் பின்பு இவர்கள் அவனுடைய பயத்தை ஒருவாறு போக்க முயன்றார்கள். ''விதியின் விசித்திர கதிக்கு இவன் என்ன செய்வான்?'' என்று ஆழ்வாருடன் வந்திருந்த ஒருவன் சொல்லிப் பக்குவமாக அவனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அப்பால் திருமங்கை மன்னனும் பிறரும், ''நீ வேறு எங்கேயாவது போய்க் கொஞ்சகாலம் தலைமறைவாக இருந்துவிட்டால் உனக்கு ஆபத்து ஒன்றும் நேர்வதற்கு

Koviloor Digital Library

வழியில்லை'' என்று சொல்லிவிட்டுப் பிரயாணமாகிக் கடற் கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

திருமங்கை மன்னன் பரிவாரத்துடனே நாகைக்கு வந்து சேர்ந்ததும் அன்று நட்ட நடுநிசியில் கோயிலுக்குப் போய்க் கோமுகியின் தீர்த்ததாரையின் கீழே கல்லிச் சோதித்துச் சிற்பி சொல்லியிருந்த சங்கிலியைக் கண்டுபிடித்து அதைத் தளரச் செய்தாராம். பிறகு ஸ்தூபியின் மேல் ஏறிக் கலசத்தைப் பறித்துக் கீழே நோக்கினார்.

சக்கரத்தின் வலிமை குறைந்திருந்தபோதிலும் அதன் சுழற்சி அபாயம் விளைக்கக்கூடியதாகவே இருந்தது. அதற்கு வாழைத்தண்டை இரையாகக் கொடுத்ததும் அதன் வேகம் அடங்கிப் போயிற்றாம்.

பிறகு அந்தத் துவாரத்தின் வழியாகக் கீழே பார்த்ததும் தங்க விக்கிரகம் வாடாவிளக்கின் ஒளியிலே தகதகவென்று பிரகாசிக்கக் கண்டாராம் திருமங்கை மன்னன். ஒருவன் உள்ளே இறங்கிப் போய் விக்கிரகத்தைத் தூங்கு சங்கிலியில் கட்டிவைத்துத் தானும் ஏறிக்கொண்டதும் மேலேயிருந்த திருமங்கை மன்னனும் நண்பர்களும் சங்கிலியை இழுத்து விக்கிரகத்தை எடுத்துக்கொண்டனராம்.

பொழுது விடிவதற்குள் இவர்கள் வெகு விரைவாகப் பல கல் தூரத்தையும் கடந்து, ஒரு கிராமத்திற்கு அருகே வந்து, அங்கே உழுது சேறாக்கி வைத்திருந்த ஒரு வயலில் விக்கிரகத்தைப் புதைத்துவிட்டு அருகே ஒரு மரத்தடியில் தங்கினார்கள். பொழுது விடிந்ததும் வயலுக்குச் சொந்தக்காரன் நடுகைக்கு நாற்றுச்சுமையை எடுத்துக்கொண்டு வந்து விட்டான். உடனே தோலாவழக்கன் எழுந்து ஓடி, அவனை வயலில் இறங்காதபடி தடுத்தானாம்.

''நீ யார்? என்னை ஏன் இப்படித் தடுக்கிறாய்?'' என்று சொந்தக்காரன் கேட்டதும் தோலாவழக்கன், ''இது உன் வயல் என்பதற்கு ஆதாரம் காட்டு; பார்க்கலாம். நான் இதை

என்வயல் என்றே சொல்லுகிறேன்'' என்று பதில் சொன்னானாம்.

அவ்வழியே வந்த அரசாங்க அதிகாரிகளிடம் இருவரும் இந்த விவக்ாரத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். தோலா வழக்கன் விநோதமாகவும் ரஸமாகவும் பேசிக்கொண்டே யிருந்ததால் அந்த அதிகாரிகளும் கேட்டுக்கொண்டே யிருந்தார்கள்.

அஸ்தமனமாகிவிட்டது. கடைசியாகத் தோலா வழக்கன், ''இந்த எதிரி இந்த வயலைத் தன்னுடையதென்று மெய்ப்பிக்கத் தக்க சாஸனங்களை நாளை உதயத்தில் கொண்டுவந்து காட்டினால் நான் உரிமை கொண்டாடுவதை விட்டுவிடுகிறேன்'' என்று சொன்னானாம். விவகார அதிகாரி களும் அந்த உழவனை நோக்கி, ''நீ அப்படிச் செய்தால் நிலம் உனக்கே உரியதாகிவிடும்'' என்று சொல்லி, அவனை நாற்றுச் சுமையுடன் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்களாம்.

அன்று இரவிலே திருமங்கை மன்னனும் நண்பர்களும் புதைத்துவைத்திருந்த விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு அதிவேகமாகப் போய்விட்டார்களாம். அந்த விக்கிரகத்தைப் பொன்னாக்கித் திருவரங்கத்தில் பெருமாளின் திருப்பணிக்கு உபயோகித்துக்கொண்டாராம். கதை ஒரு 'நவீன'க் கற்பனை போலச் செல்லுகிறதல்லவா?

இப்படிப் புறச்சமயத்தவரின் கோயிலைக் கொள்ளை யிட்டுத் திருவரங்கப் பெருநகரில் சுற்றுத் திருமதில் எடுத்தார் என்பது மதவெறியுடன் பிற்காலத்தவர் கற்பித்த ஒரு கற்பனையென்பது வெளிப்படை. இத்தகைய செயல்களுக்கு ஒரு துளிஆதாரங்கூட இவர் வாக்கிலே கிடைப்பதில்லை.

ஏன் இக்கற்பனைகள்?

திருமங்கை மன்னன் ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்திருக்கக்

Koviloor Digital Library

கூடும் என்ற ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்தை நாம் ஒப்புக் கொள்வதற்குத் தடையொன்றும் இல்லை. ஏழாம் நூற்றாண்டில் பௌத்தர்களும் ஜைனர்களும் தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள் என்பதும், அவர்களைச் சம்பந்தரும் திருநாவுக்கரசரும் வாதில் வென்று அவர் களுடைய ஆதிக்கத்தை வீழ்ச்சியுறச் செய்தனர் என்பதும் வரலாற்றுப் பிரசித்தமான செய்திகள்.

திருமங்கை மன்னனும் பௌத்தர் முதலானவர்களை வாதில் வென்றார் என்று 'திவ்ய சூரி சரிதம்' தெரிவிக்கிறது. இந்த வெற்றியைக் 'களவின் வெற்றி' யாக்கிய மனோ பாவத்தை என்ன என்பது?

சைவ வைஷ்ணவ சமயத்தவருக்கு ஜைன பௌத்தர்கள் இடையூறு விளைவித்தார்கள் என்பதற்குத் திருஞானசம்பந்தர் வாக்கிலும் திருநாவுக்கரசர் வாக்கிலும் சான்றுகள் கிடைப்பது போல் திருமங்கை மன்னன் வாக்கிலும் சான்றுகள் கிடைக் கின்றன. திருமங்கை மன்னன் காலத்தில் பௌத்தர்களும் ஜைனர்களும் அழகர்மலை என்ற திருமாலிருஞ்சோலையில் வசித்து வந்தனர் என்பதற்கும் ஆதாரம் உண்டு. ஆனால் இவர் காலத்திலே நாகப்பட்டினத்தில் தங்க விக்கிரகத்துடனும் யந்திரப் பாதுகாப்புடனும் புத்தராலயம் ஒன்று இருந்தது என்பதற்கு ஒரு வகை ஆதாரமும் இல்லை.

கொள்ளைத் தொழிலுடன் இவர் கொலைத் தொழில் புரிந்ததாகவும் கதை வழங்குகிறது. 'கள்வனேன் ஆனேன்' என்ற இவர் வாக்கிற்குத் தவறாகப் பொருள் செய்துகொண்டு கதைகளைக் கற்பித்ததுபோல், இவரது கொலைத் தொழில் பற்றிய கதையையும் கற்பிதமாகவே வழங்கி வந்திருக் கிறார்கள் என்பது திண்ணம்.

சிற்றரசராக இருந்ததால் இவர் வேட்டையாடியும் போர்கள் புரிந்தும் உயிர்க்கொலை செய்திருக்கக்கூடும்.

Koviloor Digital Library

கோடிய மனத்தால்
சினத்தொழில் புரிந்து
திரிந்துநாய் இனத்தொடும் திரிந்திட்(டு)

ஓடியும் உழன்றும்
உயிர்களே கொன்றேன்,
உணர்விலேன் ஆதலால்

(கோடிய - வளைந்த, நெறிதவறிய. திளைத்திட்டு - களித்து. உழன்றும் - சுற்றித் திரிந்தும்.)

என்ற இவரது வாக்கைக் கருத்தூன்றிப் பாருங்கள்.

இந்த வாக்கிலே திருமங்கை மன்னனுடைய பூர்வ வாழ்க்கைச் சித்திரம் ஒன்று கிடைக்கிறது என்பதில் ஐயமில்லை. கூட்டம் கூட்டமாகச் செல்லும் நாய்களோடும், கோபக்கனல் வீசும் கண்களோடும் இவர் காடெங்கும் ஓடியும் சுழன்றும் திரிந்தும் வேட்டையாடுவதைப் பார்க்கிறோம். போர் பெறாத காலங்களில் பொழுதுபோக்கு இது.

போர் பெற்றுவிட்டாலோ கோபத்தீ கண்களில் அதிகமாக ஜொலிக்கும். கூட்டம் கூட்டமாகப் போகும் நாய்களைப்போல் நன்றியறிவும் யஜமான பக்தியும் உள்ள படைவீரர்களுடன் மிருக வேட்டைக்குப் பதில் மனித வேட்டையாடிப் போர்களில் வெற்றிபெறுவார்.

'அந்த நாளில் எனக்கு நல்லுணர்வோ உயர்ந்த லட்சியமோ இல்லை; புத்தி கோணற் புத்தியாகவே இருந்தது' என்பதை ஒப்புக்கொள்கிறார்.

கொன்றேன் பல்லுயிரைக்
குறிக்கோள் ஒன்(று) இலாமையினால்

(குறிக்கோள் - அறியும் திறம், மனத்துள் குறியாகப் பற்றுதல்.)

என்று இவர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

Koviloor Digital Library

ஊடுருவிக் காணும் உண்மை

மன ஒருமையுடன் குறிக்கோள் அல்லது லட்சியத்தைக் கண்டுகொண்டதும் இவரது வாழ்க்கை, புரட்சிகரமாக மாறி, ஒரு புத்தம் புது வாழ்க்கையாக ஆகிவிடுகிறது என்று ஊகிக்கலாம். 'உயிர்க்கெல்லாம் செற்றமே (கோபமே) வேண்டித் திரிதர்வேன் (திரிவேன்), தவிர்ந்தேன்!' என்ற வாக்கை உற்று நோக்கவேண்டும்; ஊருடுவிப் பார்க்க வேண்டும்.

லட்சியத்தைக் கண்டு பகவானுடன் தொடர்பு (பகவத் சம்பந்தம்) பெற்றதும் ஹிம்ஸை நெறியைத் தவிர்ந்து அஹிம்ஸாதர்மமாகிய நேர்வழி பிடித்தார் இவர் என்பதுதான் எவ்வளவு தெளிவாக இந்த வாக்கிலே வெளிப்படுகிறது! பழைய வாழ்க்கைக்கும் புதிய வாழ்க்கைக்கும் இடையே ஒரு 'யுகசந்தி'யைக் காண்கிறோம், 'திரிதர்வேன்' என்ற சொல்லுக்கும் 'தவிர்ந்தேன் என்ற சொல்லுக்கும் இடையே.

இந்தப் புது வாழ்விலேதான் இவர் எவ்வளவு குதூகலமாக.

> அரும்பிணி பாவம் எல்லாம்
> அகன்றன என்னை விட்டு!

என்று தாம் மாறிப்பிறந்த நற்செய்தியை அறிவிக்கிறார்! இப்படிப் பாவத்திலிருந்து திரும்பாதவர்கள் - மாறிப்பிறவாத வர்கள். ஞானத்தினாலும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற முடியாது என்பது உபநிஷத ஞானிகளும் ஒப்புக்கொள்ளும் உண்மை யாகும்.

இளமையில் தாம் தீமைகள் செய்துவிட்டதாக இவர் பச்சாத்தாபம் அடைகிறார்.

> தெரியேன் பாலக னாய்ப்பல
> தீமைகள் செய்து மிட்டேன்

Koviloor Digital Library

என்றெல்லாம் கூறுகிறவர் அந்த நிலையிலும் தாம் கொள்ளையடித்ததாகக் கூறாதது கவனிக்கத்தக்கது.

சிற்றின்ப உணர்ச்சிகளுக்குத் தாம் இலக்காகியிருந்த தாய்த் திருமங்கை மன்னன் பாடியிருக்கிறார். இது குறித்து ஓர் அறிஞர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது; ''திருமங்கையாழ் வாருக்குக் குறுக்கே நின்றது பெண்ணாசை. இந்த ஆசையாரைவிட்டது? கடுந்தவம் புரிந்த விசுவாமித்திரனை விட்டதா? கடைசி வரையில் டால்ஸ்டாய்க்கு ஆசைபோன தாகத் தெரியவில்லை. தம்மை அநேகந் தரம் அவர் நொந்துகொண்டு எழுதியிருப்பதைப் பார்த்தால் நமக்கே கண்ணில் ஜலம் வந்துவிடும். தமக்கு மனத்தூய்மை இன்னும் வரவில்லை யென்று பெரிய சாதனங்களையும் தபசுகளையுஞ் செய்த மகாத்மா காந்தி அடிக்கடி எழுதிவரும் விஷயங்களும் அறிஞர்களால் நோக்கத் தகுந்தவை.''

இவர் மாறிப்பிறந்து புது வாழ்வு பெற்றபின் பழைய காம உணர்ச்சி 'சீரிய நற்காம' மாகிய பக்திக் காதலாகப் பரிணமிக்கக் கண்டார்.

புலம்படிந்(து) உண்ணும்
போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா

(புலம்படிந்து - ஐம்புலன்களில் தோய்ந்து, வாளா - வீணாக.)

என்று கழிந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறவர் பக்திக் காதலுக்கே தமது பிற்கால வாழ்க்கை முழுமையையும் உரிமையாக்கி விடுகிறார்.

'காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த தொண்டனேன்' என்று தமது பூர்வ வாழ்க்கையை வெறுத்துப் பேசுகிறவர், புருஷோத்தமனையே காதலித்துப் பாடிப் பாடிப் பெருவாழ்வு பெறுகின்றார். இந்த உண்மையைப் புதை பொருளாகக்

Koviloor Digital Library

காட்டும் கதைகளும் கற்பனைகளும் புதர்களாக மண்டித் துயர் கொடுப்பது திருமங்கையாரின் வைபவம்.

இந்தப் பக்தமணி பரமரஸிகர் என்பதற்குப் பல பாசுரங்கள் சான்று தருகின்றன. இந்த ரஸிகத் தன்மையை உட்பொருளாகக் கொண்ட கற்பனைகளும் கதைகளும் இவரைச் சுற்றிப் படர்ந்திருக்கின்றன.

இவர் குறுநிலத் தலைமை பூண்டு, தமது அரசாங்கக் காரியத்தைக் குறைவற நடத்திவந்த காலத்திலே, இசை நாடகங்களில் பிரியமுடையவராய் இளமங்கையர் இன்னிசை பாடக் கேட்பதையும், நன்னடம் பயிலக் காண்பதையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தார் என்றும், குமுதவல்லி யின் நடனம் கண்டு அந்த நடிகையைக் காதலித்து மணந்து கொண்டாரென்றும் கதைகள் வழங்குவதற்கு, இவரது ரஸிகத் தன்மை பற்றிய பாசுரக் குறிப்புக்கள் காரணமாகும் எனக் கருதலாம்.

பராக்கிரமத்தால் பகை வென்று 'பரகாலன்' என்று இவர் பெயர் பெற்றிருக்கவேண்டும். இந்த வீரம் களவுத் தொழிலிலும் தன்னை வெளியிட்டுக் கொண்டதாகக் கதைகள் முளைத்து வளர்ந்திருக்கின்றன. இந்த வீரரின் தோழர்களும் வெகு சாமர்த்தியசாலிகளாக இருந்திருக்கவேண்டுமல்லவா? இதைத்தான் 'நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாள் ஊதுவான்' என்ற விநோதப் பெயர்கள் நகைச்சுவையுடன் வற்புறுத்துகின்றன.

இவர் திருமந்திர உபதேசம் பெற்றதை வீரத்தின் சிகரமாகக் கற்பனை செய்திருக்கிறார்கள். 'மாயோனை வாள் வலியால் மந்திரம்கொள் மங்கையர் கோன்' என்று ராமாநுஜரே இவரைப் போற்றி ஒரு தனியன் அருளிச் செய்ததாகச் சொல்லுகிறார்கள்.

மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று
கோலிப் பதிவிருந்த கொற்றவனே! - வேலை

Koviloor Digital Library

அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத்
துணித்தருள வேணும் துணிந்து.

என்ற தனியனும், வலிமையாலும் வீரத்தாலும் இவர் மந்திரம் கொண்டார் என்ற கற்பனைக் கதைக்கே சான்றாகும்.

இவர் தமது திவ்யப் பிரபந்தங்களால் மக்களை நெறிப்படுத்திக் கலிதோஷத்தைக் கடிந்ததால் இவருக்குக் 'கலிகன்றி' என்றும் ஒரு பெயர் ஏற்பட்டது. இவரது பிரபந்தங்கள் நம்மாழ்வார் அருளிய தமிழ் மறைக்கு அங்கங்களாக அமைந்திருக்கின்றன என்றும் தமிழிலுள்ள இலக்கணத் துறைகள் ஐந்துக்கும் இலக்கியமாகும் என்றும் கூறுவர்.

திருக்குறுங்குடியில் நித்தியவாசம் செய்யவேண்டும் என்ற நினைவு கடைசியாக இவருக்கு ஏற்பட்டதாம். குமுதவல்லியுடன் இவர் அங்கே சென்று சிலகாலம் யோகநிஷ்டையில் இருந்து தமது நூற்றைந்தாம் பிராயத்தில் திருமேனி நீத்தரென்றும் குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இவரை,

வலம்திகழும் குமுதவல்லி
மணவாளன் வாழியே

என்று வாழ்த்துகிறது வைஷ்ணவ உலகம்.

Koviloor Digital Library

6. கள்வனைக் காட்டிய மந்திரம்

மந்திரத்தைக் கண்டார். அந்த ஒளியிலே கள்வனைக் கண்டார்; தம்மையும் கள்வராகக் கண்டார். 'நீயும் கள்வன். நானும் கள்வன்; இது உன் மந்திர மகிமை' என்று தெளிந்தார். அந்த ஞானத் தெளிவு அமுதப் பாடல்களாகித் திருமங்கை மன்னனின் 'பெரிய திருமொழி'யில் முதற் பத்தாக அமைந்திருக்கிறது.

ஆத்ம சரித்திர ஸாரம்

கழிந்த காலத்தை நினைத்து வாடிக் கிடந்தார். இதற்குமுன் ஓடின ஓட்டத்திற்குக் கணக்கேது, வழக்கேது? தந்தையின் உரிமைகளைக் காப்பாற்றவும் ஓடித் திரிந்தார், தெய்வம் என்ற தந்தையை மறந்து. சோழ வேந்தனுடைய படைத்தலைவனாகவும் ஓடித் திரிந்தார், ராஜாதி ராஜனை மறந்து. பொருளுக்குக் குறை வில்லை; போகத்திற்குக் குறைவில்லை; வேகத்திற்கும் குறைவில்லையே! ஏன் இந்த வருத்தம், இந்த வாட்டம்?

குமுதவல்லியைக் காதல் மணம் புரிந்து இன்ப வாழ்வு வாழ விரும்பினார் என்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. ஆனால் அவளை, 'ஆவியே! அமுதே!' என்று கொஞ்சியழைத்து வாழ்க்கை நடத்தியதில் இந்தக் காதலருள்ளம் அமைதி பெற்றதா? ஆனந்தம் கண்டதா?

சிற்றின்ப உணர்ச்சிகளிடையே ஓடித் திரிந்த இளமை யுள்ளம் குமுதவல்லியின் காதலிலும் சாந்திபெறாது, வாடி வருந்தி, அவள் சுட்டிக்காட்டிய பக்திக் காதல் நெறியிலேதான் ஆறுதல் பெற்றது என்பது கதை. இவரோ,

Koviloor Digital Library

ஓடினேன்; ஓடி, உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்; நாடி, நான்கண்டு கொண்டேன்
நாரய ணாஎன்னும் நாமம்

(உய்வதோர் பொருளால் - நான் உய்வதற்குக் காரணமாகிவிட்ட பகவானுடைய ஒப்பற்ற அருளென்னும் பொருளால்.)

என்று தாம் ஞானம் பெற்ற அதிசயத்தை வெளியிடுகிறார்.

எம்பெருமானது திருவருள் இவர் உய்வதற்குக் காரணமாயிற்று; ஆனால் அந்த அருளைப் பெறுவதற்குக் காரணமான சாதனமோ தகுதியோ தம்மிடம் இல்லையென்பது குறிப்பு.

ஓம் நமோ நாராயணாய என்ற மகாமந்திரத்தின் உள்ளீடான நாராயண நாமத்தை இறைவன் அருளால் கண்டு கொண்டதாகச் சொல்லுகிறார். அல்லும் பகலும், தமது வாட்டத்தையும் வருத்தத்தையும் உணர்ந்தபோதெல்லாம், 'நாராயணா! நாராயணா!' என்று விளித்துக் கதறிப் பச்சாத்தாபக் கண்ணீர் வடித்து, பழுதாய்க் கழிந்த காலம் குறித்து இவர் பெரிதும் வருந்தியது உண்டு.

துன்பக் கடலிடையே ஒரு தோணிபோல உதவிய திருநாமத்தோடு கூடிய மகாமந்திரத்தை, 'நான்கண்டு கொண்டேன்' என்று இவர் கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது. 'உய்வதோர் பொருளால் உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து நாடி' இவர் கண்டுகொண்ட மந்திரத்தை இதே வழியில் அனைவரும் கண்டு கொள்ளலாம் என்பது குறிப்பு.

'கோல் தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே, மால்தேடி ஓடும் மனம்' என்று தமக்கு ஒரு வழி காட்டிய பெரியாரை, 'ஒரு பெருந் தமிழர்' என்றும் 'செந்தமிழ் பாடுவாரில்' ஒருவர் என்றும் போற்றியவர் திருமங்கை மன்னன். அவர் காட்டிய அந்தக் கொள்கொம்பைப் பற்றிப் படராது, கொம்பை விட்டு

Koviloor Digital Library

நீங்கிய தளிர் வாடுவதுபோல் தாம் வாடிக்கொண்டிருந்ததாக ஒப்புக்கொள்கிறார்.

பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்ற பொய்கையாரைப்போல் இவரும்,

பாவியேன் உணரா(து) எத்தனை பகலும்
பழுதுபோய் ஒழிந்தன நாட்கள்!

என்றும்,

ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்தஅந் நாட்கள்

(கனவிலும் - கனவைக் காட்டிலும்.)

என்றும் புலம்புகிறார்.

ஓர் இரவில் இவர் வடித்த கண்ணீர் அப்படியே தோய்ந்து வரும் இந்த வாக்கைப் பாருங்கள்:

உள்ளெலாம் உருகிக் குரல்தழுத் தொழிந்தேன்,
உடம்பெலாம் கண்ணநீர் சோர,
நள்ளிரு ளளவும் பகலும்நான் அழைப்பன்,
நாராய ணாஎன்னும் நாமம்.

(குரல் தழுத்து - குரல் தழுதழுக்கப் பெற்று. கண்ணநீர் - கண்ணீர். சோர - சொரியப் பெற்று.)

பச்சாத்தாபக் கண்ணீரில் கழிந்த காலத்துக் கள்ளமெல்லாம், தீமைகளெல்லாம் கரைந்து கழிந்துபோனதும் அதுவே ஆனந்தக் கண்ணீராகிறது. முத்துமாலை அணிசெய்த உடம்பிலே இப்போது முத்துமாலை யிட்டாற்போன்ற கண்ணீர் அணிசெய்கிறது.

பட்டமரம் தழைப்பதுபோலத் தழைக்கிறது, வாடி வருந்திக்கிடந்த உள்ளம். இருளடைந்த கோயிலில் வாடா மணிவிளக்கு எரியத் தொடங்குவதுபோல் திடீரென்று ஒளிரத் தொடங்குகிறது ஞானச் சுடர்.

Koviloor Digital Library

நன்றுநான் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம்.

(நன்று நான் உய்ய - நன்றாக நான் உய்யும்படி.) என்றும்,

நற்றுணை யாகப் பற்றினேன் அடியேன்
நாராய ணாஎன்னும் நாமம்.

என்றும் எவ்வளவு குதூகலமாகப் பாடுகிறார்!

ஆம்; பாடியும் ஆடியும் அநுபவிக்க வேண்டிய அநுபவம் இது. இந்த ஆலிநாடர் பெருஞ்சேனையுடன் - யானைப்படை குதிரைப்படைகளுடன் - எத்தனை போர் களிலோ வெற்றி பெற்றவர்தாம். ஆனால் இந்த வெற்றிக்கு ஈடாகுமோ அந்த வெற்றிகளெல்லாம்?

வரலாறுகளிலோ கற்பனைக் கதைகளிலோ காணும் வீரச் செயல்கள் வெற்றிச் செயல்கள் எல்லாம் ஒருவன், 'உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து' அடையும் ஞான வெற்றிக்குமுன் அற்ப நிகழ்ச்சிகளேயாகும். திருமங்கை மன்னனின் வெற்றியோ பல நூற்றாண்டுகளாக எத்தனையோ மக்களுக்கு ஒரு ஞானச்சுடர் வெள்ளமாகத் தோற்றமளித்து ஆறுதல் அளித்திருக்கிறது.

'ஆடல்மா' என்ற குதிரையேறிச் சேனையை நடத்திக் கொண்டுபோய்ப் பகைவர்களை உடல் துணித்து வெற்றிமுரசு கொட்டிய அந்தக் காலம் நினைவிற்கு வருகிறது. 'கூரணிந்த வேல் வலவன் வாழ்க! கொடிமாட மங்கையர்கோன் வாழ்க! போர்க் கலிகன்றி வெல்க! பகைவர்தம் உடல் துணிய வாள் வீசும் பரகாலன் வெல்க!' என்ற கோஷங்கள் விண்ணைப் பிளந்த அந்தக் காலம் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மெல்லப் போய்விட்டது. அதன் புயனாகச் சோழன் தனக்கு அளித்த பதவி எங்கே? இந்த 'உணர்வு எனும் பெரும் பதம்' எங்கே?

Koviloor Digital Library

அந்த அஞ்ஞான தசையிலே, 'பெருநிலத்து ஆருயிர்க்கெல்லாம் பேதையேன்' தீங்கு செய்வதே போது போக்காகத் திரிந்துகொண்டிருந்தேனே, அந்த இருட்டிலிருந்து இந்த ஞானோதயம் ஏற்பட்ட அதிசயந்தான் என்ன! என்ற உள்ளுணர்ச்சியை,

செற்றமே வேண்டித் திரிதர்வேன், தவிர்ந்தேன்

(செற்றம் - தீய செயல்; வெறுப்பு; கோபம்; பகைமை.)

என்ற வாக்கிலே காண்கிறோம்.

இந்தக் கருத்தை விளக்கிக்கொள்வதற்குப் பெரிய வாச்சான் பிள்ளையின் பின்வரும் இந்த வாக்கை உள்ளத்தில் பதித்துக்கொள்ள வேண்டும்; 'ஒருவனுக்கு பகவத் ஸம்பந்தம் உண்டு, இல்லை என்று தனக்கே அறியலாம்' என்று பலகாலும் அருளிச் செய்வர் ஜீயர் (நஞ்சீயர் என்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்). 'ஒருவன்நோவு படக் கண்டால், ''ஐயோ!'' என்று இரக்கம் பிறந்திருக்கில், ''நமக்குப் பகவத் ஸம்பந்தம் உண்டு'' என்று அறியலாம். ''அத்தனையும் வேணும்'' என்றிருந்தானாகில், (அவன்), ''நமக்குப் பகவத் ஸம்பந்தம் இல்லை'' என்றிருக்கலாம்.'

திருமங்கையாழ்வார் கண்ட புதை பொருள் இது. ஹிம்ஸை முறையை விட்டு இவர், 'அலைநீர் உலகுக்கு அருளே புரியும்' அருள்மாரியான அதிசயத்தைப் 'புதையல் எடுத்த தனம்' போல நமக்கு எடுத்துக் காட்டுகிறது பெரியவாச்சான் பிள்ளையின் உரை.

இந்த உண்மையை அறியாத நிலையில் 'கற்றார் பரவும் மங்கையர்கோன்' என்று பிறர் புகழ்ந்தது கண்டு இவருள்ளம் மகிழ்ந்திருக்க வேண்டும். பகவத் ஸம்பந்தம் பெற்று அஹிம்ஸை நெறியில் மனம் திரும்பிய இப்பொழுதோ அந்தக் கல்வியால் நன்மை பெறவில்லை என்று தோன்றுகிறது.

Koviloor Digital Library

கற்றிலேன் கலைகள்

என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது.

வாதப்போர் புரிவதிலும் செய்யுள் செய்வதிலும் வல்லவரான பெருந் தமிழ்ப் புலவராயிருந்தும் அவையல்ல கல்வியின் நோக்கம் என்று கண்டு, பக்தியையும் அஹிம்ஸா தர்மத்தையும் சத்தியத்தையுமே கலைப்பயிற்சியின் 'உயிர் நிலையாகக் கருதுகிறார் இப்பொழுது.

தஞ்சையிலோ குடந்தையிலோ (கும்பகோணத்திலோ) திருமங்கை மன்னனின் வாழ்விலே இந்தப் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது போலத் தோன்றுகிறது முதல் பதிகத்தை ஓதி உணர்ந்து நோக்கும்போது.

ஏதோ ஒரு படையெடுப்பு முயற்சிக்கிடையே இவர் 'தஞ்சை மாமணிக்கோயில்' என்ற விஷ்ணு கோவிலில் போய்ப் பிரார்த்தனை செய்திருக்கக்கூடும். பிறகு கோவில் மதிலையும் ஊரின் பெரிய மதில்களையும் கடந்து ஒரு சோலைக்கு வந்திருப்பார். அந்த அழகும் பசுமையும் அமைதியும் பரிமளமும் இவருள்ளத்தைக் கவர்ந்து தியானத்தில் மூழ்கச் செய்தன என்று கருதலாம்.

'தனிமை கண்டதுண்டு; அதிலே ஸாரம் இருக்குதம்மா' என்பதுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். பக்த பரம்பரையில் வந்த இவருக்கு, 'நாம் மேற்கொண்டிருக்கும் இந்தப் போர்த் தொழிலும், சோழனுக்காகப் பகைவர்களைக் கொலை புரியும் இந்தக் கொலைத் தொழிலும் நியாயமா? நமக்குப் பொருத்தமா?' என்ற வினா அந்தத் தனிமையில், அந்தத் தியான வேளையில் உள்ளத்தில் எழுந்ததென்று ஊகிக்கலாம்.

இவரது போர்த்தொழில் முயற்சிகளுக்கும் பண் பாட்டுக்கும் இடையே ஒரு போராட்டம் அடிக்கடி நிகழ்ந்திருக்கக்கூடும். இப்போது இந்தத் தஞ்சைச் சோலையில்

Koviloor Digital Library

தஞ்சை மாமணிவண்ணன் அருளால் மறுபடியும் அந்த அகப்போர் தொடங்கி இவருக்கு வெற்றியாக முடிந்ததென்று நம்பலாம்.

இவர் அடியவர்களுடன் இந்த வெற்றியைப் பகிர்ந்து கொள்வதைப் பாருங்கள்!

வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம்.

(வம்பு உலாம் சோலை - பரிமளம் வீசுகிற சோலை. மாமதிள் - பெரிய மதில்.)

'நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்' என்ற அப்பரின் உணர்ச்சி திருமங்கை மன்னனுக்குத் தஞ்சையில் ஏற்பட்டதென்று கருதலாம். 'எனக்கு அரசன் சோழன் அல்ல; எம்பெருமான் தான்' என்று இவர் தமக்குள் தாமே சொல்லிக் கொண்டார் எனலாம்.

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
என்றனக் கர(சு) என்னுடைய வாணாள்

(எந்தை - எமக்குத் தந்தை. என்னுடைச் சுற்றம் - எனக்கு எல்லாச் சுற்றமும்.)

என்கிறார் தஞ்சையைக் குறிக்கும் தமது பாட்டிலேயே.

இந்த மனமாற்றம் திருக்குடந்தையில் ஆராஅமுதப் பெருமாளைத் தொழுத சமயத்தில் உறுதிப்பட்டிருக்கலாம். 'என்னைப்போல் நீங்களும் நற்பொருள் காண விரும்பினால் திருக்குடந்தையைத் தொழுது நாராயண நாமத்தைப் பாடுங்கள்' என்று புலவர்களை நோக்கி இவர் உபதேசிப்பதும் கவனிக்கத் தக்கது.

'சூழ்புனல் - குடந்தையே தொழுமின்' என்று திருக்குடந்தையின் காவிரி வளத்தைக் குறிப்பிடுவதும் கூர்ந்து

Koviloor Digital Library

நோக்கத் தக்கது. குடந்தை ஆரா அமுதனைத் தொழுதபின் காவிரியாற்றங்கரையில் தன்னந் தனியாகத் திரிந்தபோது இவர் பகவத் ஸம்பந்த ஞானோதயத்தை அடைந்திருக்கவும் கூடும்.

இது எப்படியானாலும் இது இவரது வாழ்க்கையிலே ஒரு மகத்தான நிகழ்ச்சிதான். 'கலிங்க வெற்றிக்குப் பிறகு அசோகன் மனம் மாறினதுபோல், இவருடைய மனமும் மாறி ரத்தம் சிந்துகிற தொழிலை வெறுத்திருக்கலாம்' என்று ரா.ஸ்ரீ. தேசிகன் கட்டுரையொன்றில் கூறுவது முற்றும் பொருத்த மானதே.

புலவர்களுக்கு இவர் செய்யும் உபதேசத்திலே கண்டவர்களையெல்லாம் கற்பகம் என்று புகழ்வதைக் கண்டிக்கிறார். (முதற் பதிகம்: ஏழாவது பாட்டு). இப்பதிகத்து ஒன்பதாம் பாட்டிலே உண்மையான கற்பகம் பகவானே என்கிறார்:

குலம்தரும்; செல்வம் தந்திடும், அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும்; நீள்விசும்(பு) அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம்!

(நிலம் தரம் செய்யும் - தரைமட்ட மாக்கிவிடும். நீள் விசும்பு - பரமபதம். வலம் - பலம்.)

மக்கள் உள்ளங்களில் ஸர்வசாட்சியாக இருந்து பட்சபாதம் இல்லாமல் அருள் செய்ய முற்படுகிறான் பகவான் என்ற மகத்தான உண்மைக்கு ஒரு மகத்தான நினைவுக்குறி நாராயண நாமம். இந்த நாம ஸங்கீர்த்தனத்தால், நமது உள்ளத்திலே கற்பகமாக உள்ள இறைவன் அருளால் எல்லாப் பேறுகளும் பெறலாம் என்ற மகா விசுவாசத்தை இப்பாட்டிலே காண்கிறோம்.

Koviloor Digital Library

இந்த நாமத்தைத் துயரத்திலும் சொல்லலாம்; துயரம் ஒன்றும் இல்லாதபோதும் சொல்லலாம் என்கிறார். இந்த நாமஸங்கீர்த்தனம் துயரங்களுக்குப் பரிகாரமாவதுடன் வாழ்க்கைக்கு ஒரு விசேஷமான சுவையையும் அளிக்கிறதாம். 'எனக்கு என்றும் தேனும் பாலும் அமுதமுமாய திருமால் திருநாமம் நமோ நாராயணமே' என்பதும் இவர் திருவாக்கு.

இந்த அமுதமே கொடுவினைகளுக்குக் கொடிய விஷம் என்றும் உறுதி கூறுகிறார்:

நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராய ணாஎன்னும் நாமம்!

நாராயண நாமத்தை நற்றுணையாகக் கொண்டு திருமங்கை மன்னன் மகத்தான பகவத் பாகவத கைங்கரியங் களைத் தொடர்ந்து செய்யத்தக்க திவ்ய சக்தியைப் பெற்றா ரென்று கருதலாம். சக்திகளையெல்லாம் ஒருமுகப்படுத்திப் புதுவாழ்வு பெறவும், லட்சியத்திற்கே மனமொழி மெய்களை அர்ப்பணம் செய்யவும் மேன்மேலும் உற்சாகப்படுத்து வதற்காக இவருக்கு ஒரு சொல் - ஒரு மந்திரம் - தேவையாக இருந்தது. நாராயண நாமம் திருமந்திரமாகவும் மகா மந்திரமாகவும் உதவிற்று.

இந்த நாராயண நாமத்தை இவர் தமது புதிய யுத்தகோஷமாக்கிக் கொண்டார். 'நாவலோ நாவல்!', 'அறையோ அறை!' என்பவை இவரது பழைய கோஷங்கள். அந்தக் கோஷங்களுக்கு முன் எதிரிகள் ஓடி ஒளித்ததுபோல் இந்தப் போர் முழக்கத்திற்கு முன் கெட்ட எண்ணங்களும் தன்னல விருப்பங்களும் கவலையும் துயரமும் ஓட்டம் பிடித்தன எனலாம்.

'நல்லானுடைய நாமம் சொல்லில் நமோ நாராயணமே' என்று இவர் கூறுவதிலிருந்தும், பகவானுடைய திருப் பெயர்களில் இவரது உள்ளக் காதலைத் தூண்டியது நாராயண நாமம் என்று துணியலாம். திரௌபதிக்குத் திருநாமத்தின்

Koviloor Digital Library

மகிமையால் ஆபத்திலே புடைவை சுரந்து மானம் காத்ததுபோல் திருமங்கை மன்னன் என்ற பக்த சிரேஷ்டருக்கு நாராயண நாமத்தின் மகிமையால் பக்திக் காதலும் மகா விசுவாசமும் தொடர்ந்து சுரந்தன என்று ஊகிக்கலாம்.

இவருக்குக் குமுதவல்லி மீதிருந்த காதல், பக்தியைப்போல் இருந்ததென்று கதைகள் தெரிவிக்கின்றன. இவருடைய பக்தி காதலைப்போல் இருக்கிறது என்று பாசுரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய பக்திக் காதலர் இறைவன் தன்மீது கொண்டிருக்கும் காதலைத் தெரிந்து கொண்டதும் பிரமித்துப் போகிறார்.

'காதல் செய்து என் உள்ளம் கொண்ட கள்வனை இன்று கண்டுகொண்டேனே' என்று எவ்வளவு குதூகலமாய்க் கூறுகிறார்! பகவான் இவரைக் காதலித்து இவர் உள்ளத்தையும் களவாடி அபகரித்துக் கொண்டானாம். 'அந்தக் கள்ளன் கடைசியாக அகப்பட்டுக்கொண்டான்!' என்கிறார்.

நாராயண நாமந்தான் கள்ளனைக் காட்டிக் கொடுத்து விட்டது. இந்த நாமத்தை நினைக்க நினைக்க இதயம் நீராய் உருகியது; சொல்லும்போது குரல் கொஞ்சியது; தழுதழுத்தது; தடுமாறியது. கண் பனிசோர, ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

அந்த நாமம் தெளிவில்லாமல்தான் அப்போது வெளிப்பட்டது. ஆனால் அது என்ன, அவ்வளவு தெளிவு! அவ்வளவு ஒளி! உள்ளத்தின் ஆழத்திலே?

அந்த ஒளியிலே, எவ்வளவோ சேனைப் பெருமையும் வீரப் பெருமையும் செல்வப் பெருமையும், வள்ளன்மையின் பெருமையும் புலமைப் பெருமையும் புலவர் போற்றும் பெருமையும் எல்லாம் கள்ளத்தனமாகவே தோன்றின அவருக்கு. இவரும் வெளிப்பட்ட கள்வனைப்போல் நாணித் தலைகுனிந்தார். ஆனால் அதற்குமுன் அந்தக் கள்ளக் காதலனைக் காட்டிக் கொடுத்துவிட்டது மந்திரம்!

Koviloor Digital Library

7. கப்பலில் பாதிப் பாக்கு

இலங்கைத் தீவிலிருந்து பாக்குப் பொதிகளை ஏற்றிக் கொண்டு நாகப்பட்டினத்தை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு கப்பலில் ஒரு சமயம் திருமங்கை மன்னன் தமது பரிவாரத் துடன் யாத்திரை செய்தாராம். சாதுக்களென்று இவர்களுக்கு வர்த்தகன் இடம் கொடுத்திருந்தான்.

கப்பல் பாய்விரித்துத் துறைமுகத்தை விட்டதும், ஆழ்வாருடைய தோழர்களில் ஒருவனான தோலாவழக்கன் தன்னிடத்திலிருந்த கொட்டைப்பாக்கு ஒன்றைச் சீவி ஒரு பாதியைத் தின்றுவிட்டு மறுபாதியை வியாபாரிக்குக் காட்டிப் புன்னகை செய்து, ''ஐயா! நான் இந்தப் பாதிப் பாக்கையும் உம்முடைய கப்பலில் போட்டு வைக்கிறேன், பாரும்! தயவு செய்து அக்கரை சேர்ந்தவுடன் கொடுப்பீராக!'' என்று வேண்டிக்கொண்டான். வியாபாரியும், ''அதற்கென்ன அட்டி? அப்படியே செய்வோம்!'' என்று சிரித்தான்.

பிறகு தோலாவழக்கன், ''முதலாளியே! அதற்கு ஒரு சீட்டு வேணும்!'' என்று கேட்டான். வியாபாரி குலுக்கென்று நகைத்து, 'தமாஷான பேர்வழிதான்!' என்று எண்ணிக் கொண்டே, ''நல்லது ஐயா, நல்லது; அப்படியே தருவோம்!'' என்று ஒரு கைமுறி எழுதிக்கொடுத்தான்.

கப்பல் இக்கரை அடைந்ததும், நீட்டின மரத்திலேயே கூர்பார்ப்பதுபோல் பாக்குமூட்டைகளில் பாதியைக் கொடுத்து விடும்படி வழக்காடினான் தோலாவழக்கன். புண்ணிலே புளியிடுவதுபோல் இருந்த அந்த வார்த்தைகளைக் கேட்டு, ''என் கப்பலில் உமக்குப் பாதிப் பாக்கு உண்டு'' என்றுதானே கைப்பட எழுதிக் கொடுத்திருந்த முறிச்சீட்டை நினைத்துப் பார்த்ததும், வர்த்தகன் திடுக்கிட்டுப் போனானாம்.

Koviloor Digital Library

'எழுத்தும் பொய் சொல்லுமா?' என்று துறைமுக நீதிபதி பாக்கு மூட்டைகளுக்குக் காவலிட்டுப் பாதிப் பங்கிற்கு உரிய கிரயத்தைத் தோலாவழக்கனுக்கு வாங்கிக் கொடுத்தானாம். 'ஸ்ரீரங்கேச கைங்கரியத்திற்கு மனசோடு பணம் கொடுக்கமாட்டான் முதலாளி' என்று அப்படி அடா வழக்காடினான், தோலாவழக்கன் என்ற புனை பெயருக்குள் மறைந்திருந்த வீர வைஷ்ணவன்.

கதைக்குக் கால் உண்டா?

கப்பலில் பாதிப் பாக்குப் போட்ட இந்தக் கதை, பாசுரங்களின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளும் திருமங்கை யாழ்வார் வைபவத்திற்கும் குணாதிசயத்திற்கும் கொஞ்சமும் பொருந்துவதன்று. துர்விவகாரங்களை முதலாளிகளோடு சேர்த்து மடக்கிப் பரிகசிக்கும் ஒரு வேடிக்கைக் கதையை எதார்த்தமாகவே நடந்ததுபோல் சில குரு பரம்பரை வரலாறுகள் கூறுவது விந்தையினும் விந்தையே.

எனினும் ஸ்ரீவைஷ்ணவம் என்ற கப்பலில் (தோலா வழக்கனைப்போல் அல்ல) பாதிப் பாக்குப் போட்ட ஆழ்வார் திருமங்கையாழ்வார் என்று சொல்லலாம். ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் இயற்றிய நாலு பிரபந்தங்களையும் நாலு வேதங்கள் என்று கொண்டாடும் வைஷ்ணவர்கள், திருமங்கையாழ்வார் இயற்றிய ஆறு பிரபந்தங்களையும் அந்த வேதங்களின் ஆறு அங்கங்கள் என்று சொல்லுகிறர்களல்லவா?

நம்மாழ்வாரைப்போல் இவரும் அந்நாளில் கல்விக் களஞ்சியமாக விளங்கினார். ஒரு காலத்தில் வாட்போரைப் போல் வாதப்போரிலும் நிகரற்றவராயிருந்து, பிறகு அந்த இரண்டு விதமான போர்களாலும் பயனில்லையென்று கண்டு நம்மாழ்வாரைப் போலவே மகா ஸாத்விக மூர்த்தியாகி ஞானபக்தியைப் பரப்ப முயன்று அறியாமையோடும் மூடநம்பிக்கைகளோடும் ஒரு புதிய முறையில் போர் தொடங்கினார். வைஷ்ணவம் விளைந்த நிலமான திருப்பதிகள் அதிகமாகப் பாடிய ஆழ்வாரும் இவர்தாம்.

Koviloor Digital Library

எண்பத்தாறு விஷ்ணு ஸ்தலங்களுக்குச் சென்று இயன்ற கைங்கரியம் செய்து பாகவத தர்மத்தை நாடெங்கும் பிரகாசிக்கச் செய்தார். இவருக்கு அடுத்தபடியாக அதிக ஸ்தலங்களைப் பாடிய நம்மாழ்வார் முப்பத்தைந்து ஸ்தலங்களைத்தான் பாடியிருக்கிறார்.

ஸ்ரீரங்கேச கைங்கரியத்தில் தம்மை முழுக்க இழந்து ஸ்ரீரங்கத்தை அழகு செய்தவரும் திருமங்கையாழ்வா ரென்றால், இவர் வைஷ்ணவத்திற்குச் செய்த நன்மைகளை அளவிட்டுரைக்க முடியுமா?

ஸ்ரீவைஷ்ணவத்தின் ஸாரமான கொள்கைகளை வெளியிடுவதிலும் நம்மாழ்வாரோடு 'கப்பலில் பாதிப் பாக்குப் போட்டவர்' திருமங்கையாழ்வார் என்று சொல்ல வேண்டும். இறைவனுக்குச் சிறந்த திருப்பதி, தன்னை அடைந்தவர்களுடைய மனந்தான் என்றும், ஸர்வ ஸ்வாமி யாகவும், ஸர்வ ரட்சகனாகவும் இருப்பவன் 'அடியார்க்கு ஆ! ஆ! என்று இரங்கி ஸர்வசுலபனாகவும் இருக்கிறான் என்றும், அசுராவேசம் கொண்ட இந்திரியங்களின் கொடுங்கோன்மையை ஒழிப்பதற்கு ராஜபாதை, பகவானை உள்ளத்தில் வைத்து நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு பக்திக்காதலை அதிகரிக்கச் செய்வதுதான் என்றும், அதுவே உள்ளத்தை நித்தியானந்தமாக வைத்துக்கொள்ளும் வழியென்றும், தன்னொடு கலந்தவர்களுக்குப் பகவான் கற்பகம்போல் அருள் செய்கிறான் என்றும், குழந்தைகள் 'பசி பசி' யென்று அழுதாலும் அஜீர்ணம் முதலியவை ஒழிந்து உண்மையான பசி உண்டாகுமளவும் சோறிடாத தாய்போலப் பரம பக்தி பிறக்குமளவும் அவன் முகம் காட்டுவதில்லை யென்றும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் இவர் பாசுரங்கள் உபதேசிக்கின்றன.

வடிவு என்ற அழியா அழகுடைய பகவான், 'ஆற்றங்கரை வாழ்மரம்' போன்ற வாழ்க்கைக்கு உற்ற துணையாளனாவான். அவனே இம்மையும் மறுமையும்; நேற்று, இன்று, நாளை என்ற முக்காலமும் அவன்தான்.

பண்ணும் பாட்டும் அவன்; தமிழும் வடமொழியும் (வேறு மொழிகளும்) அவன்தான். நிதியும் கதியும் அவன்; 'அண்டம் ஆளும் மதி'யும், 'எமக்கு வீடாகிநின்ற மெய்ம்மை'யும் அவன்தான். இப்படியெல்லாம் உபதேசிக்கிறார் திருமங்கை மன்னன் தமது பாசுரங்கள் வாயிலாக.

கடுந்தவங்களில் நம்பிக்கையில்லாதவராயினும் கடவுள் என்ற இந்த 'மெய்ம்மை'யைக் காண்பதற்கு அன்பிலே ஐம்புலன் அடங்க வேண்டும் என்கிறார்.

அளப்பில்ஐம் புலன்அடக்கி
அன்(பு) அவர் கண்ணே வைத்துத்
துளக்கமில் சிந்தை செய்து
தோன்றலும் சுடர்விட்(டு) ஆங்கே
விளக்கினை விதியிற் காண்பார்,
மெய்ம்மையைக் காண்கிற் பாரே!

(அளப்பில் - அடக்கமுடியாத. துளக்கம் - அசைவு; அச்சம்.)

என்று உறுதி கூறுகிறார்.

இந்த மூர்த்தியை அன்பினால் ஞான நீராட்டியும், சந்தம் நிறைந்த சொற்கள் தொடுத்த பாமாலை சூட்டியும் வழிபடுகிறார் திருமங்கையாழ்வார். அறிஞர்கள், 'பிரமனே! சிவனே!' என்று தொழுவதும் ஸர்வாந்தர்யாமியான இந்த மூர்த்தியைத்தான் என்கிறார்.

மாறிப் பிறந்து புதுவாழ்வு பெற்றபின், இவருக்குக் கொள்கை வேறு, வாழ்க்கை வேறு என்பதில்லாமல் கொள்கையே வாழ்க்கையாகி வாழ்க்கையே கொள்கையும் ஆகிவிடுகிறது! 'எம்பெருமானே எனக்குத் தந்தை; ஸர்வவித பந்துவும் அவன்; எனக்கு அரசனும் அவன்தான்!' என்ற கொள்கையுடையவர், 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்!' என்ற ஸாத்விக வீர உணர்ச்சியோடுதான் வாழ்ந்திருக்கக் கூடும். எனவே, 'சோழ மகாராஜாவின் செல்வம் அவனுடையதன்று; பகவானுக்கும் அடியார்களுக்குமே சொந்தம்!' என்று கருதிச்செலவு செய்தார் என்ற கதைதோன்றியிருக்க வேண்டும்.

Koviloor Digital Library

நாளடைவில் பக்திக் காதல் முதிர்ந்ததும், பாம்போடு ஒரு கூரையில் பழகுவதுபோலத் தோன்றியிருக்க வேண்டும் லௌகிக வாழ்க்கை! அந்த நிலையில் பொருள், பதவி முதலியவற்றையெல்லாம் தியாகம் செய்து,

அற்றேன் வந்தடைந்தேன்,
அடியேனை ஆட்கொண் டருளே!

என்று சரணாகதி பண்ணுகிறார்.

இத்தகைய பக்தரைப் பித்தரென்றுதானே லௌகிக விவேகிகள் மதித்திருப்பார்கள்? குலசேகர மன்னருக்கும் கிடைத்த அநுபவந்தான் இது.

'அத்தா! அரியே!' என்(று) உன்னை அழைக்க,
பித்தா! என்று பேசுகின் றார்பிறர் என்னை:
முத்தே! மணிமா ணிக்கமே! முளைக்கின்ற
வித்தே! உனைஎங் ஙனம்நான் விடுகேனே?

என்று திருமங்கை மன்னன் இறைவனை நோக்கி முறையிடுவதைக் கேளுங்கள்.

பக்கத்தில் இருப்பவனைக் கண்டு அழைப்பதுபோல் முதிர்ந்த பக்தியோடு இறைவனை 'அப்பா!' என்று அழைத்ததும், பிறர் இவரைப் 'பித்தன்!' என்று அழைக்கத் துணிந்தார்களாம். பழைய திருமங்கை மன்னனல்லவா என்ற பயமே இல்லையாம். அவ்வளவு ஸாத்விகமாகிவிட்டார்! அவர்கள் இகழ்கிறார்களே என்றாவது, பழைய நிலையை நினைத்துப் பார்க்கிறாரா?

யார் என்ன சொன்னாலும் தம்முடைய கடவுளைவிட்டு விட்டு மனம், மீண்டும் செல்வத்தைப் பற்றவேயில்லை! கடவுளை ஜீவமாணிக்கமாகக் கண்டவர் அந்த ஒப்பற்ற புதிய செல்வத்தை எப்படி நழுவ விடுவார்?

இந்தப் புதிய ஸாத்விக வீரமே சிறந்த வீரம்; உண்மையான வீரம். இவருடைய விக்கிரகங்களிலெல்லாம்

Koviloor Digital Library

கையில் ஒரு வேல் காணப்படுகிறது. அந்த வேலை இவருடைய உண்மையான வீர வாழ்க்கைக்கு ஓர் அறிகுறியாகக் கருதலாம்.

ஒரு வைஷ்ணவ ஆசாரியர் வேலை அணைத்த கையால் தம்வினையை வீழ்த்திவிட வேணுமென்று திருமங்கையாழ்வாரைப் பிரார்த்திக்கிறார். பெருமாளிடம் 'வாள்வலியால் மந்திரம்' கொண்ட கதைகூட, இந்த ஆழ்வாரது வாழ்க்கையும் உபதேசமும் ஞான வீரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் உண்மையைப் புதைபொருளாக வெளியிடுகின்றனவென்று ஊகிக்கலாம்.

இந்தக் கதையைக் குறிப்பிட்டு வகுளாபரணபட்டர் என்பவர்.

... ... - வாழி
சுழிபொறித்த நீர்ப்பொன்னித் தென்னரங்கன் தன்னை
வழிபறித்த வாளன் வலி!

(பொன்னி - காவேரி.)

என்று அழகாக வாழ்த்தியிருக்கிறார், திருமங்கையாழ்வாரின் ஆத்ம வீரத்தை எனலாம். திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றாகிய வில்லின் அம்சமாக இந்த ஆழ்வார் அவதரித்தார் என்ற கதையிலும் இவர் ஞான வீரர் என்ற உண்மையைத்தான் பார்க்கவேண்டும்.

சிறப்பாக இந்த ஞான வீரரின் ஆத்ம சக்தியினாலும், பொதுவாகத் தொண்டை நாடு சோழ நாடுகளில் தோன்றிய ஆழ்வார்களின் ஆத்ம சக்தியினாலும், 'மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி' ஒரு பக்தி மதமாக்கிப் பொய்கையாழ்வார் பிரசாரம் செய்யத் தொடங்கிய ஸ்ரீவைஷ்ணவக் கப்பலில் 'பாதிப் பாக்கு' விழுந்துவிட்டதென்று கருதுதல் கூடும்.

Koviloor Digital Library

8. பெரிய கோயில் அழகு செய்த பெரியார்

'பெரிய கோயிலுக்குத் திருமதில் கட்டுவதென்றால் எவ்வளவு பெரிய திருப்பணி!' என்று மக்கள் கூடிப் பேசினார்கள். 'இவர் எவ்வளவு பெரிய பக்தராயிருக்க வேண்டும்!' என்று சிலர் வியந்தார்கள். வேறு சிலர், 'இவ்வளவு பெரிய காரியத்தில் துணிந்து தலையிடுவதற்குப் பக்தி மட்டும் போதுமா? எவ்வளவு செல்வமும் செல்வாக்கும் வேண்டும்! கோபுரம், மண்டபம், பிராகாரம் முதலான திருப்பணிகளையும் செய்து வருகிறாராமே!' என்று ஆச்சரியப் பட்டார்கள்.

நகர வாசிகளும் தேசாந்தரிகளும், ''இன்று மதில் எவ்வளவு தூரம் வந்திருக்கிறது? கட்டி முடிய இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ?'' என்று ஒருவரையொருவர் கேட்ட வண்ணமாயிருந்தார்கள். பல இடங்களிலுமுள்ள பக்தர்களும் இந்தப் பெரும்பணி குறித்துக் கேள்வியுற்று நேரில் பார்த்துப்போக வேண்டுமென்று திருவரங்கத்திற்கு வந்து சேர்ந்த வண்ணமாயிருந்தார்கள்.

ஒரு சமயம் மதிலைப் பார்க்க வந்தவர்கள், ''அந்தப் பிராகாரம் இப்போது எவ்வளவு அழகாயிருக்கிறது! மதிலை அடுத்துத்தெருக்களும் அழகாக நிர்மாணம் செய்யப்படும்'' என்று குதூகலமாகப் பேசிக்கொண்டார்கள். அவர்களில் சிலர் 'நீள் மதிள் அரங்கத்து அம்மான்' என்று திருப்பாணாழ்வார் பாடியிருந்த அந்த மதில் போய்விட்டதே என்றுதான் இவர் கல்லால் இப்போது இந்தப் பெரிய மதிலைக் கட்டி வருகிறார்' என்று சொன்னார்கள்.

Koviloor Digital Library

சிலர் மட்டும், ''அந்த அழகான நந்தவனம் போய் விடுமே; ஐயோ! அவருக்கு உயிரல்லவா புஷ்பத்தொண்டு?'' என்று இரக்கப்பட்டார்கள். அதற்கு மற்றவர்கள், ''அவர் பரமசாது; குடிசை தூக்க வேண்டியதுதான். எவ்வளவு சிரமத்தோடு இந்தப் பெரும்பணி நடந்து வருகிறது. நந்தவனத்தை வேறு எங்கேயாவது அமைத்துக்கொள்ளலாமே; அதுவா பெரிய காரியம்? மேலும் இவர் அரசரல்லவா? இவருடைய அதிகார ஆடம்பர வைபவங்கள் கொஞ்சமா?' என்று பதில் சொன்னார்கள்.

மதில் நந்தவனத்துக்கு நேரே வந்துவிட்டது. ஆனால் பலரும் எதிர்பார்த்தபடி அரசர் நந்தவனத்தை அழித்துக் குறுக்கே கட்டிக்கொண்டு போகவில்லை. ''அந்தப் புஷ்பகைங் கரியத்திற்கு இடையூறு இல்லாமலே மதிலை ஒதுக்கிக் கட்டிக்கொண்டு போகவேண்டும். அமைதியாக வேலை செய்யுங்கள்'' என்று தொழிலாளிகளுக்குக் கட்டளையிட்டார்.

பிறகு பூந்தோட்டத்திற்குள்ளே போனார். அத்தோட்டத் தின் இயற்கையழகு திருமங்கை மன்னன் உள்ளத்தைப் பரவசமாக்கியது. 'என்ன தெய்வ பரிமளம்! இந்தப் பணி புரியும் பெரியாரின் பக்திப் பேரழகல்லவா இப்படி ஒளி வீசுகிறது! மணம் வீசுகிறது!' என்றெல்லாம் தமக்குள் தாமே சொல்லிக் கொண்டுபோனார்.

குடிசைக்கு வெளியே மாலை கட்டிக்கொண்டிருந்த தொண்டு கிழவரைக் கண்ணுற்றதும் அரசர் பயபக்தியுடன் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தார். 'அடியவர்கள் தம் அடியான்' என்று தம்மை அறிவித்துக்கொண்டு அடிவீழ்ந்து வணங்கிய அரசரை அக்கிழவனாரும் ஏதோ ஒரு நிஷ்டையிலிருந்து விழித்துக் கொண்டதுபோல் எழுந்து வணங்கினார்.

இருவரும் அளவளாவிக்கொண்டார்கள். அரசர் செய்து வந்த மகா கைங்கரியத்தைப் பெரிதும் பாராட்டிக் கொண் டிருந்த கிழவர், இடத்தைக் காலி செய்துவிடத் தயாராகவே

Koviloor Digital Library

இருந்தார். இப்போது நடந்ததை அறிந்து கொண்டதும் கிழவர் அந்த அருளை வியந்து அரசரை, 'அருள் மாரி' என்று வாய்குளிர அழைத்தார்.

இந்த அரசருக்குத்தான் எத்தனை பட்டப்பெயர்கள்! 'ஆலிநாடன், அடையார் சீயம், மங்கை வேந்தன், கலியன், கலிகன்றி, ஆடல்மா வலவன்' என்றெல்லாம் அழைக்கப் பெற்றவர் இவர். 'அருள் மாரி' என்ற பட்டமும் ஏற்கனவே பெற்றிருந்தார். எனினும் கிழவனார் அருள் சுரந்து தம்மை 'அருள் மாரி' என்று அழைத்ததும், அவர் தமது திருப் பணியைப் புகழ்ந்து பேசியதும் இவரை நாணித் தலை குனியச் செய்துவிட்டன. உள்ளமோ தேனூறித் தித்தித்தது.

கிழவர் வேறு யாருமல்ல; அரங்கனுக்குப் பூமாலையும் பாமாலையும் சூட்டிக்கொண்டிருந்த தொண்டரடிப் பொடியாழ்வார்தாம். இவரது மகிமையைத் திருமங்கை யாழ்வார் கேள்விப்பட்டிருந்தார் என்பது நிச்சயம்.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாடல்களையும் திருமங்கை மன்னன் கேட்டுக் கேட்டுப் பரவசமாயிருந்தார் என்று கருதலாம். திருமங்கை மன்னனின் பக்தியை வளர்த்த தில் தொண்டரடிப்பொடிகளின் பிரபந்தங்களும் ஒரு முக்கிய அம்சமாகும் என்பதில் ஐயமில்லை.

தொண்டரடிப்பொடி யாழ்வாரின் பாடல்களில் ஈடுபட்டிருந்த திருமங்கை மன்னன் அப்பாடல்களின் பொருளைத் தமது பிரபந்தங்களில் எடுத்தாளுகிறார். பொருளை மட்டுமா?

சுரும்(பு)அமர் சோலை
சூழ்ந்த அரங்கமா
கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்(டு)என்
கண்ணிணை களிக்கு மாறே!

Koviloor Digital Library

(சுரும்பு - வண்டுகள், அரங்கமா கோயில் - அரங்கம் என்ற பெரிய கோயில். கண்இணை - இரண்டு கண்களும். களிக்கும் ஆறே - களிக்கும் விதம்.)

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியிருக்கும் இச்சொற் களையும் அன்போடு தாம் பாடியுள்ள திருக்குறுந் தாண்டகத்தில் அப்படியே எடுத்தாளுகிறார்.

தொண்டரடிப்பொடிகளின் உருக்கமான பாடல்களைக் கேட்டுக்கேட்டு ஸ்ரீரங்கம் என்ற நித்திய வஸந்தமான சோலையில் கண்ணால் பருகும் கரும்பாயிருக்கும் பெருமான்மீது இவருக்கு விசேஷபக்தி ஏற்பட்டிருக்கக்கூடும் என்று ஊகிப்பது பொருத்தந்தான். இக்கரும்பைத் 'தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு' என்றும் திருமங்கை மன்னன் வேறோர் இடத்தில் குறிப்பிட்டிருக் கிறார்.

தொண்டரடிப்பொடிகள் போன்ற தொண்டர்களையே திருமங்கை மன்னன் உள்ளத்தில் கொண்டு, அவர்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினைத் தமது சிந்தையிலும் பயிர் செய்துகொள்ள விரும்பினார் என்று கருதலாம். பகவானைச் சிந்திக்க வல்ல நெஞ்சுடைய பாகவதர்களே தம்மை ஆளும் அரசர்கள் என்பதல்லவா இவர் கொள்கை?

பகவத் பக்தியைக் காட்டிலும் பாகவதாபிமானமே மேலானது; பகவத் கைங்கரியத்தைக் காட்டிலும் பாகவத கைங்கரியமே மேலானது என்ற கொள்கையை இவரும் பெரிதும் போற்றி வந்தார். ஸ்ரீரங்கநாதனின் அடிக்கீழ் அவன் உகந்த பணியும் அடியார் உகந்த பணியும் செய்து வாழ்வதே வாழ்வு எனத் துணிந்த திருமங்கை மன்னன், அப்படிச் செய்யாமல் வேறு சாதனங்களையும் வேஷங்களையும் மேற்கொள்ளுகிறவர்கள் அஸ்திவாரத்தைக் கவனியாமல் வெளிச்சுவரை அலங்கரிப்பவர்களே என்ற கருத்தமைந்த

Koviloor Digital Library

தொண்டிரடிப் பொடியாழ்வாரின் பாடலால் வசீகரிக்கப் பெற்றிருக்க வேண்டும்.

இந்தக் கொள்கை திருமங்கை மன்னனின் உள்ளத்திலே ஊறிக்கிடந்து நாளடைவில் மனக்கண்முன் ஓர் உயர்ந்த லட்சியமாக உதயம் செய்திருக்க வேண்டும்; இந்த லட்சியத்திற்கே இவர் தம்மை ஒப்படைத்துவிட்டார்.

அரங்கனுக்குத் தருமமே மதிலாயிருக்கிறதென்று தொண்டரடிப்பொடி யாழ்வார் பாடியிருந்தார். இந்தப் பெருமானுக்கு ஸ்தூலமாகவும் கல்லால் மதில் முதலியவை அமைக்க வேண்டுமென்று துணிந்தார் திருமங்கை மன்னன். திருப்பாணாழ்வார் குறிப்பிட்டிருந்த பழைய மதிலின் ஸ்தானத்தில் ஒரு புதிய பெரிய கல்மதிலைக் கட்டி,

நுமர்களைப் பழிப்ப ராகில்,
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்,
மதிள்திரு அரங்கத் தானே!

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணருக்கு அருள் சுரந்த அரங்கினைக் கொண்டாடும்போது திருமங்கை மன்னனது திருமதில் கைங்கரியத்தையும் குறிப்பிட்டிருக்கிறார் எனலாம்.

இப்படித் தொண்டரடிப்பொடிகளும் பாராட்டும்படி கைங்கரியம் பூர்த்தியடைந்துவிட்டது. எனினும் திருமங்கை யாழ்வார் குதூகலமடையவில்லையாம். 'நாம் என்ன செய்து விட்டோம் பிரமாதமாக? ஏன் இப்படி எல்லாரும் போற்ற வேண்டும்?' என்றே எண்ணமிட்டார்.

ஒருநாள் நகரமெங்கும் கொடிகள் பறந்துகொண்டிருக் கின்றன. எள் போட்டால் எள் விழவும் இடமில்லாமல் கூடியிருக்கும் ஜனத்திரளுக்கிடையே திருமங்கையாழ்வார் மெள்ள மெள்ளச் சந்நிதிக்குப் போகிறார்.

Koviloor Digital Library

'அங்கமலத் தடவயல்சூழ் ஆலிநாடன் வந்தார்! கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன் வந்தார்! வாள்வீசும் பரகாலன் வந்தார்! ஆடல்மா வலவன் வந்தார்! கலங்கல் இல்லாப் புகழாளர் வந்தார்! பொய்ம்மொழி ஒன்றில்லாத மெய்ம்மையாளர் வந்தார்!' என்ற கோஷங்களும், 'அருள் மாரியே வருக வருக! ஜய ஜய விஜயீபவ ராஜேந்திரா!' என்ற கோஷங்களும் விண்ணைப் பிளக்கின்றன.

சந்நிதியில் இருந்தவர்களெல்லாம், ''இவரே பாக்கிய சாலி!'' என்று ஒரு முகமாக வாழ்த்துகிறர்கள். ''இவரே அருட்கலியன்! இயற்கையழகு வாய்ந்த திருவரங்கப் பெருநகரைச் செயற்கையழகுகளாலும் அலங்கரித்த அருள்மாரி இவரே!'' என்று போற்றுகிறார்கள்.

திருமங்கையாழ்வாரோ ஸ்ரீரங்க நாதனை வணங்கி யெழுந்து, ''அடியேன் பாக்கியமில்லாதவன்!'' என்று வருந்துகிறார். சந்நிதியில் உள்ளவர்கள் ஆச்சரியப் படுகிறார்கள்.

திருமங்கையாழ்வார் தழுதழுத்த குரலில், ''தேவரீருக்குத் தங்கத்தினால் மதில் முதலியவை கட்டவேண்டியிருக்க, அதற்குச் சக்தியற்றவனாய்க் கல்லினால் கட்டினேனே!'' என்று கண்ணீர் சொரிய, விண்ணப்பம் செய்து கொண்டு வருந்தி நிற்கிறார். உடனே ஓர் அசரீரி பிறக்கிறதாம்; ''ஆழ்வாரே! உம்முடைய தங்கமான உள்ளத்தைப்போல் நீர் செய்த பணிகளையும் நாம் தங்கமாகவே அங்கீகரித்தோம்!'' என்று.

அப்போது - என்ன ஆச்சரியம்! - விமானம், மண்டபம், பிராகாரம் முதலியவையெல்லாம் ஒரு கணம் தங்கமாகவே ஜொலிக்கின்றன. திருமங்கை மன்னன் பாடுகிறார்:

செம்பொன்ஆ ரும்மதிள் சூழ்ந்(து)அழ
கார்தென் அரங்கமே

(ஆரும் - ஒத்திருக்கும். அழகுஆர் - அழகு பொருந்திய.)

Koviloor Digital Library

ஆயபொன் மாமதிள் சூழ்ந்(து)அழ
கார்தென் அரங்கமே

(ஆய - ஆகிய.)

திருமங்கையாழ்வார் சில வருஷம் திருவரங்கத்திலே தங்கித் தமது பாகவத கைங்கரியம் மூலமாகவும், தமது பாடல்தொண்டு மூலமாகவும் பெரிய கோயிலை மேலும் அழகு செய்து அரங்கனது புகழை மேலும் பிரகாசிப்பித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீரங்கநாதனுடைய ஆச்சரிய சக்தியைத் தாம் அநுபவித்து அறிந்தபடி பிரசாரம் செய்தார். தாம் கண்ட இயற்கையழகுகளை யெல்லாம் அரங்கனது அருளழகிற்கு அறிகுறியாகக் கண்டார். காவிரி வெள்ளமும் அவனது அருள் வெள்ளத்திற்கு அறிகுறியாகவே பெருகியது.

'வயல் சூழ் தென்னரங்கமே!' என்றும், 'புனல் சூழ் தென்னரங்கமே!' என்றும் பாடினார்.

வண்டுபா டும்மது வார்புனல்
வந்திழி காவிரி,
அண்டம் நாறும் பொழில்சூழ்ந்(து)
அழகார்தென் அரங்கமே

(மதுவார் - தேன் ஒழுகுகிற. புனல் வந்து இழி - நீர் வந்து பெருகுகிற. அண்டம் - ஆகாசம். நாறும் - பரிமளிக்கிற, பொழில் - சோலைகள்.)

என்று பாடினார்.

'அழகன் இடம்... ... அழகார் தென் அரங்கமே' என்று பாடினார். பக்தர்கள் விசேஷ நட்புரிமையுடன் கலந்து வணங்கிய அழகைக் கண்டு மகிழ்ந்து,

தேனும் பாலும் கலந்தன்னவர்
சேர்தென் அரங்கமே

(கலந்தன்னவர் - ஒன்றாகச் சேர்ந்தது போலச் சேர்ந்து கொண்டிருக்கும் பக்தர்கள். சேர் - சேர்ந்திருக்கப்பெற்ற) என்று பாடினார்.

Koviloor Digital Library

திருவரங்கம் பெரிய கோயிலில் இவர் தங்கிப் பணிபுரிந்து வந்த காலத்திலே அழகிய மணவாளன்மீது அளவற்ற பக்திக் காதல் பெருகவே, அது ஐந்து திருமொழிகள் அல்லது பதிகங்களாக வெளிப்பட்டது, பரகாலர் பரகால நாயகியாகத் தம்மைப் பாவித்துக்கொண்டும் பக்தி செய்யத் தொடங்கினார்.

அழகிய மணவாளன்மீது தன் மகள் கொண்ட காதலைத் தாய் எடுத்துரைப்பது போலப் பாடியிருக்கிறார்.

திருவாளன் என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக்கேனே?

(திருவாளன் - பகவான்.)

என்றும்,

மாமாயன் என்மகளைச் செய்தனகள்
மங்கைமீர்! மதிக்கிலேனே

(மங்கைமீர் - மங்கைமார்களே. மதிக்கிலேன் - அளவிட்டுச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.)

என்றும் பாடியிருக்கிறார்.

இத்தகைய காதல்நெறியிலே, 'புலன் ஐந்தும் செலவைத்து' சத்திய சொரூபமாகிய இறைவனை அழகனாக இவர் கண்டுகொண்டார்:

பொய்வண்ணம் மனத்தகற்றிப்
புலன்ஐந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை,
மைவண்ணம் கருமுகில்போல்
திகழ்வண்ணம் மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனையான்
கண்டதுதென் அரங்கத்தே.

Koviloor Digital Library

(செலவைத்து - செல்லவைத்து. மைவண்ணம் - அஞ்சனத்தின் நிறம். கருமுகில் - காளமேகம். மரதகத்தின் அவ் வண்ண வண்ணனை - மரகதப் பச்சையின் அத்தகைய நிறத்தையும் தனக்கு நிறமாக உள்ள பெருமானை.)

இத்தகைய பாடல் தொண்டினால் இப்பெரியார் பெரிய கோயிலுக்குச் செய்திருக்கும் அழகு என்றும் வாடாத அழகாக - பெரிய கோயிலின், உண்மையான தங்க மதிலாக - இன்றும் ஜொலித்துக்கொண்டிருக்கிறது.

தம்முடைய லட்சியமாகிய கைங்கரியம் - பாகவத கைங்கரியமானாலும் சரி, பகவத் கைங்கரியமானாலும் சரி - இனிது நிறைவேறுவதற்குத் தம்மால் இயன்ற முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டார் திருமங்கையாழ்வார். அதற்குப் பொருள் - பெரும் பொருள் - மேலும் மேலும் பொருள் வேண்டுமல்லவா? அதை எப்படியாவது சேர்த்துக் கைங்கரியத்தைத் தடையற நடப்பிக்கத் துணிந்தாரென்று குருபரம்பரைக் கதைகள் சொல்லுகின்றன.

இக்கதைகளில் சில, தற்கால அபிப்பிராயங்களுக்கும் லட்சியங்களுக்கும் பொருத்தமில்லாமல் இருக்கின்றன. வேறு சில கதைகளிலிருந்து தற்காலத் தமிழரும், 'உயர்ந்த லட்சியத்திற்காக வாழ்க்கை முழுமையும் அர்ப்பணம் செய்யப்பட வேண்டும்' என்பது போன்ற சில பாடங்களையும் கற்றுக் கொள்ளலாம்.

தமது பகவத் பாகவத கைங்கரியங்களாலும் ஆலயத் திருப்பணிகளாலும் பாடல் தொண்டினாலும் திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கம் என்ற புண்ணியஸ்தலத்தைப் பாரததேசமெங்கும் புகழ்பெற்று விளங்கும் பிரபல ஸ்தலங்களில் ஒன்றாக்கினார். ஸ்ரீரங்கநாதனுடைய பேரையும் புகழையும் பரப்புவதற்காகத் தமது வாழ்க்கையின் முக்கியமான பகுதியை அர்ப்பணம் செய்த இவர், தமது லட்சியத்தை

Koviloor Digital Library

எப்போதும் மனக்கண்ணால் இமையாது நோக்கிக்கொண்டே இருந்தார்.

சுயநலமே கருதாமல் ஒரே புத்தியோடு தமது கனவை நனவாக்க முயன்று, தெய்விக உற்சாகத்தோடு கைங்கரியம் செய்து வந்த திருமங்கை மன்னன், பன்னிரண்டு ஆழ்வார் களில் ஒருவராகப் போற்றப்படுகிறார். இவருடைய புகழும் பாரததேச மெங்கும் பரவியிருக்கிறது.

லட்சியத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிட வேண்டும் என்ற உண்மை சாமானியமானதா? இது பக்தி மதத்தின் ஸாரமான கொள்கைகளில் ஒன்று. இதை வாசா ஞானமாக அறிந்து வாசா கைங்கரியம் செய்வது போதாது என்பது திருமங்கையாழ்வார் கதையின் படிப்பினை.

Koviloor Digital Library

9. திருமங்கை மன்னனும் திருஞானசம்பந்தரும்

'ஆலிநாடர் வந்தார்! அருள்மாரி வந்தார்! மங்கை வேந்தர் வந்தார்! நம் கலியர் வந்தார்! நாலுகவிப் பெருமாள் வந்தார்! நீல நிறத்து நிமலர் வந்தார்! கொற்றவேல் பரகாலர் வந்தார்!' என்று விருதாவளிகளை எடுத்து முழக்கிக்கொண்டு வந்தார்கள் பரிஜனங்கள். 'முத்தமிழுக்கும் நாலு வேதங்களுக்கும் மன்னர் இவரே!' என்று சிலர் எக்காளங்களையும் சிலர் சங்குகளையும் எடுத்து ஊதினார்கள். வேறு சிலர் ஜயபேரிகொட்டி ஜயகோஷம் செய்தார்கள்.

வடஇந்தியாவில் சில முக்கியமான க்ஷேத்திரங்களைத் தரிசித்துத் தென்இந்தியாவிலும் யாத்திரை செய்து விஷ்ணு கோயில்களைத் தரிசித்துக்கொண்டு, வேதநிந்தனை, பாகவத நிந்தனை செய்த புறச்சமயிகளை வாதில் வென்று ஸ்ரீவைஷ்ண வத்தைப் பிரகாசிப்பித்து வரும் திருமங்கையாழ்வார் ஊருக்குத் திரும்பிவிட்டாரென்றால், உற்சாகத்திற்குக் குறைவுண்டா?

சீர்காழியை நெருங்கிவிட்டது பரகாலப் பெரு வெள்ளம். அப்போது அந்த ஊர்வாசிகளில் சிலர் திடீரென்று தோன்றி, ''எங்கள் சமயாசாரியார் உள்ள இடத்தில் நீங்கள் இப்படியெல்லாம் விருது ஊதிப் போகலாகாது!'' என்று தடுத்தார்களாம். பிறகு ஆழ்வாரும் நாயனாரும் சந்தித்தபோது, சீடர்கள் ஒரு பெரிய வாதப்போரை எதிர்பார்த்தார்கள்.

சம்பந்தமூர்த்திகளோ விளையாட்டாக, ''ஒரு குறளைப் பாடுங்கள், இவர்கள் தங்கள் கவித்திறத்தைக் காணும்படி!'' என்று கேட்டுக்கொண்டாராம். அவர் குறிப்பை அறிந்த

Koviloor Digital Library

திருமங்கை மன்னனும் 'ஒரு குறளாய்' என்று தொடங்கி, மகாவிஷ்ணுவின் வாமனாவதாரத்தையும், அந்த க்ஷேத்திரத் தையும் ஒருங்கே சிறப்பித்து ஒரு விருத்தம் பாடினாராம். அப்படியே மளமளவென்று பத்து விருத்தங்களைப் பாடி அவற்றை அந்த ஊர்ப் பெருமாளுக்கு ஒரு தமிழ்மாலை யாக்கினார்.

இந்த ஆழ்வார் பாடல்களில் பலவும் சைவர்களுக்குச் சம்பந்தர் பாடல்களைப்போல் கம்பீரமாக ஒலித்தன. இயற்கை யழகுகளும் இறைவனுடைய அழகுகளும் அலங்காரமான சப்த ஜாலங்களோடு கணீர் கணீர் என்று வெண்கல மணி அடிப்பது போன்ற குரலில் வெளிப்பட்டதைக் கேட்டவர்கள், 'தகும் தகும், இவருக்கு இந்த விருதுகளெல்லாம்!' என்று ஏக கண்டமாய் ஒப்புக்கொண்டு இவரை மனமுவந்து உபசரித் தார்களாம்.

அப்பால் திருஞானசம்பந்தர் ஆழ்வாரை,

படி உண்ட பெருமானைப்
பறித்துப் பாடிப்
பதம் பெற்ற பெருமானே!

(படி - பூமி. படி உண்ட பெருமான் - விஷ்ணு. பறித்து - வழிப்பறி செய்து.)

என்று அன்பாகவும் மரியாதையாகவும் அழைத்து, காதலன் வரவு கண்ட காதலியின் நிலையைத் தாய் அறிவிப்பதாக ஏதோ ஒரு கதை சொல்வது போல்,

... ...தமியேன் பெற்ற
கொடி ஒன்று நின்பவனிக்(கு)
எதிரே சென்று
கும்பிட்டாள், உயிர் ஒன்றும்
கொடுவந் தாளே!

(தமியேன் - தனித்திருக்கும் நான். நின் - உன். பவனி - உலா வருகை. கொடு - கொண்டு.)

என்று சொன்னாராம்.

Koviloor Digital Library

''திருமாலையே வழிப்பறி செய்து அவருடைய பரமபத ராஜ்யத்தையும் பறித்துக்கொண்டவரே! உம்முடைய பவனிக்கு எதிரேபோன என் பெண்கொடியையும் இப்படி வழிப்பறி செய்யலாமா? திரும்பி வரும்போது உயிரொன்று தானே கொண்டு வந்தாள்! ஐயோ, அவள் இதயத்தையும் பறித்துக்கொண்டீரே!'' என்ற தாயார் வாக்கில், தம்முடைய இதயத்தையே மறைத்து வைத்து, அவர் வருகை தம்மை எப்படி உருக்கிவிட்டது என்பதைத் திருஞானசம்பந்தர் ஒருவாறு ஹாஸ்ய உணர்ச்சியோடு கலந்து வெளியிட்டார் என்று ஊகித்துக்கொள்ளலாம்.

திருமங்கையாழ்வாரும், தம்மைப்போல் நாஸ்திக வாதங்களைக் கண்டித்து நாட்டிலே அன்புக் கொள்கையைப் பரப்பி வந்த திருஞானசம்பந்தரைக் 'காணவேணும், காண வேணும்!' என்று தவித்துக்கொண்டிருந்தாராம். அந்தத் தவிப்பைத் தாமும் காதல் துறையிலே அமைத்து வெளியிட விரும்பி,

அருள்குலவு மயிலைதனில்
அங்கத்தைப் பூம்பாவை
ஆக்கி னோம்என்(று)
இருக்கும்அது தக(வு)அன்று
நிலவால் வெந்த
இயல்பு தானே!

(குலவு - விளங்குகிற. மயிலை - மயிலாப்பூர். அங்கம் - உடம்பு. தகவு - தகுதி, பெருமை.)

என்று காதலனைக் காணாது வருந்திய காதலியின் தன்மையைத் தாய் அறிவிப்பதுபோலத் தாமும் ஒரு கதை சொன்னாராம்.

ஆழ்வார் கடவுளையே கொள்ளையடித்துப் பதவிபெற்ற அற்புதத்தை நாயனார் கேள்விப்பட்டிருந்தது போல், மயிலாப்பூரில் (பாம்பு கடித்து இறந்து) தகனம்

Koviloor Digital Library

செய்யப்பட்ட பூம்பாவை என்ற பெண்ணின் எலும்புகளையும் சாம்பலையும் இவர் முன்போல் பெண்ணாக்கி வைத்த அற்புதத்தையும் ஆழ்வார் கேள்விப்பட்டிருந்தாராம். எனவே, தாமும் அதை வைத்துக்கொண்டு கொஞ்சம் ஹாஸ்யமாகவே, ''அனலால் வெந்த உடம்பைப் பூம்பாவை ஆக்கிய அற்புதங் கூட உமது தகுதிக்கும் பெருமைக்கும் ஏற்றதன்று; உம்மை நினைத்துக்கொண்டிருந்தவளோ நிலவினாலேயே வெந்து போனாள்; இவளையும் ஒரு பெண்ணாக்கி வைக்கவேணும்!'' என்று தமது நட்புக்காதலைக் குறிப்பிட்டாராம்.

இந்த ஆழ்வார் நாயனார் நட்பும் சந்திப்பும் தமிழர்கள் மனோபாவத்திலே இப்படி ஒரு ரஸமான கதையாக வளர்ந் திருக்கின்றன. வைஷ்ணவ குருபரம்பரைகளெல்லாம் சந்திப்பை ஒரு முகமாக வற்புறுத்துகின்றன. சிநேகத்தையும் வற்புறுத்துகிறது திவ்விய சூரி சரிதம் என்ற ' ழைய நூல்.

இருவரும் வேதோபநிஷதங்களை மூலபொக்கிஷமாகக் கொண்ட ஆஸ்திக சமயத்தை நிலைநிறுத்த அரும்பாடுபட்டார் கள். இவர்களுடைய பக்திக்கொள்கைகளில் நாம் ஒற்றுமை காண்பதுபோல், பாடல்களின் அமைப்பு முறைகளிலும், சாதாரண விஷயங்களையும் வாக்கு வளத்தால் கனக்கப் பேசும் தோரணையிலும், வருணனைகளிலுங்கூட ஒற்றுமை காணலாம்.

கொல்லை முல்லை
மெல்லரும்(பு) ஈனும்

என்ற சம்பந்தமூர்த்திகளின் குற்றால வருணனை அப்படியே திருமங்கை மன்னன் வாக்கில்.

கொல்லை முல்லை
மெல்லரும்(பு) ஈனும்
குறுங்குடியே

என்ற திருக்குறுங்குடி வருணனை யாகிவிடுகிறது.

A. No. 26736

Koviloor Digital Library

இவ்வளவு ஒற்றுமையோடு அடுத்த ஊர்களில் வாழ்ந்து, தேசப் பிரசித்தி பெற்ற மெய்யன்பர்கள் இருவரும் இதய ஒற்றுமையான பரஸ்பர நேசத்தோடு அளவளாவிக் கொண்டார்கள் என்பது சைவ வைஷ்ணவ சமரசத்தை நாடும் தமிழருள்ளங்களைக் குளிரச் செய்கிறது. ஆனால் இந்த நட்பு அந்த நாளிலேயே சைவ வைஷ்ணவ நட்பாக மலராதது தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டந்தான்.

திருமங்கையாழ்வாரின் வரலாறு கூறும் நூல்களெல்லாம் திருமங்கை மன்னன் திருஞானசம்பந்தரைச் சந்தித்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதால் இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடும் என்று நம்பலாம். சம்பந்தர் காலம் ஏழாம் நூற்றாண்டு என்பதை முடிந்த முடிபாக ஒப்புக் கொண்டால், ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த திருமங்கை மன்னன் திருஞானசம்பந்தரை ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சந்தித்திருக்கக்கூடும்.

'இச்சிவனடியார்க்கு 16 வயது கூறப்படுவதால், கி.பி. 670 முதல் 686 வரை இவர் வாழ்நாளாக்கிக் கொள்வது... ... பெரிதும் ஏற்புடையதாகும்' என்று திரு.மு. இராகவையங்கார் கூறுவதை ஒப்புக்கொள்ளலாமென்றே தோன்றுகிறது. இக்காலம் திருமங்கையாழ்வார் வாழ்நாளின் முற்பகுதியாக இருக்க வேண்டும் என்று இந்த ஆராய்ச்சி அறிஞர் ஊகஞ் செய்வதையும் ஒப்புக்கொள்ளலாம்.

திருமங்கை மன்னனைக் கி.பி. 660 - இல் பிறந்தவராகக் கொண்டு இவர் தமது இருபத்தைந்தாம் வயதில் - அதாவது கி.பி. 685 - இல் சுமார் பதினைந்து வயதுள்ள திருஞான சம்பந்தரைச் சந்தித்தார் என்றுகூட ஊகஞ் செய்து பார்த்திருக் கிறார் திரு.மு. இராகவையங்கார். அப்பர் சுவாமிகள் வயதுமுதிர்ந்த நிலையில் சம்பந்தரைச் சந்தித்தாரென்றால், திருமங்கை மன்னன் தமது யௌவனப் பருவத்தில் சைவ உலகின் தனி நாயகமாகிய இளைஞரைச் சந்தித்தார் எனலாம்.

Koviloor Digital Library

வேதநெறி தழைத்தோங்கவும் சைவத்துறை விளங்கவும் திருஞானசம்பந்தர் தோன்றித் தொண்டுபுரிந்தார் என்பர் சேக்கிழார். ஸ்ரீவைஷ்ணவத்துறை விளங்கவும், வேதநெறி தழைத்தோங்கவும் தோன்றித் தொண்டாற்றிய திருமங்கை மன்னன், சம்பந்தரின் ஊருக்கு அருகிலுள்ள ஊரைச் சேர்ந்தவர் என்ற இயற்கை நிகழ்ச்சியையே, சைவம் வைஷ்ணவம் என்ற இரண்டு பக்தி மதங்களும் ஸாராம்சத்தில் மிகவும் நெருங்கிய தொடர்புடையன என்பதற்கு ஓர் அறிகுறியாகக் கொள்ளலாம். தமிழ் செய்த தவத்தால் இந்த இரண்டு பெரியார்களும் தமிழகத்திலே தோன்றினார்களென்று பக்தர்கள் பரவச மாகலாம்.

திருஞானசம்பந்தர் க்ஷீணகதியில் இருந்த ஜைன பௌத்த சமயங்களைக் கண்டித்தார் என்பதைச் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் விவரமாகத் தெரிவிக்கிறார். திருமங்கை மன்னனும் சோழமன்னன் முன்னிலையில் பௌத்தர் முதலான புறச் சமயத்தினரை வாதில் வென்றார் என்று 'திவ்யசூரி சரிதம்' தெரிவிக்கிறது.

திருஞானசம்பந்தர் பாடல்களிலும் அப்பர் சுவாமிகளின் பாடல்களிலும் ஜைன பௌத்தர்களுக்கும் வைதிக சைவர் களுக்கும் இடையே எவ்வளவு மனக்கசப்பு இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. திருமங்கை மன்னனின் பாசுரங்களிலும் வைதிக சமயத்தினர் களுக்கும் பௌத்த ஜைனர்களுக்கும் இடையே நிகழ்ந்த பூசல்களை நினைவூட்டும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. திருமங்கை மன்னனுக்கு ஏறக்குறையச் சமகாலத்தவரான தொண்டரடிப்பொடியாழ்வாரின் வாக்கிலும் இத்தகைய குறிப்புகளைக் காணலாம்.

மதுரையில் ஜைனர்கள் சைவர்களுக்கு இடுக்கண் விளைத்துவந்தனர் என்பதைப் 'பெரியபுராணம்' கூறும் திருஞானசம்பந்தர் கதையிலிருந்தும், தேவாரத்திலே

Koviloor Digital Library

திருஞான சம்பந்தர் வாக்கிலிருந்தும் தெரிந்துகொள்கிறோம். மதுரையிலிருந்து சுமார் பன்னிரண்டு கல் தொலையிலுள்ள 'திருமாலிருஞ் சோலை' என்ற அழகர் மலையில் ஜைனர்கள் வசித்து வந்தனர் என்றும், அவர்கள் அம்மலையில் கோயில் கொண்டிருக்கும் திருமாலை இகழ்ந்தனர் என்றும் திருமங்கை மன்னன் தமது திருமாலிருஞ்சோலைப் பதிகத்தில் தெரிவிக்கிறார்.

திருஞானசம்பந்தர் சைவத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் புறப்பட்டதைப் 'புண்ணியத்தின் படை யெழுச்சி' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். திருமங்கை மன்னனின் தலயாத்திரைகளையும் அத்தகைய படை யெழுச்சியாகக் கருதலாம். இருவரும் வைதிக சமயத்தின் ஸாரமாகிய பக்தியைப் பரப்பித் தமிழகத்தில் இருள் கெட ஞான மணிவிளக்கை ஏற்றி வைத்தனர்.

பதிகங்களின் போக்கிலும் பாடல்களின் அமைப்பிலும் திருமங்கை மன்னனுக்கும் திருஞானசம்பந்தருக்கும் இடையே காணும் ஒற்றுமையும் அதிசயமானது. சொல்லும் பொருளும் ஒத்துப்போகும் ஒலிமிக்க பாடல்களில் நிலவளம் நீர்வளம் மிக்க அழகமைந்த தலங்களை இருவரும் பாடியிருக்கிறார்கள்.

மடைகளில் மீன்கள் பாய்கின்றன. வயல்களுக்கருகே குவளை அரும்புகள் மலர்கின்றன. வண்டுகள் பண்பாடித் தேன் உண்டு களிக்கின்றன. குயில்கள் பாடுகின்றன. மயில்கள் ஆடுகின்றன. இத்தகைய வயல்வளம், சோலைவளம் முதலான வளங்களையும் வனப்புக்களையும் திருமங்கை மன்னன் பதிகங்களிலும் சம்பந்தர் பதிகங்களிலும் காணலாம்.

இந்த அழகுகளுக்கிடையே குரங்குகள் துள்ளி விளையாடுவதையும் காண்கிறோம். நின்றவாறு நில்லாத நெஞ்சுக்கு எத்தகைய நினைவுக்குறி பாருங்கள்!

காவிரி வெள்ளத்தைப் பார்க்கிறோம். அகில்கட்டை, சந்தன மரம் முதலியவற்றை அடித்துக்கொண்டு வரும் வெள்ளத்தை இக்காவிரி அலைகொழிக்கச் செழிக்கும்

Koviloor Digital Library

பிரதேசங்களில் பழுத்த வாழைக் கிளைகளுக்குப் பஞ்சமா? பாளையோடும் பொருந்திய காய்க் குலைகளொடும் கூடிய கமுகு மரங்களுக்குத்தான் பஞ்சமா? தாமரை முதலான பூக்களுக்குப் பஞ்சமா? இதயத்திலே அன்புவளம் கொழிக்கும் சான்றோர்களுக்குத்தான் பஞ்சமா?

திருமங்கை மன்னனும் திருஞானசம்பந்தரும் காவிரித் தீர்த்தம் பருகி வளர்ந்தவர்கள்; காவிரி வள நாட்டின் அழகுகளுக்கிடையே தெய்வ அழகு கண்டவர்கள். அந்த அழகுகளை நற்றமிழின் நல்லிசையில் அமைத்துப் பாடியவர் கள். இவர்களின் செந்தமிழ்ப் பாடல்களும் ஞானக்காவிரி பெருக்கெடுத்து ஓடுகிறது என்று தோன்றும் பக்தர்களுக்கு.

இருவர் வாக்கிலும், விண்ணளாவிய கோபுரங்களையும் மாடமாளிகைகளையும் அழகிய உள்ளங்களில் உயர்ந்த லட்சியங்களையுடைய மக்களையும் காண்கிறோம். பக்தியும் விசுவாசமும் உள்ள மக்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் உடையவர்களாக வாழ்வதையும் காண்கிறோம்.

கம்பன் (பின்னாளில்) பிறந்த திருவழுந்தூரை இருவரும் பாடியிருக்கிறார்கள். இருவர் வாக்கிலிருந்தும் அக்காலத்துத் திருவழுந்தூர் பொருள்வளமும் அருள் வளமும் கலைவளமும் நிறைந்த நகராகத் திகழ்ந்ததென்று தெரிகிறது. 'அலையா புனல்சூழ் அழுந்தை' என்று திருஞான சம்பந்தர் பாடும் இவ்வூரைத் திருமங்கை மன்னன்.

நீரில் பணைத்த
நெடுவாளைக்(கு) அஞ்சிப்
போன குருகினங்கள்
ஆரல் கவுகளோ(டு)
அருகணையும் அணியார்
வயல்சூழ் அழுந்தூரே

(பணைத்த - செழித்து வளர்ந்த. நெடுவாளைக்கு - பெரிய வாளை மீன்களுக்கு. குருகு இனங்கள் - குருகு என்ற பறவைக் கூட்டங்கள். ஆரல் - ஆரல் என்னும் சிறு மீன்.

Koviloor Digital Library

கவுளோடு - கதுப்பிலே கொண்டு. அருகு அணையும் - மறுபடியும் அணுகி வந்து சேரப்பெற்ற. அணிஆர் - அழகுமிக்க.)

என்று அவர் சுருங்கக் கூறியதை விளங்க வைப்பதுபோலப் பாடியிருக்கிறார்.

திருஞானசம்பந்தர் தமது மயிலாப்பூர்த் திருப்பதிகத்தில் மயிலையை,

மைப்பூசும் ஒண்கண்
மடநல்லார் மாமயிலை

(மைப்பூசும் - அஞ்சனம் இட்டுக்கொண்டிருக்கும். ஒண்கண் - ஒளியுள்ள கண்கள். மடநல்லார் - இளம்பெண்கள்.)

என்று வருணித்திருக்கிறார். இதே கருத்தை ஒட்டித் திருமங்கை மன்னனும் தமது திருவல்லிக்கேணித் திருப்பதிகத்தில் 'ஒப்பவர் இல்லா மாதர்கள் வாழும் மாடமா மயிலை' என்று திருவல்லிக்கேணியைத் தன்னுள் கொண்டிருந்த மயிலாப்பூரை வருணித்திருக்கிறார்.

இப்படி இந்த இருவர் பாசுரங்களுக்கும் உள்ள ஒற்றுமையம்சங்களைக் காட்டிக்கொண்டே போகலாம். காம்பீர்யம் நிறைந்த ஓசைப்பொலிவு சம்பந்தர் பாடல்களுக்குச் சிறப்பியல்பாக இருப்பதுபோல் திருமங்கை மன்னன் பாடல்களுக்கும் சிறப்பியல்பு என்று சொல்லி விடலாம்.

திருஞான சம்பந்தரின் உதவியால் பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசி தன் கணவனான பாண்டியனைத் திருத்திச் சைவத்தைத் தழைக்கச் செய்ததாகப் பெரியபுராணம் தெரிவிக்கிறதல்லவா? குமுதவல்லியின் காதலே திருமங்கை மன்னனை மாற்றிவிட்டது என்பது உண்மையானால், இவர் தேவியும் இவரைத் திருத்தி வைணவம் என்ற பக்தி மதத்தைத் தழைக்கச் செய்தாள் என்று கூறலாம்.

Koviloor Digital Library

10. பாசுரங்களில் திருமங்கை மன்னன்

சோழ ராஜ்யத்திலே ஆலிநாட்டுக்கு இவர் தலைவராக இருந்தார் என்பதற்கு இவர் தம்மை 'ஆலிநாடன்' என்று கூறிக் கொள்வதே சான்றாகும். அந்த நாட்டுத் தலைமையூர் இப்போது திருவாலி திருநகரி என்று சொல்லப்படுகிறது. இங்கே திருமங்கையாழ்வாரின் கோயில் மிகவும் பிரசித்தமானது.

தெற்கே நம்மாழ்வாரின் ஸ்தலம் ஆழ்வார் திருநகரி என்று பிரசித்தமாக இருப்பதுபோல் திருமங்கையாழ்வாரின் இத்திருநகரியும் பிரசித்தமானது.

'வாள்கலிகன்றி' என்றும், 'வேல் வலவன்' என்றும் 'யானைவலான்' என்றும் 'ஒன்னலர் (பகைவர்) தங்களை வெல்லும் ஆடல்மாவலவன்' என்றும், 'மருவலர் (பகைவர்) தம் உடல் துணிய வாள்வீசும் பரகாலன்' என்றும் இவர் தம்மைக் கூறிக்கொள்வதிலிருந்து, இவரது படைத்திறம் முதலான செய்திகள் உறுதிப்படுகின்றன. இவரது கல்வித் திறனையும் செல்வ நிலையையும் கைம்மாறு கருதாது வழங்கும் வள்ளல் தனத்தையும் பற்றிய குறிப்புக்களும் பதிக இறுதிகளில் காணப்படுகின்றன.

வேட்டையாடுவதில் ஒருகாலத்தில் இவருக்கு இருந்த விருப்பத்தையும் தெரிந்துகொள்கிறோம். அக்காலத்திலே அரசர் முதலிய பிறர்க்கு இவர் உழைத்துக்கொண்டிருந்த தாகவும் தெரியவருகிறது.

இவரது குணாதிசயத்தைப் பற்றிய சில குறிப்புக் களையும் இவரது வாக்கிலிருந்தே தெரிந்துகொள்கிறோம்.

Koviloor Digital Library

பொய்ம்மொழி ஒன்(று)இல்லாத
மெய்ம்மை யாளன்

என்று இவர் தம்மைச் சொல்லிக்கொள்கிறார்.

'கொங்குமலர்க் குழலியர் வேள்' - வாசனை உள்ள மலர் சூடிய கூந்தலை உடைய பெண்களால் விரும்பப் பெற்றவர் - என்று இவர் தம்மைக் கூறிக்கொள்வதுபோல் 'மெய்ம்மை யாளன்' என்று கூறிக்கொள்வதும் கவனிக்கத்தக்கது. அக்காலத்து அரசர்களைப்போல் இவரும் மனைவியர் பலருடன் வாழ்ந்திருக்க வேண்டும்.

காவித் தடங்கண் மடவார்
கேள்வன்

(காவித்தடங்கண் - விசாலமான, நீலமலர் போன்ற கண்களையுடைய. மடவார் கேள்வன் - பெண்களின் கணவன்.)

என்று இவர் கூறுவதும் காண்க. இவர் பெற்ற மக்கள் பலர் என்பதற்கும் இவர் திருமொழியில் சான்று கிடைக்கிறது.

'மெய்ம்மையாளன்' என்றும், 'அருள்மாரி' என்றும் இவர் தம்மைக் கூறிக்கொள்வதால் உண்மைமீதும் அருள் (அஹிம்ஸை) மீதும் இவருக்குள்ள பெருவிருப்பம் ஊகிக்கப் படும்.

பொய்வண்ணம் மனத்தகற்றிப்
புலன்ஐந்தும் செலவைத்து,
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை

(வண்ணம் - (இங்கே) இனம்; வகை. செல - செல்ல. மெய்ந்நின்ற - மெய்யிலே நிலைபெற்றிருக்கிற. வித்தகனை - (இங்கே) அதிசயத்தன்மையுடையவனை.)

என்று பகவானைப் பாடுகிறவர், 'பொய்ம்மொழி ஒன்று இல்லாத மெய்ம்மையாள'ராக விரும்பி அந்த

Koviloor Digital Library

நிலையையும் தாம் அடைந்ததாகக் கூறுவது பொருத்த மானதே.

'மெய்ந்நின்ற வித்தகனைத் திருவரங்கத்திலே தரிசித்தவர் அப்பெருமானுக்குத் திருப்பணிகள் செய்யும் போது பொய்ந்நெறியில் பொருள் தேடினார் என்று கூறுவது பொருத்தமன்று. உண்மையாளர்களான பாகவதர்களுக்குப் பணி செய்வதற்காக உண்மையாளரும் வண்மையாளருமான திருமங்கை மன்னன் திருடிப்பொருள் சேர்த்தார் என்று கூறுவதும் சரியன்று.

'ஸாக்ஷாத் தர்மமே ஈசுவரன்' என்ற உறுதியுடன்,

அறம்தானாய்த் திரிவாய்!
உன்னைஎன் மனத்தகத்தே
திறம்பாமல் கொண்டேன்!'

(திறம்பாமல் - தவறாமல்; மாறுபடாமல்.)

என்று அவனையே தமக்கு அந்தரங்கனாக்கி, 'இதோ பார்த்துக் கொள், அப்பா!' என்று தமது இருதயத்தைத் திறந்து காட்டுகிறவர் தருமம் தவறி வழிப்பறி செய்தாரென்பது எப்படிப் பொருந்தும்?

இவர் பரம்பரையான பக்தர் குலத்தில் பிறந்தார் என்பதற்கும் பாசுரச் சான்றுகள் உண்டு. 'எந்தை தந்தை தம்மான் என்று எமர் (எம்மவர்) ஏழேழ் அளவும், வந்து நின்ற தொண்டர்' என்று இவர் தம்மை அறிவித்துக்கொள்கிறார்.

எந்தாதை, தாதை, அப்பால்
எழுவர் பழஅடிமை
வந்தார்; என்நெஞ்சி னுள்ளே
வந்தாயைப் போகலொட்டேன்

(எந்தாதை - எமது தகப்பனும். தாதை - அவன் தகப்பனும். அப்பால் எழுவர் - அவனுக்கு முன்பு உள்ள

Koviloor Digital Library

ஏழுபுருஷர்களும். பழஅடிமை வந்தார் - பழைமையான அடியவர்களாக இருந்தவர்கள். போகல் ஒட்டேன் - இனி வேறு இடம் போக விடமாட்டேன்.)

என்று இவர் கூறுவதிலிருந்து, பத்துத் தலைமுறையாக இக்குடும்பத்தினர் திருமாலுக்குத் தொண்டுபட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இப்படிப் பாரம்பரியமாகப் பக்தியில் ஊறித் தொண்டு நெறியில் ஊன்றியிருந்த குடும்பத்திலே வந்த திருமங்கை மன்னன் போர் வெறியிலும் வேட்டை முதலான செயல் களிலும் அரசர் முதலிய பிறருக்குத் தொண்டு பூண்டு உழைப் பதிலும் வாழ்க்கையின் ஒரு பகுதியைக் கழித்துவிட்ட போதிலும், பழைய பரம்பரை வாசனை வந்து பற்றிக்கொள்ள இவர் தெள்ளியராகித் திருமாலின் அருளைச் சிக்கெனப் பெற்றுக்கொண்டார். 'உடையவன் உடைமையைக் கைவிட மாட்டான்' என்ற உண்மை இவர் விஷயத்தில் நன்றாகப் பலித்துவிட்டது.

பெற்றோர் காலம் சென்றபின் இவரும் லௌகிக முயற்சிகளில் தம்மை முற்றும் இழந்து விடுவதற்கு முன் திருமாலின் அடிமைத் திறத்தில் முனைந்து நின்றார்.

எம்மானும் எம்அனையும்
என்னைப்பெற்(று) ஒழிந்த தற்பின்
அம்மானும் அம்மனையும்
அடியேனுக்(கு) ஆகிநின்ற
நன்மான ஒண்சுடரே!

(எம்மானும் - என் தந்தையும். எம்அனையும் - என் தாயும். ஒழிந்ததற்பின் - நீங்கின பின்பு. அம்மானும் - தந்தையும். அம்மனையும் - தாயும். நல் மான ஒண் சுடரே - நல்ல பெரிய அழகிய ஜோதியே.)

என்று இவர் கூறுவதைப் பாருங்கள்.

Koviloor Digital Library

பக்தியின் தொடர்பு இல்லாமல் இவர் வாழ்ந்த பரம லௌகிக வாழ்வு இந்தப் பெரு வாழ்விலே ஒரு கிரகணம் போலத் தோன்றி நீங்கிவிட்டது என்று கருதுவதே இவர் பாசுரங்களில் கிடைக்கும் தற்சரிதக் குறிப்பாகும். பூர்ண ஞானம் பெற்றுத் தெளிந்தபின் தாம்செல்லவேண்டிய கதி இன்னதென்பதைத் தெரிந்துகொண்டுதான்,

செல்கதிக்(கு) அமைந்தேன்

என்று கூறுகிறார்.

இவர் சென்ற கதி அல்லது நன்னெறியை இவர் பாசுரங்களில் காண்கிறோம். கடைசியாகக் குடும்பத்தை முற்றத்துறந்து, தேசமெங்கும் திரிந்து, திருமாலின் திருப்பதி கள் தோறும் பாடிப் பக்தி மதத்தையும் தொண்டு நெறியையும் எங்கும் பரப்பி வந்தார். இதுதான் இவர் பின்பற்றிய தீதில் நன்னெறியாகும். 'பெற்ற மக்கள் பெண்டிர் என்றிவர் பின் உதவாதறிந்தேன்' என்றும், 'தேசம் அறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோம்' என்றும் இவர் கூறியுள்ளார்.

இப்போது இவர் உருவி வீசிய வாள் அருள் என்னும் வாள்தான். 'நீ பணித்த அருள் என்னும் ஒள்வாள் உருவி எறிந்தேன்' என்று இவர் கூறுவதில், ஒரு சிறந்த போர்வீரர் அஹிம்ஸா தர்மப்போர்வீரர் ஆகிவிட்ட கதையை ஆலின்வித் தில் ஆலமரத்தைக் காண்பதுபோலக் காண்கிறோம்.

திருமங்கை மன்னனைக் கள்வர் மரபினர் என்று குருபரம்பரைக் கதைகள் கூறுவது உண்மையாகவே இருக்கக் கூடும். 'கள்வனேன் ஆனேன்' என்ற இவர் கூற்றிலிருந்து மட்டும் செய்துகொண்ட ஊகம் அல்ல அது.

பல்லவர்களின் தென்னாட்டு ஆதிக்கத்திற்கு ஒரு முக்கிய காரணம் முத்தரையர் என்ற கள்வர் வகுப்பினரின் பேருதவியாகும். திருமங்கை மன்னன் முத்தரைய மரபைச் சார்ந்த கள்வர் குலத்தவர் என்பது ஆராய்ச்சிப் பேரறிஞரான திரு.மு. இராகவையங்காரின் அபிப்பிராயம்.

Koviloor Digital Library

கள்வர் குலம் தமிழகத்தில் வீரர் வகுப்புகளில் ஒன்றாகும். இவர்களில் வைணவர்களும் உண்டு; சைவர்களும் உண்டு. முத்தரைய வகுப்பினர் தாம் படைத்துணையாக உதவிய பல்லவ மன்னர்களான நந்திவர்மன் காலத்திலும் தந்திவர்மன் காலத்திலும் விஷ்ணு பக்தர்களாக இருந்தனர் என்று தெரிய வருகிறது. இத்தகைய மரபினருள் பரம்பரை வைணவர்களாக இருந்த ஒரு குடும்பத்தில் திருமங்கை மன்னன் தோன்றினார் என்று கருதுவது இவர் வாக்கிற்கும் பொருத்தமானது; குரு பரம்பரைக் கதைகளுக்கும் பொருத்தமானதே.

திவ்யசூரி சரிதம் திருமங்கை மன்னனைச் 'சபர' குலத்தினர் என்று குறிப்பிடுகிறது. சபரர்கள் வேடர்கள்; வேட்டையாடுவதில் திருமங்கை மன்னருக்கு இருந்த பழைய விருப்பத்தை இவர் பாசுரம் ஒன்றில் காண்கிறோமல்லவா? இக்குறிப்பைக்கொண்டு இவரது கள்வர் குலத்தைச் 'சபர குலம்' என்று வடமொழியாளர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

திருமங்கை மன்னனுக்குச் சபர குலத்தினனான குகனுடைய கதையில் விசேஷ விருப்பம் உண்டு என்று இவர் வாக்கிலிருந்தே தெரிகிறது. குகன் திறத்தில் ராமன் செய்த திருவருள் இவர் நெஞ்சைவிட்டு நீங்காது இவரை உருக்குகிறது எனலாம்.

வேடர் தலைவனான குகன் ராமனைக் காணும் பொருட்டுக் காணிக்கைகளுடன் வந்துவணங்கி, ராம லட்சுமணரையும் சீதையையும் தோணியில் ஏற்றிக்கொண்டு கங்கையின் மறுகரையில் சேர்த்ததாக ராமாயணம் கூறுகிற தல்லவா? இந்தக் கதைப் பகுதியில் திருமங்கையாழ்வார் ஒரு ரஸமான நிகழ்ச்சியின் விவரங்களை மனக்கண்ணால் கண்டுகொள்கிறார்.

சூரிய குலத்தில் தோன்றிய 'சக்கரவர்த்தித் திருமகன்' குகனைக் கீழ்மகன் என்று ஒதுக்கிவிட வில்லையாம்.

Koviloor Digital Library

பொருட்செல்வத்திலும் அறிவுச் செல்வத்திலும் நிகரற்றிருந்தவன், 'குகனை அறிவிலும் ஏழை, பொருளிலும் ஏழை' என்று புறக்கணிக்கவில்லையாம். 'உயிர்களை ஹிம்ஸிக்கிறவன்' என்றும் தள்ளிவிடவில்லையாம். இரங்கி அவனைத் தன் இன்னருளுக்கு இலக்காக்கிக் கொண்டானே என்று உருகுகிறார் திருமங்கைமன்னன்.

ராமனுடைய அருள் எவ்வளவு தூரத்தைச் சமீபமாக்கி விடுகிறது! - எத்தகைய அந்நியனைத் தோழனாக்கிச் சகோதரனாக்கிக் கொள்கிறது!

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா(து)
இரங்கி, மற்(று) அவற்(கு) இன்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கிஉன் தோழி;
உம்பி எம்பி!, என்(று) ஒழிந்திலை, உகந்து
'தோழன் நீஎனக்(கு), இங்(கு)ஒழி' என்ற
சொற்கள் வந்(து) அடி யேன்மனத்(து) இருந்திட,
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு அரங்கத் தம்மானே!

(ஏதலன் - அந்நியன்; பகைவன், உயிர்களை வதைப்பவன். கீழ்மகன் - கீழான நிலையில் இருப்பவன். என்னாது - என்று தாழ்வு கருதாமல். அவற்கு - அவனுக்கு. மாழைமான் மட நோக்கி - பேதைமைப் பண்பு உள்ளவளும் மானின் பார்வை போன்ற கபடமற்ற கண்பார்வை உடைய வளுமான இந்த என் மனைவி. உம்பி எம்பி - உன் தம்பி யாவான் இந்த என் தம்பியான லட்சுமணன். என்று ஒழிந்திலை - என்று சொல்லி அவ்வளவோடு நின்று விடாதவனாய். இங்கு ஒழி - இங்கே இருந்து விடுவாய். ஆழிவண்ண - கடல் வண்ணனே. அணிபொழில் - அழகிய சோலைகள். அம்மானே - சுவாமியே.)

என்ற இவர் வாக்கிலே குகனுக்கு ராமன் அருள் செய்த அந்த வைபத்தை எவ்வளவு அதிசயமாகப் பார்க்கிறோம்!

Koviloor Digital Library

சீதையைத் தோழியாக்கித் தன் தம்பியை அவன் தம்பியாக்கியதோடு நின்றுவிடாமல், 'நீ எனக்குத் தோழன்' என்று கூடச் சொல்லி அந்த வேடனோடு ராமன் உறவு கொண்டாடியது தான் தம்மையும் குதூகலப்படுத்திப் பகவானைச் சரணாகதி செய்யுமாறு தூண்டிவிட்டதாகச் சொல்லுகிறார் திருமங்கை மன்னன்.

இந்த வசீகரமான குக சித்திரம் கவிச்சக்கரவர்த்தியின் உள்ளத்தையும் வசீகரித்தது.

ஆழ நீர்க்கங்கை
அம்பி கடாவிய
ஏழை வேடனுக்(கு)
'எம்பிநின் தம்பி; நீ
தோழன்; மங்கை
கொழுந்தி!' எனச்சொன்ன
வாழி நண்பினை
உன்னி மயங்குவாள்

(அம்பி கடாவிய - தோணி செலுத்திய. கொழுந்தி - மனைவியின் உடன்பிறந்தவள்.)

என்று சீதையின் கூற்றாகச் சுந்தரகாண்டத்தில் கம்பன் கூறியிருப்பது திருமங்கை மன்னனது பாசுரத்தைத் தழுவி அமைந்திருப்பதுதானே.

குகனைப்பற்றிய கம்பன் விளக்கம் முழுவதும் திருமங்கை மன்னனின் கருத்தை வித்தாகக் கொண்டு கொடிவீசிப் படர்ந்ததுதான். 'தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?' என்று குகன் உருகினான் என்பது கம்பன் கூற்று. சபரகுலத்துக் குகனை நோக்கி ராமன் சொன்ன அந்தச் சொல்லை முதல் முதல் கேட்டவர் திருமங்கை மன்னனே; கேட்டு உருகிப் புத்துயிர் பெற்றவரும் இவரே.

Koviloor Digital Library

எனினும், வடநாட்டுச் சபரகுலமும் தமிழகத்துக் கள்வர் குடியும் ஒன்றே என்று கருதுவது சரியன்று. சங்க இலக்கியத்திலிருந்து வீரமரபினரான கள்வர் குலத்தினரின் பழைமையையும் பெருமையையும் ஊகித்துக்கொள்ளலாம். 'கள்வர்கோமான்' ஒருவன் தமிழகத்தின் வடஎல்லையாக இருந்த வேங்கடமலைக்குத் தலைவனாயிருந்ததாகவும் வள்ளலாக விளங்கியதாகவும் அகநானூறு தெரிவிக்கிறது.

கள்வர்குலத் தோன்றலாகிய திருமங்கையாழ்வார் வள்ளலாகவும் தமிழ்நூற் புலவராகவும் உண்மையாளராகவும் அருள்மாரியாகவும் பரமபாகவதராகவும் ஒரு மகாத்மாவாக வும் திகழ்ந்தார் என்பதற்கு இவர் பாசுரங்கள் சான்று தருகின்றன.

இவர் தம்மைப் 'பப்ப அப்பர்' என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிடுவதும், இவர் ஒரு ஞானாசாரியராக விளங்கினார் என்பதற்கே சான்றாகலாம்.

பதரிகாச்ரமம் என்று பிரசித்தமாக வழங்குகிற வதரியைக் குறித்து இவர் பாடியிருக்கும் பாசுரம் ஒன்றிலே தான் 'பப்ப அப்பர்' என்ற சொற்றொடர் வருகிறது. இதற்குப் 'பப்ப பட்டாரகர்' என்பது சரியான வடமொழித் தொடர். 'பப்ப ஸ்வாமி' என்றும் சொல்வதுண்டு. 'அப்பர்' என்ற தமிழ்ச் சொல்லும் 'பட்டாரகர்' என்ற வடசொல்லும் ஒரே பொருள் உடையன என்றும், 'பப்ப ஸ்வாமி' என்றும், 'பப்ப பட்டாரகர்' என்றும், அக்காலத்தில் அரசர்களின் ஞானாசாரியர் சிலரைக் குறிப்பிட்டார்களென்றும் திரு.மு. இராகவையங்கார் கூறியுள்ளார்.

'பப்ப' என்பதற்கு 'அப்பப்ப!' என்றும், அப்பர் என்பதற்குக் கிழவர் என்றும் பொருள் கூறுவதுண்டு. ஆனால் திருமங்கையாழ்வார் காலத்திலே 'பப்ப அப்பர்' என்பது 'பப்ப ஸ்வாமி' என்ற பொருளிலேயே வழங்கி வந்திருக்க வேண்டும் என்று திரு. இராகவையங்கார் கருதுவதே பொருத்தமாகும். இதற்குச் சாசனங்களிலும் ஆதாரம் கிடைக்கிறது.

Koviloor Digital Library

திருமங்கை மன்னன் அரசராக இருந்து துறவு பூண்ட ஒரு ராஜரிஷியாகத் திகழ்ந்தார் என்பது திண்ணம். இவர் தம் காலத்திலும் தமக்கு முன்னும் விளங்கிய விஷ்ணு பக்தர்களான அரசர்களைக் குறிப்பிடுகிறார். தம் காலத்திலே திருமாலின் அடியார்களாக இருந்த சில அரசர்களுக்கு இவர் ஞானகுருவாக விளங்கினார் என்று ஊகிப்பது தவறாகாது.

இவர் காலத்திற்குப் பின்பும் எத்தனை மக்களுக்கு இவரது பாசுரங்கள் இவரை ஞான குருவாகக் காட்டிவந் திருக்கின்றன! இன்றைய மக்களுக்கும் இவரது பாசுரங்களில் எவ்வளவோ ஆறுதல் கிடைக்கக்கூடும்.

இக்காலத்தவர்களின் இயல்பையும் முன்கூட்டியே அறிந்து, பொங்கும் பரிவுடன் இவர் தம் பாசுரங்கள் வாயிலாகச் செய்யும் உபதேசம் இவரது சிறப்பியல்பு என்று கருதுமாறும் அமைந்திருக்கிறது.

ஊன்வாட உண்ணா(து)
உயிர் காவ லிட்டு
உடலில் பிரியாப்
புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத்
தவம் செய்ய வேண்டா!

(உயிர் காவலிட்டு - உயிர் மாத்திரம் போகாதபடி காப்பாற்றிக் கொண்டு. உடலில் பிரியா - உடலை விட்டுப் பிரியாத.) என்று காயக்கிலேசத்தையும் கடினமான இந்திரிய நிக்கிரக வழியையும் கண்டித்தும் பரிகசித்தும், காமத்தையே புருஷார்த்தமாகக் காட்டுவதுபோல் காட்டி, 'அந்தக் காமத்தைக் கண்ணனிடம் செலுத்தி நல்வழிப்படுங்கள்' என்கிறார்.

'இவ்வாழ்வாரது மனப்போக்கும் பாசுரங்களும் நமக்குத் தைரியத்தை விளைவிப்பன. 'கலியை வென்றவர் உண்மையில் இவரே; நம் கலி தீர்ப்பவரும் இவரே!' என்பர் ஒரு ரஸிகர், மங்கை மன்னன் 'மாண்பு' என்ற தமது கட்டுரையில்.

Koviloor Digital Library

11. திருமங்கை மன்னனின் வடதேச யாத்திரை

திருமங்கை மன்னன் எண்பித்தாறு திருப்பதிகளைப் பாடியிருக்கிறார் என்பர். இவற்றுள் இவர் பாடிய சோழநாட்டுத் திருப்பதிகள் முப்பத்தெட்டு. பாண்டி நாட்டிலும் மலைநாட்டிலும் நடுநாட்டிலும் தொண்டை நாட்டிலும் உள்ள திருப்பதிகளில் இவர் பாடியவை முப்பத்தாறு.

தமிழகத்தின் வட எல்லையான திருவேங்கடத்தைச் சிறப்பாகப் பாடியிருக்கிறார். சிங்கவேள் குன்றம் என்ற அஹோபிலத்தையும் பாடியிருக்கிறார். வட இந்தியாவிலுள்ள வடமதுரை, துவாரகை, ஆய்ப்பாடி, அயோத்தி, நைமிசாரணியம், சாளக்கிராமம், வதரி (பதரிகாசிரமம்), பிரிதி ஆகிய தலங்களையும் பாடியிருக்கிறார். பரமபதத்தையும் பாற்கடலையும் சேர்த்துத்தான் இவர் எண்பத்தாறு திருப்பதிகளைப் பாடியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

வட இந்தியாவில் இமயமலைச் சார்பிலுள்ள தலங்களையும் இவர் நேரில் தரிசித்திருக்கக்கூடும். ஆல்மோரா இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 135 மைல் தொலைவில் உள்ள நந்த ப்ரயாகையை இவர் 'பிரிதி' என்று குறிப்பிடுவதாகக் காஞ்சி மகா வித்வான் ஸ்ரீஅண்ணங்க ராசாரியர் கூறுவர்.

இந்த ஸ்தலத்திலிருந்து இயற்கையின் பனிக்கோயிலான மலையரசைப் பாடுகிறார். இந்தியாவின் வட எல்லைக்கு ஒருபெரும் பனிமதிலாக அமைந்திருக்கும் இமயத்தை 'நல் இமயம்' என்றும், 'அருவரை இமயம்' (ஏற முடியாத

Koviloor Digital Library

தாழ்வரையுடைய இமயமலை) என்றும் குறிப்பிடுகிறார். சிறு மலைகள் தழுவிய இமயம் என்றும் சொல்லுகிறார்.

பிரிதியிலிருந்தே மலையருவிகளையும் மலைக் காடுகளையும் பாடுகிறார். அவற்றை, 'எம்பனி முகில் வண்ணன்' என்று வானவர்கள் வாய்குளிர அழைப்பதாக இவர் கூறும் தமது இஷ்டமூர்த்தியோடு சேர்த்துப் பாடியிருக்கிறார்.

ஓதி ஆயிரம்
நாமங்கள் உணர்ந்தவர்க்(கு)
உறுதுயர் அடையாமல்
ஏதம் இன்றிநின்(று)
அருளும்நம் பெருந்தகை
இருந்தநல் இமயத்து

(உறுதுயர் - உண்டாகக்கூடிய துயரம். ஏதம் இன்றி - பாவம் இல்லாமல்.)

என்று பாடும் தோரணையைத்தான் பாருங்கள்.

மலையருவிபோல வந்து விழும் இந்த வாக்கிலே, 'நம் பெருந்தகை', 'எம் பனிமுகில் வண்ணன்' - இமயப்பெரு மலையில் உறுதியாக நின்றுகொண்டு நம்பிக்கையுள்ள நாட்டு மக்களெல்லாம் உறுதுயர் அடையாமல் காத்தருளக் கங்கணம் கட்டியிருக்கிறான் என்பது போன்ற ஓர் உணர்ச்சியும் இன்றைய வாசகர்களுக்கு ஏற்படக்கூடும்.

பதரிகாச்ரமம்

'பதரிகாச்ரமம் சென்று வணங்குவோம்' என்ற எண்ணம் திருமங்கை மன்னனுக்கு நீண்ட காலமாக இருந்திருக்க வேண்டும். நாராயணமூர்த்தி தானே சிஷ்யனும் ஆசாரியனு மாக நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளிய ஸ்தலம் பதரிகாச்ரமம் என்ற பதரி.

சிரமப்பட்டு அடைய வேண்டிய ஸ்தலம் இது. அந்தக் காலத்திலே மிகவும் சிரமப்பட்டுத்தான் தமிழர்கள் அங்கே

Koviloor Digital Library

போய்ச் சேர முடியும். எனவே, ''உடம்பு தளர்ந்து கட்டுக் குலைவதற்கு முன்பே போக வேண்டிய இடமானதால், மூப்பு வருவதற்கு முன் பதரி வணங்குவோம், வாருங்கள்'' என்று அன்பர்களையும் அழைக்கிறார்; தமது நெஞ்சை நோக்கியும் உபதேசிக்கிறார்.

'பதரி வணங்குதுமே (வணங்குவோம்)' என்று, ஒவ்வொரு பாடலும் முற்றுப் பெறும்படி ஒரு பதிகம் பாடியிருக்கிறார். எனவே தமக்கு மூப்பு வருவதுணர்ந்து, அது முதிர்ந்து மகளிர் இகழும்படி நேர்வதற்கு முன்பே வட நாட்டிலுள்ள பதரியை இவர் வணங்க விரும்பியதாக ஊகம் செய்கிறார் ஓர் அறிஞர். திருமங்கையாழ்வார் நீண்ட வயது வாழ்ந்தார் என்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

பதரிகாச்ரமப் பாசுரங்களில் முற்ற மூத்துக் கிழத்தனம் பூர்த்தியாகும் நிலை, நகைச்சுவையுடன் வருணிக்கப்படுகிறது. முதுகு கூனிட்டுப் போகக் கால் தடுமாறித் தடிபிடித்துச் செல்வதும், நடக்கமுடியாமல் உட்கார்ந்து உட்கார்ந்து பெருமூச்சு விடுவதும், உடல் நடுங்குவதும், கண்கள் சுழல்வதும், இருமுவதும், 'இது என் அ˙ ˙பர் மூத்தவாறு!' என்று இளையவர் (இளம் பெண்கள்) பரிகசிப்பதும், கிழவனாருக்கு இளமையில் அநுபவித்த இன்பங்களின் நினைவு வரவே அவற்றைச் சொல்லிக்கொண்டே இரு முவதும், இருமிக்கொண்டே அவற்றைத் தொடர்ந்து கூறுவதும், பாசுரங்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

பதரிகாச்ரமத்தில் பகவானை வணங்கும்படி சொல்லும் போது அப்பெருமானை,

பெற்ற தாய்போல்
வந்த பேய்ச்சி
பெருமுலை யூ(டு)உயிரை
வற்ற வாங்கி
உண்ட வாயான்

Koviloor Digital Library

என்று குறிப்பிடுகிறார் முதல் பாட்டிலே. பக்தர் போல் நடிக்கும் ஆஷாடபூதிகளுக்குக் குறிப்பாக ஓர் எச்சரிக்கையை இங்கே காணலாம் என்று தோன்றுகிறது.

பதரிகாச்ரமத்திலே சிறந்த பக்தாகள் பகவானுடைய ஆயிரம் திருப்பெயர்களையும் சொல்லிப் பாடுவார்களாம், ஆடுவார்களாம். பக்தர்களுடன் தேவர்களும் இந்தப் பதரிநாதனை வணங்குகிறார்களாம். சந்நிதியையும் இம்மலை முழுவதையும் திவ்ய தேசமாகப் பாடிக் குதூகலமடைகிறார் திருமங்கைமன்னன்.

நைமிசாரணியத்தில்

பதரிகாச்ரமத்தில் மலையும் திவ்ய ஸ்தலமாக இருப்பது போல் நைமிசாரணியத்தில் அரணியம் அல்லது காடும் திவ்ய ஸ்தலமாக இருக்கிறது. இந்த ஸ்தலத்தில் பெருமானது திருவடி அடைந்தவர் தமது பழைய குறைகளை எண்ணி எண்ணி வருந்துகிறார்.

'அறத்தை மறந்தேன்; போகத்தைப் பெருக்கினேன்; வீண்பொழுது போக்கினேன்; சூதினைக் களவினைத் துணிந்து செய்தேன்; கண்டவாறு திரிந்தேன்' என்றெல்லாம் வருந்தி, 'திருவடி அடைந்தேன், திருவடி அடைந்தேன்' என்று சரணாகதராகிறார்.

தாம் 'நீதி அல்லாதன செய்தும்' இறைவன் இவரைக் கைவிடாமல் நெஞ்சிலிருந்தே திருத்திப் பணிகொள்ளச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தானாம்.

வஞ்சனேன் அடியேன்
நெஞ்சினில் பிரியா
வானவா!

(வானவா - மேலான தேவனே.)

என்று இவர் நைமிசாரணியத்து ஸ்வாமியை அழைப்பதைப் பாருங்கள்.

Koviloor Digital Library

தாயாகிய பிராட்டியை முன்னிட்டுச் சரணாகதி செய்வது முறையாகையால் இந்த ஸ்வாமியை,

தேனுடைக் கமலத்
திருவினுக்(கு) அரசே!

(தேனுடைக் கமல திரு - தேனுடைய தாமரைப் பூவிலுள்ள அழகுத் தெய்வமாகிய மகாலட்சுமி.)

என்று எவ்வளவு சௌந்தரிய உணர்ச்சியுடன் அழைக்கிறார் பாருங்கள்! பகவான் என்ற சத்தியத்தின் இதயத்திலே வீற்றிருக்கும் சௌந்தரியம் அல்லவா திருமகள்?

அயோத்தி

அயோத்தியையும் திருமங்கை மன்னன் தரிசித்திருக்கக் கூடும். வடநாட்டுத் திருப்பதிகளையும் போய்த் தரிசிக்கக் கூடிய வசதி இவருக்கு இருந்தது என்பதில் ஐயமில்லை. அயோத்தியின் மாடமாளிகைகளைச் சிறந்த சுண்ணாம்பு பூசப்பெற்று வெண்ணிறமாயிருக்கும் மாடங்கள் (தவள மாடம்) என்று குறிப்பிடுகிறார்.

இதே கருத்தைக் கொண்டுதான் கம்பரும் அயோத்திமா நகரத்தின் மாளிகைகளை,

சங்கவெண் சுதையுடைத்
தவள மாளிகை

(சங்க வெண் சுதை - சிறந்த வெண்ணிறமுள்ள சங்குச் சுண்ணாம்பு. தவளம் - வெண்மை.)

என்று வருணித்திருக்கிறார்.

திருமங்கைமன்னன் உபயோகித்திருக்கும் 'தவளம்' என்ற வடசொல்லையும் கவிச் சக்கரவர்த்தி அப்படியே உபயோகித்துக்கொண்டாரென்றால், ஆழ்வாரின் பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றும் பக்தி - மனப்பான்மையைக் காண்கிறோமல்லவா?

Koviloor Digital Library

கண்ணன் தலங்கள்

கண்ணன் பிறந்த வடமதுரையின் நினைவு திருமாலிருஞ்சோலையில் இருக்கும்போது இவருக்கு வரவே, அவ்வூரை, 'வாசமலர்ப் பொழில்சூழ் வடமாமதுரை' என்று குறிப்பிடுகிறார். வடமதுரையையும் இவர் பார்த்திருக்கக் கூடும். இவர் தமது, 'சிறிய திருமடல்' என்ற பிரபந்தத்திலும் வடமதுரையைப் பிரஸ்தாபிக்கிறார்.

ஆய்ப்பாடியையும் துவாரகையையும் நேரில் போய்த் தரிசிக்கும்படி இவரது பக்தி இவரைத் தூண்டியிருக்க வேண்டும். திருப்பாற்கடலையும் திருநாடு என்ற பரமபதத்தையும் மானஸிகமாய்த் தரிசித்தது போலவே இவர் வடநாட்டுத் திருப்பதிகளையும் தரிசித்திருக்க வேண்டும் என்று கருதுவது சரியன்று.

அகோபிலத்தில்

இவர் கண்ட அகோபிலம் வெகு தெளிவாக வருணிக்கப் படுகிறது. அகோபிலத்தை இவர் 'சிங்கவேழ் குன்றம்' என்பர். (சிங்கம் - நரசிங்க மூர்த்தி.) நரசிங்க மூர்த்தி எழுந்தருளி யிருக்கும் ஏழு குன்றுகளையுடைய தலம் என்பர். இதைச் 'சிங்கவேள் குன்றம்' என்று கூறுவோரும் உண்டு. இப்பெயருக்கு, 'யாவராலும் விரும்பப்படுகிற நரசிங்க மூர்த்தியின் குன்று' என்று பொருள் கூறுவர்.

நரசிம்ம மூர்த்தியின் இந்த ஸ்தலத்தைக் குறித்துத் திருமங்கை மன்னன் பாடியிருக்கும் பாடல்களில், பயங்கர மான விலங்குகள் சஞ்சரிக்கும் கொடிய காடு வருணிக்கப் பட்டிருக்கிறது. இப்பாடல்களை ஓதும்போது கல்லும் முள்ளும் புதருமாக இருக்கும் காட்டினிடையே ஒரு முரட்டுப் பாதையில் நாமே நடந்து போவது போன்ற ஒருவகை அநுபவ உணர்ச்சி ஏற்படுகிறது.

Koviloor Digital Library

அஹோபிலத்திற்குப் போகும் வழி ஆழ்வார் காலத்தில் இருந்ததுபோல் இன்றும் காடடர்ந்த, கல்லும் முள்ளும் புதரும் மண்டிய, வழியாகத்தான் இருக்கிறது. 'எங்கள் நரசிங்க மூர்த்திக்கு இசைவான இடந்தான்' என்று மகிழ்ந்து போகிறது திருமங்கையாரின் உள்ளம்.

ஜீவஹிம்ஸையில் கைகாரன் இரணியன்; கருணையை மறுத்துக் கருணைக் கடலான பரம்பொருளும் இல்லையென்பதைச் சொல்லிலும் செயலிலும் காட்டியவன். கடைசியாக மகனிடம், 'அண்டம் ஆளும் மகாசக்தி இல்லை' என்று அவன் சபதம் செய்த அந்த இடத்திலேயே சிங்கம் தோன்றி அந்த நெஞ்சை மறக்கருணையால் திருத்தியது என்பது கதை.

இத்தகைய புனிதமூர்த்திக்கு உரிய ஸ்தலத்தை இந்த ஆழ்வார் எந்த நிலையில் கண்டிருக்கிறார், பாருங்கள்! பறையோசையும் வில்லோசையும் கேட்கின்றன; வேடர்களின் பறையோசைதான்.

வழிப்போக்கர்களின் ஒரு கூட்டத்தை மடக்கிக்கொண்டு சண்டை போடுகிறார்கள் வேடர்கள்; அவர்களைக் கொள்ளையடிப்பதற்காகத்தான். யாத்திரிகர்களும் பெருங்கூட்டமாகவும் ஆயுதபாணிகளின் பாதுகாப்புடனும் வந்திருப்பதால், ஒரே பெருங்கோஷமாகிவிடுகிறது, பரஸ்பரமாக நடக்கும் இப்பெரும் பூசல்.

இது இந்த ஸ்தலத்தின் மகிமை என்கிறார்:

மலைத்த செல்சாத்(து)
எறிந்த பூசல்
வன்துடி வாய்கடுப்ப,
சிலைக்கை வேடர்
தெழிப்(பு) அறாத
சிங்கவேழ் குன்றமே

Koviloor Digital Library

(மலைத்த - ஆக்கிரமிக்கப்பட்ட. செல்சாத்து - செல்கின்ற ஜனக் கூட்டம்; வழிப்போக்கர்களின் கூட்டம். பூசல் - ஒரே கோஷமாக நடக்கும் சச்சரவு. வன்துடி வாய் கடுப்ப - பெரிய பறையடித்தாற்போல் கோஷம் செய்ய. சிலைக்கை வேடர் - வில்லைக் கையிலே உடைய வேடர் களின். தெழிப்பு - ஆரவாரம்.)

இந்தக் காட்டுவழிக்குப் பக்கத்திலுள்ள கடினமான நிலங்களில் மிருகங்களும் அலைந்து திரிந்து களைத்துப் போயிருப்பன போலக் காணப்படுகின்றன. குன்றுகளும் உடைந்து கிடக்கின்றன கற்பாறைகளாக!

''அதோ அந்த மூங்கில்களைத்தான் பாருங்கள். சாதாரணமான காட்டு மூங்கில்களைப் போலவா இருக் கின்றன? அழலால் தேய்ந்து நெருப்புப் பற்றி எரிந்து குறைக் கொள்ளியாகி நிற்பதுபோலத்தானே காண்கின்றன?'' என்கிறார்.

''அதோ ஒய்ந்த மிருகம்; இதோ தேய்ந்த மூங்கில்! நடக்கும் பாதையோ உடைந்த குன்றுகளான கற்பாறைகளுக்கு இடையே'' என்று இவர் காட்டும் திவ்யஸ்தல யாத்திரைதான் எவ்வளவு திவ்யமாக இருக்கிறது பாருங்கள்.

ஓய்ந்த மாவும்,
உடைந்த குன்றும்.
அன்றியும் நின்(று)அழலால்
தேய்ந்த வேயும்
அல்ல(து) இல்லாச்
சிங்கவேழ் குன்றமே

(மாவும் - மிருகங்களும். வேயும் - மூங்கிலும்.)

தமது பரிவாரத்துடன் இந்தத் தீர்த்த யாத்திரை செய்து கொண்டிருக்கிறார் திருமங்கை மன்னன். 'எப்போதும் இங்கே கோடைதானோ? கொழுத்த வெயில்தானா?' என்று தோன்றுகிறது. சுழல்காற்றும் வீசுகிறதாம். வழியிலே காட்டு

Koviloor Digital Library

நாய்களையும் பார்க்கிறார்; தலைக்கு மேலே கழுகுகள் வட்டமிடுவதையும் பார்க்கிறார்.

''இந்தப் பாதையில் மனிதன் எப்படிப் போகமுடியும்!'' என்று அதிசயமாய்ச் சொல்லுகிறார் திருமங்கை மன்னன் தம் கூட்டாளிகளை நோக்கி. இந்த அதிசய உணர்ச்சியுடன் இவர் சென்றுகொண்டிருக்கும் இந்த யாத்திரை வழியைப் பாருங்கள்.

கவ்வும் நாயும்
　　கழுகும் உச்சிப்
　　போதொடு கால்சுழன்று,

தெய்வம் அல்லால்
　　செல்ல வொண்ணாச்
　　சிங்கவேழ் குன்றமே.

(கால் - காற்று.)

உச்சிப்போதின் அந்த வெப்பத்திலே சுழல்காற்று வீசுவது, செந்தீயை வாரிக்கொண்டு வானவீதியில் ஓடி எங்கும் பரப்புவதுபோலத் தோன்றுகிறது.

நின்ற செந்தீ
　　மொண்டு சூறை
　　நீள்விசும் பூ(டு)இரிய,
சென்று காண்டற்(கு)

　　அரிய கோயில்
　　சிங்கவேழ் குன்றமே

(நின்ற செந்தீ - குறைவில்லாமல் இருக்கிற செந்தீயின் வெப்பத்தை. சூறை - சுழல்காற்று. நீள் விசும்பூடு - நீண்ட வானத்தினூடு. இரிய - திரிந்து பரவ.)

என்று சொல்லிக்கொண்டே இந்தக் கோயிலைப் போய்க் கண்டு மகிழ்கிறார்.

Koviloor Digital Library

நரசிம்மமூர்த்திக்கு ஏற்ற கோயில்தான் என்ற ஒருவகையான திருப்தியும் ஏற்படுகிறது. சிங்கவேழ் குன்றத்துச் சிங்கப் பெருமாள் சாதுவா?

எரிந்த பைங்கண்
இலங்கு பேழ்வாய்
எயிற்றொ(டு) இ(து) எவ்வுரு என்(று)
இரிந்து வானோர்

கலங்கி ஓட
இருந்தஅம் மான(து) இடம்

(பைங்கண் - பசுமை தங்கிய கண்கள். இலங்கு பேழ்வாய் - விளங்குகிற பெரிய வாய். எயிற்றொடு - பற்களோடு. இரிந்து - அங்குமிங்கும் சிதறி. அம்மான் - ஸர்வேச்வரன்.)

என்று இவர் காட்டும் நரசிங்கமூர்த்தியைப் பாருங்கள்.

தேவர்களை இரட்சிக்கத்தான் அந்த அரண்மனைத் தூண், பத்துமாதம் கர்ப்பத்திலே சுமந்து பெற்றிருக்கும் தாய்போல் பெற்று விட்டிருக்கிறது இந்த அருமையான சிங்கப் பிள்ளையை! எரிந்த கண்களும் பிளந்த வாயும், அந்த வாயில் கோரமான பற்களுமாக நரசிங்கம் தோன்றியதும், ஐயையோ! நாம் என்ன செய்வோம் தோழர்களே!' என்று அசுரர்கள் நடுங்கவில்லையாம். தேவர்களே கலங்கிக் கால் தடுமாறி அங்குமிங்கும் ஓடத் தொடங்குகிறார்களாம்.

'அது சிங்க உருவந்தான் என்றுகூடத் தேவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லையாம். பார்த்தால்தானே தெரியும்? - பார்க்கவும் பயந்து, கண்ணும் மனமும் ஒருங்கே கலங்கி ஓடுகிறவர்களல்லவா? ஹிரண்ய பயங்கரத்திற்கும் மேலானதொரு பயங்கரத்தைக் கண்டதும், 'ரட்சகமூர்த்தியே ரட்சிப்பாரோ, பட்சிப்பாரோ?' என்ற சந்தேகம் வந்துவிடுகிறது.

Koviloor Digital Library

'அந்த நரசிங்கத்தின் சீற்ற வெந்தீயே இங்கும் பரவி இந்தக் கற்களையும் வேகச் செய்கின்றனவோ!' என்று தோன்றுகிறதாம், சிங்கவேழ் குன்றத்தின் வெப்பத்தை அநுபவிக்கும் போது,

கனைத்த தீயும்
கல்லும், அல்லா
வில்லுடை வேடருமாய்,

(கனைத்த தீயும் - ஒலிசெய்கின்ற தீயும். அல்லா வில்லுடை - சாதாரணமாகக் கண்டறியாத விற்களை உடைய.)

'இந்தச் சிங்கவேழ் குன்றம் சிங்கப்பெருமானுக்கு எப்படி இசைந்து பொருந்தியிருக்கிறது!' என்று அதிசயிக்கிறார்.

ஒருபுறம் மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வதால் உண்டான தீயைக் கண்டு,

தேய்த்த தீயால்
விண் சிவக்கும்
சிங்கவேழ் குன்றமே

என்கிறார்.

கல்லிடைகளில் மரங்களின் வேரோடி அக்கற்களைப் பேர்ப்பதையும், மூங்கில் இலைகள் ஒலிசெய்வதையும், 'ஜில்லிகா' (சுவர்க்கோழிகள்) 'சில் சில்' என்று ஒலிப்பதையும் அநுபவித்துக்கொண்டே போகிறார்.

சில்லி சில்என்(று)
ஒல்அறாத
சிங்கவேழ் குன்றமே

என்று 'சில்லி (சுவர்க் கோழி)யின் 'சில் சில்' சத்தத்தையும் நம் காதில் விழச் செய்து தமது யாத்திரை அநுபவத்தை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

Koviloor Digital Library

இத்தகைய சூழ்நிலையில் வீற்றிருக்கும் சிங்கப் பெருமானை, 'நம்பெருமான்' என்று கூறுவதுடன் திருப்தி அடையாமல், 'நம்முடைய நம்பெருமான்' என்று அபிமானித்துப் பேசுகிறார். 'சிங்கவேழ் குன்றுடைய எங்கள் ஈசன் எம்பிரான்' என்கிறார்.

இந்தப் பெருமானை,
நல்லை நெஞ்சே!
நாம் தொழுதும்

(நல்லை - நீ நல்லவன்.)

என்று நெஞ்சோடு கொஞ்சியவண்ணம் தொழுகிறார்.

இந்தப் பதிகத்தின் இறுதியில் இவர், 'இருந் தமிழ் நூற்புலவன்' என்று தம்மைச் சொல்லிக்கொள்கிறார். இவரது பெருந்தமிழ் நூற்புலமைக்கு இப்பதிகமே ஒரு சான்றாகும்.

'தமிழ்த் தென்றல்' என்று தமிழின் சாந்தமான இனிமையை அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. ஆனால் தமிழ், சண்டமாருதமாகவும் வீசும், சூறாவளியாகவும் சுழன்று வீசக்கூடும் என்பதை இப்பதிகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

Koviloor Digital Library

12. தமிழ் நாட்டில் க்ஷேத்திர யாத்திரை

(பல்லவ மகாராஜ்யத்திலே)

சிங்கவேழ்குன்றத்தின் வெம்மையை அநுபவித்தவர் குளிர்ந்த பிரதேசமாய், சுனைகளும் அருவிகளும் பூஞ்சோலைகளுமாய் இருக்கும் திருமலைக்கு வந்து சேருகிறார். நாய்கள், கழுகுகள், புலிகள், யானைகள், வேடர்களின் ஆரவாரங்கள், தேய்ந்த மூங்கில்கள், காட்டுத் தீ, சில்லென்ற ஓசைகள் இவற்றுக்கிடையே பயங்கரமூர்த்தியான நரசிங்கப் பெருமானையும் நெஞ்சு குளிரத் தொழுதவர், தமிழ் மொழி நடையாடுகிற தமது திருவேங்கடமுடையானை அழகான மலைக்காட்சிகளுக்கிடையே கண்குளிரக் கண்டு வாய்குளிரப் பாடுகிறார்.

திருமலையில்

இங்கே பகவானுடன் நெருங்கி உறவு கொண்டாடத் துணிந்து, 'அப்பா!' என்றும், 'அண்ணா!' என்றும், 'ஆரா அமுதே!' என்றும், 'சிந்தாமணியே!' என்றும் ஆசை தீர அழைத்து, 'அடியேனை ஆட்கொண்டருளவேணும்' என்று பிரார்த்தனை செய்துகொள்கிறார்.

தமிழகத்தைப் பிரிந்து வட நாட்டிலே பாஷை தெரியாத மக்களிடையே திரிந்து பட்ட கஷ்டங்களையும் திருமலையில் நினைத்துப் பார்ப்பதுபோல்,

அலந்தேன், வந்தடைந்தேன்
அடியேனை ஆட்கொண் டருளே

Koviloor Digital Library

என்று கூறுகிறார். திருவேங்கடமுடையானது தரிசனத்திற்கும் தமிழகத்தின் எல்லை காண்பதற்கும் உள்ளம் அலந்து போயிற்று என்பது குறிப்பு?

தென்னாட்டுக்குத் திரும்பியதும் உள்ளம் கனிந்துருகி,

தேனே! திருவேங்கட
மாமலை மேய
கோனே! என்மனம்
குடிகொண் டிருந்தாயே

(மேய - மேவிய; பொருந்திய.)

என்று திருமலை எம்பெருமானைப் போற்றித் திருப்தி அடைகின்றார். 'இனி யான்உன்னை என்றும் விடேனே' என்ற உறுதியும் கொள்கிறது உள்ளம்.

திருவேங்கடமுடையானை, 'வேங்கடத்து ஆடு கூத்தன்' என்றும் இவர் குறிப்பிடுகிறார். கண்ணனாய்ப் பிறந்து குடக்கூத்து முதலான கூத்துக்களை ஆடியவன் என்ற பொருளில்தான் இவர் இப்பெருமானை 'ஆடுகூத்தன்' என்கிறார்.

திருவல்லிக்கேணியில்

பேயாழ்வார் தோன்றிய மயிலாப்பூருக்கு மிக அருகிலுள்ளதும், திருமங்கையாழ்வார் பக்தி பண்ணிக் கொண்டிருந்ததுமான திருவல்லிக்கேணியில் தாமும் பக்தி பண்ணிப் பார்த்தசாரதியின் அருமை பெருமைகளைப் பாடுகிறார். இப்பெருமானை, 'பார்த்தன் தன் தேர்முன் நின்றான்' என்று குறிப்பிடுவதுடன், ராமனாகவும் போற்றுகிறார்.

இப்பெருமானை 'அமுது' என்றும், 'என்னை ஆளுடை அப்பன்' என்றும், தமது குலநாதன் என்றும், தமக்குத் துணை என்றும் வாயாரப் போற்றியுள்ளார். இப்பெருமானது

Koviloor Digital Library

கோயிலைச் சூழ்ந்திருந்த பெருஞ்சோலையைக் குயில்கள் பாட மயில்கள் ஆடும் சோலையென்றும், சூரிய கிரணங்கள் நுழைந்தறியாத குளிர்பொழில் என்றும் குறிப்பிடுகிறார்.

இங்கே எழுந்தருளியிருக்கும் அழகிய சிங்கப் பெருமாளைத் 'தெள்ளிய சிங்கம் ஆகிய தேவு' என்று குறிப்பிடுகிறார். அதனால் இந்தச் சிங்கப்பெருமானுக்குத் 'தெளிசிங்கப்பெருமாள்' என்று பெயர் வழங்குகிறது.

தொண்டைமான் சக்கரவர்த்தி ஒருவன் இங்கே திருப்பணிகள் புரிந்ததாகவும் இவர் குறிப்பிடுகிறார்:

மன்னுதன் பொழிலும்
வாவியும் மதிளும்
மாடமா ளிகையும்
மண்டபமும்

தென்னன்தொண் டையர்கோன்
செய்த நன்மயிலைத்
திருவல்லிக் கேணி

(மன்னு - பொருந்திய. தண்பொழிலும் - குளிர்ந்த சோலைகளும். வாவியும் - நீர் நிலைகளும். தென்னன் தொண்டையர் கோன் - தென்னன் என்ற பட்டத்தையும் உடைய தொண்டைநாட்டுப் பேரரசன்.)

'நன்மயிலைத் திருவல்லிக்கேணி' என்று இவர் கூறுவது கவனிக்கத்தக்கது. அந்த நாளில் மயிலைமாநகரத்தைச் சார்ந்த ஒரு பகுதியாக இருந்தது திருவல்லிக்கேணி. தாம் கண்ட மயிலை மாநகரத்தை இந்த ஆழ்வார், இந்தத் திருவல்லிக் கேணிப் பதிகத்திலே ஓர் அழகான சோலை சூழ்ந்த நகரமாக வும், சோலைகளுக்கிடையே மாட மாளிகைகளையும், அம்மாளிகைகளில் தமக்கு (அழகிலும் அறிவிலும்) ஒப்பவர் இல்லாத மாதர்களை உடையதொரு பேரூராகவும் குறிப்பிடுவர்.

Koviloor Digital Library

மாமல்லபுரத்தில்

(பல்லவர் துறைமுக நகரில்)

பூதத்தாழ்வார் தோன்றிய மாமல்லபுரம் என்ற மஹாபலிபுரம் 'கடல் மல்லை' என்று அந்நாளில் பிரசித்தி பெற்றிருந்த துறைமுக நகரமாகும். அந்தப் பெருந் துறைமுகப்பட்டினத்தின் பொருட் செல்வங்களையும் அழகுச் செல்வங்களையும் திருமங்கை மன்னன் நன்றாகப் பார்த் திருக்கவேண்டும். எனினும் பக்தர்களால் பொன்னைக் காட்டிலும் மணிகளைக் காட்டிலும் விலையுயர்ந்ததாகப் போற்றப்பட்டு வந்த பக்திச் செல்வமே இவரது விசேஷ கவனத்திற்கு உரியதாகிறது.

அங்கே ஒரு பெரும் பாறையில் கலா நிபுணர்களும் ரஸிகர்களும் பிரமிக்கும்படி செதுக்கப்பெற்றிருக்கும் சிற்பத் தொகுதி ஒன்று, கங்கை கொணர்ந்த பகீரதப் பிரயத்தனத்தைக் குறிக்கிறது. இந்தப் பெருஞ் சிற்பத்திற்குப் பக்கத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் கோவர்த்தனமலையைக் குடையாகக் கவித்து மனிதர்களையும் மாடுகளையும் காப்பாற்றிய கதை ஒரு குகைக் கோயிலில் சிற்பமாகக் காட்டப்பட்டிருக்கிறது. திருமாலும் சிவபெருமானும் லோகோபகாரமாகச் செய்த அற்புதங்களைக் குறிக்கும் இச்சிற்பங்கள், அக்காலத்திலே இந்நாட்டில் சைவ வைஷ்ணவ வேற்றுமையுணர்ச்சிகள் அதிகமாக இல்லையென்பதை அறிவிக்கின்றன அல்லவா?

இதே மாமல்லபுரத்தில் திருமால் சிவபெருமானோடு இணங்கிக் கோயில் கொண்டிருப்பதாகக் கூறுகிறார் திருமங்கையாழ்வார்:

பிணங்கள்இடு காடதனுள்
நடமாடு பிஞ்ஞகனோ(டு)
இணங்குதிருச் சக்கரத்(து)எம்
பெருமா னார்க்(கு) இடம்.

Koviloor Digital Library

(பிணங்கள் இடுகாடு - பிணங்களை இடுகிற சுடுகாடு. பிஞ்ஞகனோடு - சிவபெருமானோடு. இணங்கு - இணங்கியிருக்கிற. திருச்சக்கரத்து எம்பெருமான் - அழகிய சக்கரத்தையுடைய பெருமான்.)

பின்னாளிலேதான் இந்த இணக்கத்தைச் 'சேராச் சேர்த்தி' என்று சைவ வைஷ்ணவர்கள் கருதத் தொடங்கியிருக்க வேண்டும்.

மாமல்லபுரத் துறைமுகத்தைத் திருமங்கை மன்னன் நேரில் பார்த்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

கலங்கள் இயங்கும்
மல்லைக் கடல்மல்லை

(கலங்கள் - மரக்கலங்கள். இயங்கும் - வந்துகொண்டும்போய்க்கொண்டும் இருக்கும். மல்லைக் கடல்மல்லை - வளமும் பெருமையும் உள்ளதும், கடற்கரையில் உள்ளதுமான மாமல்லபுரம்.)

என்று கூறுவதுடன், அந்த மரக்கலங்கள் இறக்குமதி செய்யும் சில சரக்குகளையும் தாம் கண்டறிந்தவாறு குறிப்பிடுகிறார்.

அந்த மரக்கலங்களிலிருந்து சரக்குகளை இறக்கு கிறார்கள். ஒரு புறத்திலே பொற்குவியல்கள் இறங்கிக் குவிந்து கிடக்கின்றன. துறைமுகத்தின் வேறொரு புறத்தில் நவரத்தினக் குவியல்கள் காணப்படுகின்றன. இந்த இரண்டு குவியல் களுக்குமிடையே மரக்கலங்களிலிருந்து யானைகள் இறக்கப் படுகின்றன. இப்படி இந்தச் சரக்குகளைக் கண்டு காட்டும் ரஸிகத்தன்மையைத்தான் பாருங்கள்.

இவற்றையெல்லாம் சுமந்துகொண்டு வந்திருக்கும் மரக்கலங்களையும் கண்டு காட்டுகிறார் திருமங்கை மன்னன். ஏற்றி வந்த சரக்குகளின் கனத்தாலே அந்த மரக்கலங்கள் மிகவும் உள் இழிந்து, சில பகுதிகள் தளர்ந்து தொங்கிப் பழுது பார்க்கவேண்டிய நிலையில் இருப்பதையும் காண்கிறோம்.

Koviloor Digital Library

பழுது பார்க்கும் நுணுக்கத் தொழிலாளர்கள் அங்குமிங்கும் பரபரப்பாகப் போய்க்கொண்டிருப்பதையும் உய்த்துணரவைக்கிறார் ஆழ்வார். பல்லவ மகாராஜ்யத்தின் துறைமுக நகரம் இந்த ஆழ்வார் காலத்துச் சரித்திரப் பின்னணியுடன் நம் கண்முன் வந்து பொருள் வளத்தோடு பக்தி வளத்தையும் நினைவூட்டுகிறது.

கடலில் இயங்கும் மரக்கலங்களையும் அக்கலங்கள் வெளிநாடுகளிலிருந்தும் தீவாந்தரங்களிலிருந்தும் கொண்டு வரும் சிறந்த பொருள்களையும், பேயாழ்வார் தோன்றியதும் ஸ்தல சாயிப்பெருமாள் உகந்தருளியதுமான இந்த ஸ்தலத்தைப் பிரதட்சிணம் செய்துவரும் பாகவத ரத்தினங்களையும், இவர்களைப் பிரதட்சிணம் செய்து வழிபட விரும்பும் திருமங்கை மன்னனையும் இதோ பாருங்கள்.

புலங்கொள்நிதிக் குவையோடு,
புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும்
சுமந்தெங்கும் நான் றொசிந்து
கலங்கள்இயங் கும்மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள்மனத் தாரவரை
வலங்கொள், என் மடநெஞ்சே!

(புலம்கொள் - புலன்களைக் கவர்ந்துகொள்ளும். நிதிக்குவை - (இங்கே) பொற்குவியல்கள். புழைக்கைம்மா களிற்றினமும் - துதிக்கையுள்ள பெரிய யானைக் கூட்டமும். நலம்கொள் நவமணிக்குவையும் - அழகான நவரத்தினக் குவியல்களும். நான்று ஒசிந்து - தொங்கலாடித் தளர்ந்து. கலங்கள் - மரக்கலங்கள. இயங்கும் - சஞ்சரிக்கும். மல்லைக் கடல்மல்லை - வளமான, கடற்கரையிலுள்ள மாமல்லபுரம். மல்லைத் தலையனம் - ஸ்தலசாயிப் பெருமாளின் மல்லாபுரி என்ற மாமல்லை. வலம்கொள் மனத்தார் அவரை -

Koviloor Digital Library

பிரதட்சிணம் செய்ய வேண்டும் என்கிற பாகவதர்களை. மடநெஞ்சே - என் பேதைமையான நெஞ்சமே.)

தமிழகத்தின் பழைய சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாகவும், பல்லவ மகாராஜ்யத்தின் துறைமுக நகரமாகவும் உள்ள இக்கடல் மல்லையைப் பாகவதர்கள் உகந்த ஒரு விசேஷ ஸ்தலமாகப் பூதத்தாழ்வாரும் குறிப்பிடுகிறார். 'கடல் வளம் உடையது' என்ற பொருளில் இவ்வூர் ஆதியில் 'கடல் மல்லை' என்று பெயர் பெற்றிருந்து, 'மல்லை' என்று குறுகியிருக்கக்கூடும். கடல் வளத்துடன் பக்தி வளமும் உடைய சிறப்பைக்கொண்டு இவ்வூரைப் பூதத்தார் 'மாமல்லை' என்பர்.

திருமழிசையாழ்வார் திருவல்லிக்கேணியை 'மாமயிலை மாஅல்லிக்கேணி' என்று குறிப்பிடுகிறார். சிறந்த மயிலாப்பூரின் பகுதியான சிறந்த திருவல்லிக்கேணி என்பது பொருள். அப்படியே மல்லையை 'மாமல்லை' என்றார் பூதத்தார்.

இந்தப் பழைய துறைமுகப்பட்டினம் 'மாமல்லன்' என்ற சிறப்புப் பெயருள்ள முதல் நரசிம்ம பல்லவனால் புதுப்பிக்கப்பெற்றதால் 'மாமல்லபுரம்' என்ற புதுப்பெயரும் பெற்றது. அதன் குறுக்கமாகவும், மாமல்லை என்ற பெயரைப் பின்னாளில் வழங்கியிருக்கக்கூடும்.

மாமல்லனுக்கு முன்பே 'மல்லை' என்ற 'மாமல்லை' ஒரு பிரசித்தமான துறைமுகமாகவே இருந்தது. சங்ககாலத்திலும் 'கடல்மல்லை' பிரசித்தமானதுதான். அக்காலத்திலேயே இந்நாளில் 'லைட் ஹவுஸ்' என்று சொல்லப்படுகிற கலங்கரை விளக்கத்துடன் இத் துறைமுகநகர் அமைந்திருந்ததென்று தெரியவருகிறது.

மாமல்லபுரத்தில் ஆதிவராகப்பெருமாள் சந்நிதியில் நரசிம்மவர்மனின் தந்தை சிலையுருவமும், அவன் தந்தை சிம்மவிஷ்ணுவின் சிலை யுருவமுங்கூடக் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

எனவே, மாமல்லன் என்ற நரசிம்ம வர்மனுடைய பாட்டன் காலத்திற்கு முன்பே மாமல்லை பிரசித்தமாக இருந்ததென்று ஊகிக்கலாம். இவ்வூர்க் கோயில்களில் சில, மாமல்லனின் முன்னோரால் கட்டப்பெற்றவை என்று திரு.மு. இராகவை யங்கார் ஊகிப்பது பொருத்தமானதே.

மாமல்லபுரத்துக் கடற்கரையிலிருந்த பெருமாள் கோயிலின் உள்ளிடமாகச் சிவாலயங்கள் இரண்டு அமைந் திருந்தன என்று சாஸனங்கள் தெரிவிக்கின்றன. இக் கோயில்கள் ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் ராஜசிம்ம பல்லவனால் பிரதிஷ்டிக்கப்பெற்றனி என்றும் தெரிகிறது.

இந்தப் பல்லவ மன்னன் சிறந்த சிவபக்தர்களில் ஒருவன்; சிற்ப வேலைப்பாடுகளுக்குப் பேர்போன கைலாஸ நாதர் கோவிலைக் கட்டியவன். இவனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

கடல்சூழ்ந்த உலகெலாம்
காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன்

(காடவர்கோன் - பல்லவ மன்னன். கழற்சிங்கன் - வீரக்கழலை அணிந்த ராஜசிம்மன்.)

என்று குறிப்பிடுவர்.

இந்த மன்னன் மாமல்லபுரத்துத் திருமால் கோயிலின் உள்ளிடமாக அமைத்திருந்த இரண்டு சிவாலயங்களையும் நேரில் பார்த்தே திருமங்கை மன்னன் தமது இஷ்டமூர்த்தியை, 'பிஞ்ஞகனோடு இணங்கு, திருச்சக்கரத்து எம்பெருமானார்' என்று குறிப்பிடுவதாய்க் கருதுவதும் பொருத்தமுடையதே.

ராஜசிம்மன் காலத்திற்கு முன்பே திருமால் கோயில் மாமல்லபுரத்துக் கடற்கரையில் இருந்தது என்பதற்கு ஆதாரம் உண்டு. ராஜசிம்ம பல்லவனின் ஆஸ்தான மகாகவியாக விளங்கியவர் தண்டியாசிரியர். இவர் தாம் தரிசித்தபோது

Koviloor Digital Library

திருமாலின் திருவடிகளைக் கடல் அலைகள் மோதி அலம்பின என்று தமது 'அவந்தி சுந்தரி' கதையின் தொடக்கத்திலே கூறியுள்ளார். இந்த நிலைமை திருமங்கை மன்னனின் காலத்தில் மாறிவிட்டது.

இதற்குக் காரணம் ராஜசிம்ம பல்லவன், பெருமாள் சந்நிதிக்கு முன்புறமாகச் சிவன் கோயிலைக் கட்டிவைத்தது தான். அக்காலம் தொட்டுக் கடல் அலைகள் திருமாலின் மூர்த்தத்தில் மோதுவதற்கு இடமில்லாமல் போய்விட்டது. இந்த நிலையில்தான் திருமங்கை மன்னன் கடற்கரைத் திருமாலைப் 'பிஞ்ஞகனோடு இணங்கு திருச்சக்கரத்து எம்பெருமானார்' என்று தாம் தரிசித்த காட்சியைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

திருமங்கை மன்னன் கண்ட கடல்மல்லை பொருட் செல்வத்தோடு அருட் செல்வத்திற்கும் ஒரு சான்றாகத் திகழ்ந்ததென்று இவர் பாடியிருக்கும் பாசுரங்களிலிருந்து ஊகிக்கலாம். கடற்கரையிலே பொற்குவியலையும் நவமணிக் குவியலையும் கண்டவர், அதே கரையில் பள்ளிகொண்ட பெருமாளைப் 'பொற்குன்று' என்றும், 'பவளத்தூண்' என்றும், 'கடலில் அமுதம்' என்றும் போற்றுகிறார்.

அடியார்கள் வலம் வந்து வழிபடக் கண்டதும் இந்த இஷ்டமூர்த்தியைத் 'தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு' என்றும், 'கற்பகம்' என்றும் போற்றுகிறார். இப்பெருமான் சிவபெருமானுடன் இணங்கியிருந்த அந்தச் சமரச நிலையைப் பெரிதும் வியந்தவர் போல்,

உடம்புருவில் மூன்(று) ஒன்றாய்
மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றான்

(மூன்று ஒன்றாய் - மூன்று தத்துவமும் ஒன்றாகி) என்றும் போற்றுகிறார்.

Koviloor Digital Library

இவ்வூரில் பகவான்மீது பக்தியுடன் பாகவத பக்தியும் இவருக்கு அதிகரிக்கிறது. இந்த அடியார்களைத் தம்மை ஆளும் அரசர்கள் என்றும், தலைவர்கள் என்றும் குலதெய்வங் கள் என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

கடிகமழும் நெடுமறுகின்
 கடல்மல்லைத் தலசயனத்(து)
அடிகள்அடி யேநினையும்
 அடியவர்கள் தம்அடியான்

(கடிகமழும் - வாசனை கமழ்கின்ற. நெடுமறுகின் - நீண்ட வீதிகளையுடைய. அடிகள் - சுவாமி.)

என்று எவ்வளவு விநயமாக இந்த 'நெடுவேல்வலவன் தம்மை அறிவித்துக்கொள்கிறார் பாருங்கள்.

பல்லவ ராஜதானியில்

மாமல்லபுரத்திலேயே, பல்லவர் தலைநகரமாகிய காஞ்சியின் நினைவும் வந்துவிடுகிறது. கடல்மல்லைப் பெருமானையும் அடியார்களையும் தரிசிக்கும்போது, காஞ்சிமாநகரைச் சேர்ந்த திருவெஃகாவில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளின் நினைவும் ஏற்படுகிறது. அந்தப் பெருமாளின் திவ்ய தேசமென்றே பாகவதர்கள் இந்தப் பெருமாளையும் தொழுவதாக இவர் கடல்மல்லைப் பாசுரம் ஒன்றில் கூறியுள்ளார்.

கடற்கரையிலுள்ள திருவிடவெந்தை என்ற தலத்துப்பெருமாளைத் தரிசித்துவிட்டு இவர் காஞ்சிக்குப் போகிறார்.

திருவிடவெந்தையை நெருங்கும்போது இவரது பக்திக் காதல் கடல்போலப் பெருகிவிடுகிறது.

'பரகாலன்' என்ற இவரைப் 'பரகால நாயகி' என்றே சொல்லும்படி அவ்வளவு காதல் புருஷோத்தமன்மீது இவருக்கு ஏற்படுகிறது.

Koviloor Digital Library

இவளைஉன் மனத்தால்
என்நினைந் திருந்தாய்?
இடவெந்தை எந்தை பிரானே!

என்று பாடுவதைக் கேளுங்கள்.

''உன்னுடைய மனசிலே இவளை என்ன செய்வதாக நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய்?'' என்று தாய் கேட்பதுபோல் கேட்டு இவர் தமது காதலை வெளியிட்டுக்கொள்கிறார். இத்தகைய காதலுடன் காஞ்சீபுரத்துத் திருப்பதியாகிய 'அட்டபுயகரம்' என்னும் தலத்திற்கு வந்துவிடுகிறாள் பரகால நாயகி.

இந்தத் திருக்கோலத்தில் ஈடுபடுகிறாள் இந்த நாயகி. ''என்ன அழகு! இதுவரை நான் கண்டறியாத ஒரு புதுமைக்கோலமாயிருக்கிறது. சொந்தப் புத்தியால் அறிந்து கொள்ள முடியவில்லை; அறிந்துகொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை. என்ன செய்யலாம்?'' என்று திகைக்கிறாள்.

''நீர் யாரோ?'' என்று அவரையே கேட்டுவிடலாமா? நாவு எழவில்லை. அழகு அலையெறிந்து தள்ளுகிறதாம், முகத்தை நேரே பார்த்துவிடாதபடி வெட்கம் ஒருபுறம்.

''யார் இவர்?'' என்று வேறொருவரை நோக்கி இவள் கேட்க, அதற்கு அந்தக் காதலனே, ''நான் அட்டபுய கரத்தேன்'' (அட்டபுய கரக்ஷேத்திரத்தில் உள்ளவன்) என்று மறுமொழி கூறுகிறானாம்.

உண்மையில், இந்த நாயகியின் கேள்வி, அதற்கு விடை எல்லாம் இவள் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளே. இவ்வார்த்தைகள் தோழி செவியிலும் தாயின் செவியிலும் விழுகின்றன. அவர்கள், ''ஏன் இப்படியெல்லாம் சொல்லுகிறாய்? என்ன பிரமை?'' என்று கேட்க, இவள் பதில் சொல்வதுபோல் திருமங்கை மன்னன் பாசுரங்கள் பாடித் தமது பக்திக் காதலை வெளியிடுகிறார்.

Koviloor Digital Library

''அலைகடல்போல் இருக்கிறாரே, இந்த அழகர் யார்? நீலக்கருமாமுகில் போலக் காட்சியளிக்கிறாரே, இவர் யார்? அழகிய சுடர்போல் இருக்கும் இவர் யார்? பூவைப்பூ, காயாம்பூ. கருநெய்தற்பூ என்ற நீலமலர்கள்போல் தோன்று கிறாரே, இவர் யார்?'' என்று இப்படியெல்லாம் தலைவி கேட்கிறாள். யாரையோ பார்த்து இவள் கேட்கப் பதில் சொல்லிக்கொண்டேயிருக்கிறான் பெருமான்.

காதலியோ, 'இவர் பார்க்கிற பார்வையே கொடுமை யாக இருக்கிறது; நான், இவரை, ''யார்?'' என்று கேட்கவும் அஞ்சுகிறேன்' என்கிறாள். இதற்கும் காதலன், ''நான் அட்டபுய கரத்தேன்'' என்று பதில் சொல்லுகிறானாம்:

நஞ்சம் உடைத்(து)இவர்
நோக்கம்; நான் இவர்
தம்மை அறிய மாட்டேன்;

அஞ்சுவன் மற்(று)இவர்
ஆர்கொல்லை என்ன;
'அட்ட புயகரத் தேன்' என்றாரே.

(நஞ்சம் உடைத்து - நஞ்சு கலந்ததுபோல் அவ்வளவு கொடியதாயிருக்கிறது.)

கச்சிமாநகரில் (காஞ்சீபுரத்தில்) ஸ்ரீவைகுண்டப் பெருமாள் சந்நிதி என்று பிரசித்தமாக ஒரு சந்நிதி இருக்கிறதல்லவா? அந்தச் சந்நிதியையும் இந்த ஆழ்வார் பாடியிருக்கிறார். அதை இவர், 'பரமேச்சுர விண்ணகரம்' என்று குறிப்பிடுகிறார்.

பரமேச்சுரன் என்ற பல்லவ மன்னனால் கட்டிப் பிரதிஷ்டிக்கப் பெற்ற விஷ்ணுக் கிரகம் (திருமால் கோயில்) இது. இந்த அரசனைப் பல்லவமல்லனான நந்திவர்மன் என்று, திருமங்கை மன்னன் இப்பதிகத்தில் சொல்லும் விவரங் களிலிருந்து ஆராய்ச்சியாளர்கள் தீர்மானிக்கிறார்கள்.

Koviloor Digital Library

திருமங்கை மன்னன் இந்த அரசனை, 'மல்லையர்கோன்' (கடல் மல்லைக்குத் தலைவன்) என்றும்,

தேர்மன்னு தென்னவனை
முனையில், செருவில்
திறல்வாட்டிய திண்சிலையோன்

(தேர் மன்னு தென்னவனை - தேர் வீரனான பாண்டியனை. முனையில் - போர்முனையில். செருவில் திறல் வாட்டிய - சண்டை செய்யும் வில்லின் வலிமையைப் பங்கப்படுத்திய. திண்சிலையோன் - வலிமையான வில்லை உடையவன்.)

என்றும் குறிப்பிடுகிறார்.

இந்தப் பாண்டியன் பெயர் மாறவர்மன் என்றும், இவன் பெரியாழ்வாரின் சீடன் என்றும் கூறுவதுண்டு. அக்காலத்திலே இப்பாண்டியன் தமிழ்நாட்டின் பெரும் பகுதியை ஆண்டு வந்த பேரரசனாக இருந்தான் என்பர்.

இந்தப் பாண்டியனைப் போர்முனையில் வாட்டிய பல்லவர் கோன் 'மண்ணை' முதலான இடங்களிலும் பகைவர் களை வென்றதாகத் திருமங்கை மன்னன் தெரிவிக்கிறார். இப்போர்கள் பாண்டி நாட்டின் எல்லைப்புறத்தில் பல்லவ நந்திவர்மனின் சேனாபதி பாண்டிய மாறவர்மனுடன் நடத்திய போர்களே என்பர்.

நந்திவர்ம பல்லவன் திருமங்கை மன்னனுக்குச் சம காலத்தவன் என்பதும் ஆராய்ச்சியாளர் துணிபு. இந்த நந்திவர்மன் காலத்திலே கி.பி. 754 - க்குப் பின்பு திருமங்கை மன்னன் தமது அஷ்ட புயகரப் பதிகத்தைப் பாடினார் என்பது திரு.மு. இராகவையங்காரின் அபிப்பிராயம்.

இது சரியானால் திருமங்கையாழ்வார் எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நாம்கண்ட காஞ்சிமா நகரை 'அட்டபுயகரப் பதிகம், பரமேச்சுர விண்ணகரப் பதிகம்' என்ற இரண்டு பதிகங்களிலும் குறிப்பிடுகிறார் எனலாம்.

Koviloor Digital Library

இவர் காஞ்சீபுரத்தில் இன்று பிரசித்தமாயிருக்கும் வரதராஜப் பெருமாள் கோவிலைப் பாடவில்லையென்பது கவனிக்கத் தக்கது. இந்தப் பெருமாளை ஆழ்வார்களில் ஒருவரும் பாடவில்லை. ஆசாரியர்களின் காலம் தொட்டே இக்கோயில் பிரசித்தி பெற்று வந்திருக்கிறது.

திருமங்கை மன்னன் காலத்திலே காஞ்சிமாநகரை இரட்ட வேந்தனான வயிரமேகன் என்பவன் கி.பி. 754 -இல் கைப்பற்றினான் என்பது சரித்திரச் செய்தி.

மன்னவன் தொண்டையர்
கோன்வணங்கும்
நீள்முடி மாலை
வயிர மேகன்
தன்வலி தன்புகழ்
சூழ்ந்த கச்சி

என்ற இவர் வாக்கைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இரட்ட வேந்தனாகிய வயிரமேகன், நந்திவர்மனை வென்று காஞ்சியைக் கைக்கொண்ட பின் இவனுடன் சமாதானம் செய்துகொண்டு இவனுக்கே தன் மகளையும் மணஞ்செய்து கொடுத்தான் என்பதும் சரித்திரச் செய்தி. திருமங்கையாரின் வாக்கிலே அப்போதிருந்த காஞ்சிமா நகரின் நிலைமையே, 'வயிரமேகன் தன் வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி' என்று குறிக்கப்படுகிறது எனக் கருதுவதே பொருத்த மாகும்.

இரட்டனான வயிரமேகனுக்கும் பல்லவனான (தொண்டையர் கோனான) நந்திவர்மன் என்ற பரமேச் சுரனுக்கும் சண்டை ஏற்பட்டதையும், பிறகு சமாதானம் ஏற்பட்டதையும், வயிர மேகனுக்குப் பல்லவன் மாப்பிள்ளை யானதையும், மாமனைப் பல்லவன் கௌரவித்ததையும் திருமங்கை மன்னன் நேரில் அறிந்திருக்க வேண்டும்.

Koviloor Digital Library

அக்காலத்துக் காஞ்சி அந்தப் படையெடுப்பால் அழகு குன்றிப் போய்விடவில்லை. வென்றவனுக்கு மருமகனாகி அந்த வெற்றிவேந்தனது வயிரமேகப் பெயரையும் தன் கௌரவப் பெயராகத் தரித்துக்கொண்டுதன் வீரச் சிறப்பிற்குக் குறைவின்றி நந்திவர்மன் ஆண்டு வந்த கச்சியை,

தடம் சூழ்ந்(து) அழகாய
கச்சி

(தடம் - தடாகங்கள்.)

தடமா மதிள்சூழ்ந்(து)
அழகாய கச்சி

என்றும்,

மணிமா டங்கள்
சூழ்ந்(து) அழகாய
கச்சி

என்றும்,

அணி மாடங்கள்
சூழ்ந்(து) அழகாய
கச்சி

என்றும்,

ஒளிமா டங்கள்
சூழ்ந்(து) அழகாய
கச்சி

என்றும்,

சிறப்பித்துப் பேசுகிறார் திருமங்கை மன்னன்.

அரசர்கள் வந்தார்கள்; போனார்கள், போராடினார்கள், சீராடினார்கள். காஞ்சியை அழகு செய்தார்கள்; தடாகங்கள் முதலான நீர் நிலைகள் அமைத்து மக்கள் வாழ்க்கைக்கு வசதி

Koviloor Digital Library

செய்து கொடுத்தார்கள். நகரத்தை மதில் கட்டிப் பாது காத்தார்கள். மக்கள் வழிபட்டு உய்யக் கோயில்களும் கட்டி வைத்தார்கள்.

அரசர்களின் வீரச்செயல்களும் வெற்றிப் பிரதாபங்களும் பேராசைகளும் போராசைகளும் எல்லாம் கால வெள்ளத்தில் மறைந்து போய்விட்டன. அவர்கள் கட்டிய மணிமாடங்களும் அணிமாடங்களும் ஒளி மாடங்களும் மறைந்துவிட்டன. அவர்கள் கட்டிய கோயில்களோ இன்றும் காஞ்சிக்குக் 'கோயில் நகரம்' என்ற பேரையும் புகழையும் அளித் திருக்கின்றன.

பல்லவர்களின் பெயரே கால வெள்ளத்தில் கரைந்தது என்று சொல்லும்படியாகிவிட்டது. ஆனால் 'பரமேச்சுர விண்ணகரம்' என்ற வைகுண்டப் பெருமாளின் கோயிலும் வேறு கோயில்களும் பல்லவர்களின் பெரும் புகழ்ச் சின்னமாக இன்றும் விளங்குகின்றன.

பல்லவமல்லன் 'சமுத்திர கோஷம்' என்னும் பெயருள்ள ஒரு பெரிய வாத்தியத்தை - அதாவது 'கடுவாய்ப் பறை'என்ற முரசைச் சிறப்பாக உடையவனாயிருந்தான் என்பது சாஸனச் செய்தி. இந்த முரசைத் திருமங்கை மன்னன், 'கடல் போல் முழங்கும் குரல் - கடுவாய்ப் பறை' என்று தமது பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் கூறியுள்ளார். எனினும் அம்மன்னர்களின் பக்தியே கோயில்களாகி இன்றும் அவர்கள் புகழைப் பறைசாற்றிக் கடல்போல் முழக்கி வருகிறது.

Koviloor Digital Library

13. யாத்திரை பூர்த்தியாகிறது

திருக்கோவலூரில்

திருமங்கை மன்னன் தொண்டைநாடு கடந்து திருக்கோவலூருக்கு வந்து, முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதிகள் பாடின அந்தத் தலத்திலே பக்தி பண்ணுகிறார்.

பாவரும் தமிழால்
பேர்பெறு பனுவல்
பாவலர் பாதிநாள்
இரவில்
மூவரும் நெருக்கி
மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன்
னாடு

என்று புகழ்ந்து பேசப்பெறும் நடுநாட்டிலே, மூவர் ஏற்றிய மொழிவிளக்கின் உதவியால் பேறுபெற்றிருக்கும் இவரும், 'ஆயனார்' என்ற கோபாலனைக் கோவலூர் என்ற கோபால புரத்தில் கண்டுகளிக்கிறார்.

இத்திருக்கோவலூரின் நீர்வளம் நிலவளங்களோடு ஞானவளத்தையும் பாடுகிறார். பெண்ணையாற்றின் தென்கரையிலே,

செஞ்சாலி விளைவயலுள்
திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூர்

(செஞ்சாலி - செந்நெற்பயிர்கள்.)

என்றும், 'செல்வத் திருக்கோவலூர்' என்றும்,

Koviloor Digital Library

தீங்கரும்பு கண்வளரும்
கழனி சூழ்ந்த
திருக்கோவலூர்

என்றும் தாம் நேரில்கண்ட ஊர்வளத்தைப் பாடுகிறார். செல்வத் திருக்கோவலூரில் தாம்கண்ட ஞானச் செல்வர்களையும் சிறப்பித்துப் பேசுகிறார்.

இவர் கண்ட அறிஞர்கள், மறைவளரப் புகழ்வளர வீதிகளில் உள்ள மண்டபங்களில் எல்லாம் வேதம் ஓதுகிறார்களாம். எனினும் இவருள்ளம் அதிக அளவில் 'கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்க'ளிடத்திலும்,

அடியவர்க்(கு) ஆரமுதம்
ஆனான்

என்று இவர் பாடும் ஆயனாரிடத்திலும் ஈடுபடுகிறது.

'பொழில் அணைந்த தென்றல் வீசும் திருக்கோவலூ'ரில் ஞானமாருதமும் வீசுகிறது; பக்தித் தென்றலும் வீசுகிறது; கிருஷ்ண லீலைகள் நினைவிற்கு வருகின்றன. உறிகளில் வைத்திருந்த வெண்ணெயை அந்த இருட்டான இடத்திலும் எப்படியோ ஒளிகண்டு களவாடிக் கண்ணீர் நிரம்பிய கண்களுடன் கட்டுண்டிருந்த சோரசிகாமணியை அப்படியே கண்டதாகப் பாடுகிறார்.

இந்த ஆயனாரைக் 'கலந்தவர்கட்கு அருள் புரியும்' கற்பகமாகக் காண்கிறார். நாமகளும் மலர்மகளும் கலந்து சிறப்பிக்கும் திருக்கோவலூரில் தமக்கு அருள் செய்த பெருமானை, 'நீல மரதகம் (மரகதம்)' என்றும், 'மழைமுகில்' என்றும் போற்றிப் பரவசமாகிறார்.

திருவயிந்திரபுரத்தில்

பிறகு திருவயிந்திரபுரத்திலும் பக்தி பண்ணுகிறார்.

மொய்கொள் மாதவி
செண்பகம் முயங்கிய
முல்லையங் கொடிஆட,

Koviloor Digital Library

செய்ய தாமரைச்
செழும்பணை திகழ்தரு
திருவயிந் திரபுரமே

(மொய்கொள் - நெருங்கிய. முயங்கிய - தழுவிய. முல்லை அங்கொடி - அழகிய முல்லைக்கொடிகள். செய்ய தாமரைச் செழும்பணை - செந்தாமரைப் பூக்கள் செழித்து வளர்கின்ற வயல்கள். திகழ்தரு - திகழ்கின்ற.)

என்று இத்திருப்பதியின் வளத்தைப் பாடுகிறார்.

இவ்வூர்ப் பெருமாளை 'அடியவர்க்கு மெய்யன்' என்று போற்றுகிறார். இவ்வூரிலே குரங்குகள் கூட்டங்கூட்டமாக வேங்கை, கோங்கு, செண்பகம் ஆகிய மரங்களின் கொம்பு களில் குதித்துக் 'குர்குர்' என்று கூச்சல் இடுவதையும், அங்கு மிங்கும் ஓடுவதையும், பலாப்பழங்களைப் புசிப்பதையும் வருணித்திருக்கிறார்.

இக்குரங்குகளைக் கண்டதும், நின்றவாறு நில்லாத நெஞ்சையுடைய மக்களின் நினைவு வந்திருக்க வேண்டும். இந்த நெஞ்சுகளும் 'அடியவர்க்கு மெய்யனை' நம்பினால் சாந்திபெறும் என்பது குறிப்பு.

சோழ நாட்டிலே

'தேனுலாவிய செழும்பொழில் தழுவிய திருவயிந்திர புர' த்தை விட்டுப் புறப்பட்ட திருமங்கை மன்னன் சோழநாட்டை அடைந்து, 'கோயில்' என்றும், 'பூலோக சிவலோகம்' என்றும் சைவர்களால் போற்றப்படுவதும், வைஷ்ணவர்களால் தில்லைத் திருச்சித்ரகூடம்' என்று மதிக்கப்படுவதுமான சிதம்பரத்திற்கு வருகிறார். இங்கே காயக்கிலேசம் முதலான கொடுந்தவக் கொள்கைகளைக் கண்டித்துத் தீவினைகளை ஒழிப்பதற்குப் பக்தி மார்க்கமே சிறந்த மார்க்கம் என்ற தமது பெருங்கொள்கையை வற்புறுத்துகிறார்.

Koviloor Digital Library

'பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த' சித்திரகூடத்துப் பெருமாளைச் சிவநேசச் செல்வர்களான மூவாயிர நான்மறை யாளர்களும் நாள்தோறும் (நாளும்) 'முறையால் வணங்க'க் காண்கிறார். இந்தத் தேவாதி தேவன் திருமங்கையோடு கோயில் கொண்டிருக்கும் சித்திரகூடத்தை,

திருமால்திரு மங்கையொ(டு)
ஆடு தில்லைத்
திருச்சித்ர கூடம்

என்று குறிப்பிடுகிறார். இப்பெருமானையும், 'மாமழை காத்த கூத்தன்' என்கிறார்.

திருச்சித்திரகூடத்தில் கண்ணனாகக் காட்சிதந்த பெருமான் ஆய்ப்பாடி வீதியிலே கூத்தாடிக்கொண்டு வருவது போலவே காட்சி தருகிறான். இந்த அழகனின் பேரழகில் ஈடுபட்டு,

மாகடல் ஒத்து
அருவித் திரள்திகழ்
கின்ற ஆயிரம்
பொன்மலை ஒத்து

இவன் தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டான் என்கிறார்.

இங்கேயிருந்து சீர்காழிக்கு வந்து சீராமவிண்ணகரம் என்னும் திருப்பதியைப் பாடியிருக்கிறார். இந்தக் கோயிலின் அருகே இருக்கும்போதுதான் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளை இவர் சந்தித்திருக்கக்கூடும். சீர்காழியின் நீர்வளம், விழாவளம் முதலான சிறப்புக்களை இவரும் பாடியிருக்கிறார்.

Koviloor Digital Library

சீர்காழியில்

சீர்காழிச் சீராம விண்ணகரத்துப் பெருமாளை,

பிறைதங்கு சடையானை
வலத்தே வைத்து,

மகாலட்சுமியைத் திருமார்பில் வைத்துக்கொண்டிருப்பவன் என்று பாடுகிறார்.

இந்தப் பதிகத்தின் இறுதியில் திருமங்கை மன்னன் தம்மை,

அங்கமலத் தடவயல்சூழ்
ஆலி நாடன்,
அருள்மாரி அரட்டமுக்கி,
அடையார் சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள்
மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன்
கலியன்

என்று தம்மைக் கம்பீரமாகப் பல விருதுகளுடன் அறிவித்துக் கொள்கிறார்.

இதிலிருந்தே, இவரது பரிஜனங்கள் இவருக்கு முன் பல விருதுகளை எடுத்து ஏத்திக்கொண்டு சென்றனர் என்றும், திருஞானசம்பந்தரின் அடியார்கள் வந்து, ''எங்கள் ஞான சம்பந்தப் பெருந்தகை உள்ள இடத்தில் இப்படி விருதூதிச் செல்லலாகாது'' எனத் தடை செய்தனரென்றும் பிற்காலத்தில் கதைகள் கிளைத்திருக்கக்கூடும்.

சொந்த ஊரில்

சீடர்கள் ஜயமங்களம் பாடத் தமது திவ்ய தேச யாத்திரையைத் திக்விஜயம் போலச் செய்து வந்தவர் திருவாலியை அடைந்து, இவ்வூரிலும் தமது தேவியின்

Koviloor Digital Library

பிறப்பிடமான வெள்ளக்குளம் முதலான ஸ்தலங்களிலும் இஷ்டமூர்த்தியைப் போற்றிப் பாடினார் என்பர். 'திருவாலி அம்மான்' என்று தாம் போற்றிய பெருமானை, 'அடியேன் மனம் புகுந்த அப்புலவன்' என்றும் போற்றுகிறார்.

திருவாலியில் இவர் 'பகவத் காமுகர்' ஆகிறார் என்றே சொல்லவேண்டும்.

தானாக நினையானேல்
தன்நினைந்து நைவேற்(கு)ஓர்
மீனாய கொடி நெடுவேள்
வலிசெய்ய மெலிவேனோ?
தேன்வாய வரிவண்டே!
திருவாலி நகர்ஆளும்
ஆனாயற்(கு) என்உறுநோய்
அறியச்சென்(று) உரையாயே.

(நினையானேல் - நினையாதிருந்தாலும். தன் நினைந்து - அவன் தன்னையே (அவனையே) நினைத்துக்கொண்டு. நைவேற்கு - மனம் நைந்துகொண்டிருக்கிற எனக்கு. ஓர் மீனாய கொடிநெடுவேள் - மீன் கொடியை உடைய மன்மதன். வலிசெய்ய - துன்பப்படுத்த. தேன் வாய - தேனைப்போல் இனிமையாகப் பாடுகிற. வரிவண்டே - வரிகளையுடைய வண்டே. ஆன்ஆயற்கு - பசுக்களை மேய்க்கும் கண்ணனுக்கு. உறுநோய் - அதிகமாக இந்த மனவியாதியை.)

என்று இவர் பாடுவதைக் கேளுங்கள்:

தமது பூலோக வைகுந்தமான திருவரங்கத்திலே தங்கித் தாம் உத்தேசித்த திருப்பணிகளைப் பூர்த்தி செய்துகொண்டு, தமது பக்திப் பெருங்காதலையும் விசேஷமாகப் பெருக்கிக் கொண்டார். அப்பால் மீண்டும் யாத்திரை தொடங்கிப் பல க்ஷேத்திரங்கள் வழியாகப் பாண்டி நாட்டுக்கு வருகிறார்.

திருக்குறுங்குடியிலிருந்து மலை நாட்டிற்குப் போய், அங்கிருந்து மறுபடியும் வந்து கள்ளழகர் கோயில் என்று

Koviloor Digital Library

பிரசித்தமாயிருப்பதும், வைஷ்ணவத்தின் பழைய வளர்ப்புப் பண்ணைகளில் ஒன்று என்று கருதப்படுவதுமான திருமாலிருஞ் சோலைக்கு வருகிறார்.

பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஒன்றாகிய இந்த அழகர் திருமலையானது கோயில் (திருவரங்கம்), திருமலை (திருவேங்கடம்), பெருமாள் கோயில் (காஞ்சீபுரம்) திருமாலிருஞ்சோலை என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படும் நான்கு திருப்பதிகளில் ஒன்றாகும்.

வேறு சில ஸ்தலங்களையும் தரிசித்துத் திவ்ய தேச யாத்திரையை முடித்துக்கொண்டு கடைசியாகத் திருக்குறுங் குடியிலே தங்கித் தமது ஜீவ யாத்திரையையும் முடித்துக் கொண்டாரென்று குருபரம்பரைக் கதைகள் சொல்லுகின்றன.

திருமங்கையாழ்வார் இமயமலை முதல் கன்யாகுமரி வரை யாத்திரை செய்தவர். இவர் இலங்கைத் தீவிற்குப் போய் வந்ததாகவும் ஒரு கதை உண்டு; சீன தேசம் போய் வந்தார் என்றுகூட ஒரு கதை வழங்குகிறது.

இந்தக் கதைகளின் உண்மை எப்படியிருந்தாலும், இவர் அகில இந்திய யாத்திரை செய்தார் என்பதும், போன இடங்களில் இயன்ற வரையில் கோயில்களைப் புதுப்பித்துப் பக்தர்களோடு அளவளாவி, பக்திப் பிரசாரம் செய்தார் என்பதும் நிச்சயமான விஷயங்கள்.

இவர் பல திருப்பதிகளையும் 'பாடிப் பரபரப்பாய்த் திரிந்தார்' என்பர் வைஷ்ணவ ஆசாரியர்கள். 'தேசம் அறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோம்!' என்று இந்த ஆழ்வாரே பகவானை நோக்கி விண்ணப்பம் செய்துகொள்கிறார். பெருங்கூட்டத்தோடு அதிகோலாகலமாக யாத்திரை செய்தா ரென்றும், தேவியான குமுதவல்லியும் உடன் சென்றா ளென்றும் குருபரம்பரைகள் தெரிவிக்கின்றன.

சுமார் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் திருமங்கையாழ்வார் கண்ட இந்தியா இவர் பாடல்களின்

Koviloor Digital Library

வாயிலாக நம் கண் முன் வருகிறது. வட இந்தியாவில் மகோன்னத மாட்சிதோன்றக் கொலு வீற்றிருக்கும் பாரத மகாராணி தென் இந்தியாவில் தன் சாந்தமயமான அழகு களையும் வளங்களையும் காட்டி வசீகரிக்கிறாள். இயற்கை யழகு வாய்ந்த இடங்களில் அமைந்த கோயில்கள், பக்தி யுணர்ச்சியோடு சௌந்தரிய உணர்ச்சியையும் தூண்டுகின்றன.

சோலை சூழ்ந்த க்ஷேத்திரங்களின் மதில்கள், மண்டபங் கள், கோபுரங்கள், மாட மாளிகைகள் இவை நாட்டின் செல்வச் சிறப்போடு சிற்ப ஜாலங்களையும் வெளியிடுகின்றன. எங்கே பார்த்தாலும் வயல்கள், நீர்நிலைகள், நாகரிக வாழ்க்கைக்குரிய வசதிகள்! பொன்னும் முத்தும் மணியும் கொழிக்கின்றன. வீர மன்னர்களும் அதிவீரர்களான பக்தர்களும் துறவிகளும் சாதாரணமாகக் காட்சி தருகிறார்கள். ஆழ்வார் வாழ்ந்த சோழ நாடோ பூலோக சொர்க்கந்தான்! போகமும் பக்தியும் ஒருங்கே பொங்குகின்றன; அழகும் கலையும் ஒழுக்கமும் ஓங்கு கின்றன: 'மலை போன்ற மாளிகை'களில் கடல் போன்ற ஞானமுள்ளவர்களைக் காண்கிறோம்.

பாகவத தர்மபூஷணமான திருமங்கையாழ்வார் காலம், தமிழர்கள் பெருவாழ்வு வாழ்ந்த காலம். அந்தக் காலத்தை ஒரு பெரும் பக்தி யுகம் என்று சொல்லவேண்டும்.

Koviloor Digital Library

14. பக்தர் சொல்லும் காதற் கதைகள்

''கோழி கூவிப் பொழுது விடியும்'' என்பார்கள் அல்லவா? இவளோ, 'கோழி கூவுவதுமில்லை; பொழுது விடிவதுமில்லை!' என்று சாதிக்கிறாள். 'சூரியன் எங்கே போய் ஒளித்துக்கொண்டதோ?' என்று அதிசயப்படுகிறாள்.

''சமுத்திரமும் தன்னைப்போல் உறக்கமில்லாமல் பித்துக்கொண்டு புலம்புகிறதோ என்று சந்தேகப்படுகிறாள். நிலாமுற்றத்திலே நிலாவை அநுபவிக்கப்போனால், 'அடாடா, அந்தக் கிரணங்கள் சீறுகின்றன; என்ன செய்வேன்?' என்று பதறுகிறாள்.

''பெற்ற தாயும் சீறுகிறாளே!'' என்கிறாள் ஒரு நிமிஷம். நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கைகளையும் பார்த்து, ''கள்ளன் உள்ளேதான் இருக்கிறான்; எனினும் வளைகள் போய் விட்டன! என்ன மாயமோ?'' என்கிறாள் ஒரு நிமிஷம்.

''அவன் எண்ணும் எண்ணந்தான் என்ன? நமக்குத் தெரியவில்லையே!' என்கிறாள் ஒரு சமயம். ''அவன்தான் என்னை நினைப்பதேயில்லையே!'' என்று பெருமூச்சு விடுகிறாள் ஒரு சமயம்.

''தென்றல் வீசும்போது, தீ வீசுகிறதென்கிறாள். மழை வாடையாவது குளிர்ந்திருக்க வேண்டாமா? அதோ பாருங்கள் கறுத்துக் கொழுத்த மேகங்களை! இப்போது மழைத் துளிகள் விழுகின்றன, வானத்தின் கண்ணீர்த் துளிகள் போல. அந்தத் துளிகளினூடே வருகிறது ஈரவாடை. ஆனால் 'அதில் ஈரமும் இல்லை; அது வாடையுமில்லை! ஆ, என்ன குற்றம் செய்தேன்! மரம் அறுப்பதுபோல் என் உயிரை அறுத்துத் தள்ளுகிறதே!' என்று நடுங்குகிறாள்.''

Koviloor Digital Library

இவ்வளவு கொடிய தண்டனைக்குரிய குற்றத்தை இவள் வாக்கு மூலமாகவே தெரிந்துகொள்வோம்:

தாரும் மார்வமும் கண்ட தண்டமோ?
சோரும் மாமுகில் துளியினூ(டு)வந்(து),
ஈர வாடைதான் ஈரும் என்னையே!

(தார் - மாலை. மார்வம் - மார்பு. தண்டம் - தண்டனை. சோரும் - விழும். மாமுகில் - கரிய பெரிய மேகங்கள். ஈரும் - (இங்கே) ரம்பம் போட்டு இழுத்து அறுப்பதுபோல் அறுக்கும்.)

'அந்த மார்பும் மாலையும் கண்டதற்கு இவ்வளவும் வேண்டியதுதான்! என்று துயரப்படும்போதே, மழையும் அதிகப்படுகிறது. கண்ணீரும் மழைபோல் பெருகுகிறது. ஐயோ! ஒரு நாள் நோவுபட்டாள்; ஒரு நாள் சுகமாயிருந்தாள் என்பதுண்டா?'

இப்படி ஆற்றாமை கரைபுரண்டு துடித்துக் கொண்டிருக்கும் காதலியை மறுபடியும் பூங்காவனத்திலே பார்க்கிறோம். 'எரிகிற நெருப்பைச் சென்று கிட்டுவாரைப் போலே' நெருங்குகிறாள் அந்தப் பூக்களை! அவற்றினிடையே 'நாயகனும் நாயகியு'மாகக் தேனுண்டு மகிழும் வண்டுகளை நோக்குகிறாள்.

ஒரு நிமிஷம் பெண்வண்டை முன்னிட்டு முகஸ்துதி செய்து, 'நீ தூது போய் என் நிலையை எடுத்துச் சொல்ல வேணும்!' என்று வேண்டிக்கொள்ளுகிறாள். அடுத்த நிமிஷம் ஆண்வண்டையும் தொழுது தூது விடுகிறாள். அவன் குறிப்பை அறிந்து வரும்படிதான் அங்கே கண்ட வேறு படசிகளையும் தூதனுப்புகிறாள். போன வண்டு வருமளவும் பொறுத்திருக்க முடியாமல்,

'செங்கால மடநாராய்!
இன்றே சென்று

Koviloor Digital Library

... ...
என்காதல் என்துணைவர்க்(கு)
உரைத்தி யாகில்,
இதுஒப்ப தெமக்கின்பம் இல்லை... ...

(செங்கால மடநாராய் - சிவந்த கால்களும் அறியாமையும் உடைய நாரையே.)

என்று நாரையை நோக்கி வேண்டுவதைப் பாருங்கள்.

தூதனுக்குக் கூலியுண்டல்லவா? 'சோலையைச் சேர்ந்த காட்டை ஏகபோகமாகத் தருவேன்!' என்று தாராளமாக வாக்குக் கொடுக்கிறாள். இனி நாரை பல இடங்களிலும் அலைந்து திரிய வேண்டியதில்லையாம்.

இங்கேவந்(து) இனிதிருந்(து)ன்
பெடையும் நீயும்
இருநிலத்தில் இனிதின்பம்
எய்த லாமே

(பெடை - பட்சிகளின் பெண்பால். இருநிலம் - பெரியபூமி. எய்தலாம் - அடையலாம்.)

என்று இன்பத்திற்கு இன்பம் கைம்மாறு தருவதாகச் சொல்வதும், இவளுக்கு ஒரு பணி செய்து இவ்வளவு லேசாகத்தான் இன்ப வாழ்க்கை பெறலாமென்பதை அறியாமல் இருக்கும் நாரையை, 'மடநாராய்!' என்று நிந்தாஸ்துதி செய்வதுபோலக் கொண்டாடுவதும், எவ்வளவு சாதுரியமாயிருக்கின்றன!

தன் காரியந்தான் இவளுக்குப் பெரிது; பட்சி ஜாதிக்கும் சொந்தக் காரியங்கள் இருக்குமே என்ற கவலை கிடையாது. ஏற்கனவே விட்ட தூதுகளோடு திருப்தி அடையாமல், காக்கையைக் கண்டதும்,

கரையாய், காக்கைப் பிள்ளாய்!
கருமா முகில்போல் நிறத்தன்

Koviloor Digital Library

உரையார் தொல்புகழ் உத்தம னைவரக்
கரையாய், காக்கைப் பிள்ளாய்!

(முகில் - மேகம். உரைஆர் - சொல்நிறைந்த. தொல் - பழைய. கரையாய் - கூப்பிடுவாய்.)

என்று வாய் மணியம் செய்வதைப் பாருங்கள்.

தனக்கு உபகாரம் பண்ணவேண்டிய அந்தப் பிராணியைக் 'காக்கைப் பிள்ளாய்' என்று அருமையாகவும் மரியாதையாகவும் அழைத்து, 'நீ வீணாகக் கத்திக்கொண்டிராமல், என் காதலன் வரும்படி அந்தக் கா - கா பாஷையிலே சிபார்சு செய்வாய்!' என்று வேண்டிக்கொள்ளுகிறாள்.

குயில் கூவுவதைக் கேட்டதும், அந்த உருக்கமான குரலிலேயே தன் காதலன் வரக்கூவவேணும் என்கிறாள் இந்தக் காரியவாதி.

'கூவாய், பூங்குயிலே!
... ...
... ... மணிவண்ண னைவரக்
கூவாய், பூங்குயிலே!'

பச்சைக் கிளியைப் பார்த்ததும், 'ஓ, கிளிப்பிள்ளாய்! உனக்குத்தான் பேசத் தெரியுமே! இனிமையாக ஒரு வார்த்தை சொல்லவேணும் எனக்காக!' என்று கெஞ்சுகிறாள்.

காதல் முதிர்ச்சி

மோகம் முற்றிப் போகிறது. தான் ஏதோ சொல்வதாகவும், அவன் பதில் சொல்வதாகவும் சில வார்த்தைகள் புறப்படுகின்றன, காதலி வாயிலிருந்து, தாய்மார் தோழிமார் முன்னிலையில்.

'இது என்ன பிரமை?' என்று அவர்கள் கேட்க, இவள் சொல்லுகிறாள்:-

காவிஒப் பார், கட லேயும் ஒப்பார்,
கண்ணும் வடிவும் நெடிய ராய், என்

Koviloor Digital Library

ஆவி, ஒப்பார்இவர் ஆர்கொல்? என்ன,
'அட்ட புயகரத் தேன்'என் றாரே.

(காவி - நீல மலர். அட்டபுயகரம் - காஞ்சீபுரத்தைச் சார்ந்த ஒரு ஸ்தலம்.)

'நீல மலர் போலவும் வந்து தோன்றுகிறார். அந்தக் கண்ணழகுக்கும் வடிவழகுக்கும் எல்லையே கிடையாது! எனக்கோ பிராணன்போல் இருக்கிறார். ''இவர் யார்?'' என்று ஒரு பக்கமாகத் திரும்பி வேறு யாரையோ கேட்பதுபோலக் கேட்டேன். உடனே, ''நான்தான்; தெரியவில்லையா?'' என்று ஊரைச் சொன்னார்!' என்ற வார்த்தையிலிருந்து, பக்கத்தி லிருந்தவர்கள் காதலியின் நிலையைக் குறித்தும், காதலன் விஷயமான சில விவரங்களைக் குறித்தும், உள்ளபடி ஊகஞ் செய்திருக்கக்கூடுமல்லவா?

எனவே தாய்,

''கண்டவர்தம் மனம்வழங்கும் கண்ணபுரத்(து)
அம்மானைக் கண்டாள் கொலோ?''

(அம்மான் - சுவாமி. கண்டாள்கொலோ - கண்டாளோ.)

என்று ஆச்சரியப்பட்டு, இப்படிக் கண்டிருந்தால்தான் இவள் தன் மனத்தை அந்த அழகனுக்கே இப்படி வழங்கியிருக்கக் கூடும் என்று அபிப்பிராயப்படுகிறாள்.

தாய், காதலி, காதலன் சந்திப்பு

கடைசியாகத் தாய், காதலியைக் காதலனுக்குச் சுட்டிக் காட்டி, ''இவள் விஷயத்திலே நீ என்ன செய்ய நினைத் திருக்கிறாய்? சொல்லு, எங்கள் பயம் தீரும்படி!'' என்று கேட்கிறாள். இப்படிக் கேட்கும்போதே, ''எப்படியிருந்தவள் எப்படி மாறிவிட்டாள்!'' என்பதையும் சொல்லுகிறாள்.

'துளம்படு முறுவல்
தோழியர்க்(கு) அருளாள்!'

Koviloor Digital Library

(துளம் - மாதுளை; (இங்கே) மாதுளம் விதை. படு - தோன்றும். முறுவல் - புன்னகை.)

என்கிறாள்.

பற்கள் சிறிது தோன்ற ஒரு புன்சிரிப்புச் சிரிப்பாளாம். தோழிகளை நோக்கி. அப்போது அந்தப் பற்கள் மாதுளம் விதைபோலத் தோன்றும்; அந்தப் புன்சிரிப்பு அந்தத் தோழிகளுக்கு ஏதோ ஒரு தெய்வமே அப்படி வந்து அருள் செய்வதுபோல் இருக்குமாம். அது இப்போது கனவாய்க் கதையாகிவிட்டது! கண்கள் மைகண்டு, கூந்தல் மலர்கண்டு எவ்வளவோ காலமாகிவிட்டது! சந்தனம் பூசி முத்துமாலை அணிந்தாலும், நெருப்பை வாரிக் கொட்டுவது போலவே இருக்கிறது! சில சமயங்களில் ஒன்றும் சொல்லத் தெரியாமல், 'ஓ!' என்று கதறுகிறாள்! அதற்குமேல் ஏதாவது சொல்ல நேர்ந்தால், ''என்ன செய்வேன்? சொல்லுங்கள்'' என்ற புலம்பல்தான்! - காதலன் பெருமையைச் சொல்லத் தொடங்கி விட்டாலோ, ''அப்படிச்செய்தான்; இப்படிச் செய்தான்!'' என்று விரிவாகச் சொல்லிக்கொண்டேயிருக்கிறாளாம்.

இப்படியெல்லாம் சொல்லிக் காட்டி,

'ஏழைஎன் பொன்னுக்(கு)
என்நினைந் திருந்தாய்?'

என்று பெற்றவள் இருதயம் பரிதவிக்கும் காட்சி, சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கிறதல்லவா?

வேறொரு காட்சி

ஆனால் காதற் கதைகளில் பெரும்பாலும் தாய் இந்தவிதமாக நடந்துகொள்வதில்லை.

'பந்தாடு கழல்மருவாள்! பைங்கிளியும்
பாலூட்டாள்! பாவை பேணாள்!'

(கழல் - பெண்கள் விளையாட உபயோகிக்கும் கழற்சிக் காய்கள். மருவாள் - நெருங்கமாட்டாள். பாவை - பொம்மைகள். பேணாள் - விரும்பமாட்டாள்.)

Koviloor Digital Library

அதாவது, பந்து விளையாட்டு, கழல் விளையாட்டு, பொம்மை விளையாட்டுகளை விரும்புவதேயில்லை. உயிர்த்தோழி போன்ற அந்தப் பச்சைக்கிளிக்கும் பாலூட்ட மறந்துவிடுகிறாளே! - என்றும்,

அந்தோ! வந்(து) என்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே.

(செய்தனகள் - செய்த வகைகள். அம்மனைமீர் - (என்னைப் போல் பெண்ணைப் பெற்ற) தாய்மார்களே.)

என்றும், பக்கத்து வீடுகளிலுள்ள ஸ்திரீகளிடம் புகார் செய்கிறவள், 'நம் குடிக்கு இதுவோ நல்லது?' என்று காதலைத் தடுக்க முயல்வதும் உண்டு.

என்சிறகின் கீழ்அடங்காப் பெண்ணைப் பெற்றேன்;
இருநிலத்(து) ஓர் பழிபடைத்தேன்; ஏ! பாவமே!

(இருநிலம் - பெரிய பூமி. ஓர் - ஒப்பற்ற.)

என்று பிறரிடம் முறையிட்டுக்கொள்ளும் தாய்க்கும் பெண்ணுக்கும் அந்தரங்கம் இருக்க முடியுமா?

'என்பேதை என் சொல் கேளாள்' என்று சொல்லுகிறவள் காதலை அறியாதவள் என்றுதானே காதலி முடிவு கட்டுவாள்! தாயிடம் விசேஷ அன்புள்ளவளாயிருந்தால், 'என்ன செய்தால் மறக்கலாம்? மனமே!' என்று தற்சோதனை செய்து பார்க்கக் கூடும். மறக்கும் முயற்சி ஞாபகத்தைக் கூராகத் தீட்டி விடுவதும் உண்டு; கேள்வியும் சோதனையுமே மனத்தைச் சுடுவதும் உண்டு.

துணிந்த காதலி அந்த மனமே துணையாகக் காதலனிடம் செல்லுகிறாள். தாயின் துயரம் அதிகப்படுகிறது. 'என்ன காரியம் செய்தாள்? எப்படித் துணிவு வந்தது?' என்று கலங்கு கிறாள். காதலனையே துணையாகக் கொண்டுதான் போனாள் என்று தெரிந்தாலும்,

Koviloor Digital Library

கெண்டைஒண் கண்மிளிரக் கிளிபோல் மிழற்றி நடந்து

(கெண்டை - ஒருவகை மீன். ஒண்கண் - இயற்கையழகு வாய்ந்த கண்கள். மிளிர - புரள. மிழற்றி - கொஞ்சிப் பேசி.)

அவன் பின் எப்படிப் போயிருப்பாளோ? என்ற கவலை தாயின் நெஞ்சைவிட்டு நீங்குவதில்லை. 'பெற்றவள் என்ற இரக்கமில்லையே! என்மேல் இரக்கமில்லாவிட்டாலும் தந்தையைக் குறித்தாவது இரக்கப்படலாகாதா?' என்று ஏங்குவாள். அவள் இருந்து ஆடிய ஊஞ்சலும், விளையாட்டுச் சாமான்களும் அவளை ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

மின்னையும் வஞ்சியும் வென்றிலங்கும் இடையாள் நடந்து

(மின் - மின்னல். வஞ்சி - ஒருவகையான கொடி.)

போகும் அழகையும், 'அன்னமென நடந்து' போன 'பூங்கொடியாள்' கொடுமையையும் எப்படி மறக்கும் அந்தப் பேதை நெஞ்சு!

இன்னும் ஒரு காதலி

இதோ பாருங்கள், காதலனை எதிர்பார்த்து நீண்ட நேரமாகக் காத்திருக்கும் ஒரு காதலியை. முதல் முதல் தானும் அந்திப்பொழுதுமாயிருந்தாள். சிந்தையை அவனிடம் அனுப்பிவிட்டு. பிறகு தோழி வந்தாள். அவள் வந்ததை அறிந்து, 'நாம் இதற்கு என்ன செய்வோம்?' என்று துயரத்தை அவளோடு பங்கு போட்டுக்கொள்ளப் பார்க்கிறாள் ஒரு நிமிஷம்.

அடுத்த நிமிஷத்திலேயே அவளையும் மறந்தவள் போல,

ஊரும் துஞ்சிற்(று), உலகமும் துயின்ற(து);
ஒளியவன் விசும்(பு) இயங்கும்
தேரும் போயிற்று, திசைகளும் மறைந்தன;
செய்வதொன்(று) அறியேனே!

(துஞ்சிற்று, துயின்றது - உறங்கியது. ஒளியவன் - சூரியன். விசும்பு - ஆகாயம்.) என்று பிரலாபிக்கிறாள்.

Koviloor Digital Library

இப்போது இரவும் தானும் தோழியுமாக இருந்து,

'கரிய நாழிகை, ஊழியிற் பெரியன,
கழியுமா(று) அறியேனே!'

(கரியநாழிகை- ராத்திரியின் நாழிகை. ஊழியின் - யுகத்தைக் காட்டிலும்.)

என்று கதறுகிறாள். ஒவ்வொரு நாழிகையும் யுகங்களைக் காட்டிலும் நீளமாகப் போய்க்கொண்டே இருந்தால் இரவு கழிவதுதான் எப்படி?

இவள் தன்னுடைய காதலனைக் குறித்துத் தோழியிடம் பிரஸ்தாபிக்கும்போது,

கைவளையும் மேகலையும் காணேன்; கண்டேன்
கனக மகரக் குழைஇரண்டும் நான்குதோளும்:
''எவ்வளவுண்(டு) எம்பெருமான் கோயில்?'' என்றேற்கு
''இதுவன்றோ எழில்ஆலி!'' என்றார் தாமே

(மகரக்குழை - மகரகுண்டலம். எழில்ஆலி - அழகான திருவாலியென்ற ஊர்.)

என்று பழைய அநுபவத்தைச் சொல்கிறாள்.

அவனைக் கண்டதும் தலைகுனிந்து அவன் அடிகளையே நோக்கினாளாம். காதலுணர்ச்சி அதிகப் பட்டதும் இன்னது செய்கிறோமென்று தெரியாமலே நிமிர்ந்து பார்த்தாளாம், குண்டலங்களோடு கூடிய முகமண்டலத்தை யும் வீரத்தோள்களையும். எவ்வளவு தூரத்தில் இருக்கிறது உன் இருப்பிடம்?' என்று கேட்டதற்கு, 'இந்த அழகான ஊரும் நம்முடைய ஊர்தான்' என்று சுட்டிக்காட்டினானாம்.

மேலும் சொல்லுகிறாள்:

'என்நலனும் என்நிறையும் என்சிந் தையும்
என்வளையும் கொண்டென்னை ஆளுங் கொண்டு
பொன்அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலி னூடே
புனல்அரங்கம் ஊரென்று போயி னாரே!'

Koviloor Digital Library

(நலன் - அழகு. நிறை - அடக்கம். பொன் அலர்ந்த - பொன்போலே மலர்ந்த. நறுஞ்செருந்தி - வாசனையுள்ள ஒரு வகையான மரத்தின் புஷ்பம். பொழில் - சோலை. புனல் - நீர்.) என்கிறாள். காதலன் பிரியும்போது, இவளுடைய அழகையும் அடக்கத்தையும் இருதயத்தையும் கொண்டுபோய் விட்டானாம். பிறகு இவளை இளைக்கப் பண்ணி வளை களையும் கவர்ந்து கொண்டானாம்.

'இப்படி என்னை அடிமையாக்கிக்கொண்டவன் செருந்தி மரங்கள் பொன்போலப் பூத்துச் சொரிந்திருக்கும் சோலை வழியாகப் போனான். போகும்போதே, ''ஊர் ஸ்ரீரங்கம்'' என்று சொன்னான்' என்று சொல்லுகிறாள். அவனை இனி எங்கேயாவது காணலாமென்ற நம்பிக்கை உண்டா? அப்படியானால் பழைய அநுபவத்தை நினைத்து ஜாக்கிரதையாக நடந்துகொள்ளலாமல்லவா?

அந்த நம்பிக்கையையும் தன் உத்தேசத்தையும் சேர்த்து இவள் தோழியிடம் வெளியிடுவதைக் கேளுங்கள்.

கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்
கனவிடத்தில் யான்காண்பன்; கண்ட போது
'புள்ளூரும் கள்வா! நீ போகேல்' என்பன்!

(கள் ஊரும் - தேன் பெருகும். பைந்துழாய் - பசுமையான துளசி. புள்ஊரும் - கருடனை வாகனமாய் நடத்தும். போகேல் - போகாதே.)

என்ற வார்த்தையில் கள்ளங் கபடற்ற, காதல் நிறைந்த, குழந்தையுள்ளத்தைப் பார்க்கிறோம்.

'அவனை என் இருதயத்தில் பூட்டிக்கொண்டு வெளியே விடமாட்டே' னென்றும், 'எப்போதும் அவனையே நினைத்து நினைத்து உருகிக்கொண்டேயிருப்பே'னென்றும் இவள் சொல்லும்போது, நாமும் தோழியைப்போல் இத்தகைய காதலியை இந்த விதமாகத் தவிக்கவிட்ட காதலன்மீது ஆத்திரம் அடைகிறோம்.

Koviloor Digital Library

காதலி உருகி உருகிக் காதலனைப் பாடிக்கொண்டிருக்கிறாள். இதைக் குறித்துத் தாய் மற்ற ஸ்திரீகளோடு பேசும் போது,

சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகைஇறையே தோன்ற நக்கு,
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி, ஆங்கே
மென்கிளிபோல் மிகமி ழற்றும் என்பே தையே!'

(சொல் - (இங்கே) நாதம். தூமுறுவல் - சுத்தமான புன்சிரிப்பு. நகை - (இங்கே) பல்வரிசை. இறையே - கொஞ்சமாக. நக்கு - சிரித்து.)

என்று தன் பேரன்பு தோன்ற எவ்வளவு உருக்கமாகச் சித்திரிக்கிறாள்!

தன் ஆருயிர்ப் புதல்வியின் அருமையான ஸ்பரிச விசேஷத்தால் வீணைக்கே ஒரு புதிய நாதம் உண்டாகி விட்டதாம். அதை மார்போடு அணைத்துக்கொண்டு தன் காதலையே இசை மயமாக்கிப் பாடும்போது, கீதத்தின் வசீகர சக்திக்குக் கேட்பானேன்? வீணாகானத்தோடு கிளிபோலக் கொஞ்சும் குரல் எவ்வளவு அற்புதமாக இசைந்துவிட்டது!

இப்போது அருகே இருந்த கிளியும் இவள் காதலன் பேரைச் சொல்லிப் பாடத் தொடங்குகிறதாம். உடனே காதலிக்குச் சந்தோஷம் பொங்குகிறது:

வளர்த்ததனால் பயன்பெற்றேன்; வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே!

என்று சொல்லி முடிக்கிறாள் தாய்.

கதைகள் ரஸமாயிருக்கின்றன அல்லவா? திருமங்கையாழ்வாரின் பக்திக் காதல்தான் இப்படிப்பட்ட காதற் கதைகளாகப் பரிணமித்திருக்கிறது.

Koviloor Digital Library

15. காதலும் அழகும்

காதலர் கலகம்

சொன்ன காலம் தப்பி வருகிறான் கிருஷ்ணன். காதலிக்கு முன்வர முயலாமல், பக்கத்திலும் வர முயலாமல் பின்புறத்திலே வந்து நிற்கிறானாம். 'ஏன் வந்தீர்? இது என்ன? இது என்ன? காரியந்தான் என்னவோ?' என்று கேள்விகளை அடுக்குகிறாள் காதலி, அவனை நோக்கித் திரும்பி.

காதலனோ, ஒன்றும் பதில் சொல்லாமல் நின்றுகொண்டேயிருக்கிறானாம்.சுவரோடே சேர்ந்த கதவின் பக்கமாக. தள்ளினாலும் போகமாட்டானென்று தோன்று கிறது!

திடீரென்று காதலி, 'இவர் யார்? வந்த காரியம் என்ன? என்ன? என்ன காரியமோ?' என்று வேறு யாரையோ அவசர மாகக் கேட்பதுபோல் கேட்டுக்கொண்டே வேறொரு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறாள்.

மறுபடியும் காதலனை நோக்கி, 'இந்த ராக்காலத்திலே மன்மதனோ? என்னும்படி வசீகரமாகப் பாடிக்கொண்டு, போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக்கொண்டு, மெள்ள மெள்ள வந்து வீட்டுக்குள் புகுந்தீரே, கள்ளனைப் போலே. இது உசிதமா?' என்று கேள்வி போடுகிறாள். இதற்கும் பதில் இல்லை.

அந்த மௌனம் பொறாமையைத் தூண்ட, 'நீ போய் மற்றப் பெண்களோடு ஆடி அசைந்து நடனம் செய்தாயே!' என்று ஒரு சொல்லம்பு போட்டுவிட்டுப் பளிச்சென்று தோழியைப் பார்த்து, 'என்ன இது? இவரை ஏன் உள்ளே விட்டாய்?' என்று சீறுகிறாள்.

Koviloor Digital Library

இதற்கெல்லாம் கிருஷ்ணனா பயப்படுகிறவன்! முற்றத்திலே போய்ப் புன்னகை செய்துகொண்டு நிற்கிறான், ஏதோ ஒரு ஜயம் பெற்றுவிட்டதுபோல.

சௌந்தரியம் அலைமேல் அலையெறிகிறது; கண்ணும் நெஞ்சும் அலைகளால் மொத்துண்டு சுழிகளில் முழுகிப் போகின்றன!

சுற்றும் குழல்தாழச்
சுரிகை அணைத்து,
மற்றும் பலமா
மணிபொன்கொ(டு) அணிந்து,
முற்றம் புகுந்து,
முறுவல்செய்து நின்றீர்!
எற்றுக்(கு)? இதுஎன்?
இதுஎன்? இதுஎன்னோ?

(சுற்றும் - சுற்றிலும். குழல் - தலைமயிர். தாழ - தாழ்ந்து அலைய. சுரிகை - உடைவாள். கொடு - கொண்டு. முறுவல் - புன்னகை. எற்றுக்கு - எதற்காக. என் - என்ன.)

என்று ஆத்திரம் அடைகிறாள்.

அவயவ சோபையும் ஆபரண சோபையுமாக நிற்கிறவன் உடைவாளை அணைத்திருப்பதும், அந்த வீரசௌந்தரியத்திற்கு ஓர் அபூர்வ சோபை தருகிறது. அஜாக்கிரதையாக முடிக்கப்பட்டிருக்கும் தலைமயிர் காற்றிலே தாழ்ந்து அலைந்துகொண்டிருப்பதுகூட அவன் அழகை விசிறிச் சுவாலை செய்வதுபோல் இருக்கிறது.

'இப்படி வரவேணுமோ? வந்து இப்படியும் வெற்றி கொண்டாட வேணுமோ?' என்று நாவைத் தீட்டிக்கொண்டு, கொஞ்சும் குரலால் கோபித்துச் சண்டைக்கு நிற்கிறாள் காதலி, அழகாலே கொல்ல வருவதுபோல நிற்கும் காதலனோடு! திரை விழுகிறது.

Koviloor Digital Library

'காதலர் கலகம்' என்ற இந்த நாடகத்தில் கோபிகா ஸ்திரீயாக நடித்தவர் யார்? பரகாலர் என்று பிரசித்தமான திருமங்கையாழ்வார்தாம்!

நெஞ்சமும் என்னை மறந்தது!

இவளைவிடச் சாகஸமாக நடந்துகொள்ளப்போகும் ஒரு காதலியைச் சந்திக்கிறோம்; மறுபடி திரை உயர்ந்ததும், கூந்தலை எடுத்துக்கட்டி, வேல்போன்ற கண்களில் மைதீட்டி, ஸர்வாபரண பூஷிதையாய்ப் பந்தடித்துக்கொண்டிருக்கிறாள்.

கிருஷ்ணன் குடக்கூத்து என்ற ஒருவகை நடனத்தில் ஈடுபட்டிருக்கிறான். இந்தக் கூத்தைப் பார்க்கும் பெண்கள், 'அடி, நீயும் வரமாட்டாயோ?' என்று கூப்பிடுகிறார்கள்.

பளிச்சென்று போகிறாள். கூத்தை மறந்து கூத்தனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்! இப்போது யார் என்ன சொன்னாலும் சரி, காதில் விழவில்லை! என்ன செய்தாலும் பைத்தியம் தீரவில்லை.

குறிகாரி வருகிறாள்; சுளகிலிருந்து ஒரு பிடி நெல் எடுத்து, 'ஒற்றையோ, இரட்டையோ?' என்று எண்ணிப் பார்க்கிறாள். வேர்த்து விதிர் விதிர்த்து உடம்பு சிலிர்த்து, ஆவேசங்கொண்டு, தன் கையை மோந்து பார்த்து, உடனே மாலை முதலியவற்றை அபிநயித்துக் காட்டி, 'வெண்ணெய் திருடிய களவாணியே இந்த உள்ளத்தையும் களவாடிப் போனான்!' என்கிறாள்.

பிறகு தாயார் கவலையுற்றிருப்பது கண்டு, காதலி வேறுவழி இல்லாமல் தன் நெஞ்சையே தூது விடுகிறாள். பலன் என்ன?

காரார் கடல்வண்ணன்
        பின்போன நெஞ்சமும்
வாராதே என்னை
        மறந்ததுதான்

Koviloor Digital Library

(காரார் கடல் - கரிய கடல். கடல்வண்ணன் - கிருஷ்ண பகவான் - வாராதே - திரும்பி வராமலே.)

என்று பரிதவிக்கிறாள்.

போன நெஞ்சு இவளையும் மறந்து, தூதையும் மறந்து தன்னையும் மறந்துவிட்டதாம். 'என் நெஞ்சே எனக்கு உதவாமல் இருக்க வேறு யார் உதவி செய்யப்போகிறார்?' என்று கலங்கிக் காதலுக்காக உயிரையும் - தன் பெண்மையை யுங்கூத் - தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறாள்.

இவள் யார்? வேறு யாருமில்லை; திருமங்கை நாயகிதாம்! அதாவது, இப்படி நடிப்பவரும் இந்த ஆழ்வார்தாம்!

சீதை காதல்

இன்னும் ஒரு சிறு நாடகம். ஒரு சிங்கார வனத்திலே சீதாதேவி தோழிகளோடு பூக்கொய்துகொண்டிருக்கிறாள். கொஞ்ச நேரத்தில் தலைவியைவிட்டுப் பிரிந்து தோழிமார் பூங்காவனத்தில் சிதறிப்போய் மறைந்துவிடுகிறார்கள்.

ஒருத்தி மாத்திரம் - அவள்தான் சீதையின் ஆருயிர்த் தோழி - அதிக தூரம் போய்விடவில்லை. அவளோடு தலைவி தன் காதலைக் குறித்து எத்தனையோ தடவை பேசியிருக் கிறாள்! அப்படிப் பேசுவதில் அலுப்பேயில்லை. அவள் சொல்வதையெல்லாம் பிரியமாகக் கேட்பதிலும் அந்தத் தோழிக்குச் சலிப்பே கிடையாது.

சில சமயங்களில் தலைவியின் மனம் சுக்கான் இழந்த கப்பல்போல் ஒடிக்கொண்டிருக்கும்! அந்தச் சமயங்களில் அவள் தோழியைப் பார்த்து, 'அம்மா! அவரை இன்னும் ஒரு தரம் காணும் பாக்கியம் பெற்றால், அவரோடு வழக்காடி என் காதலுரிமையை உடனே ஸ்தாபித்துக்கொள்ளப் போகிறேன்' என்று சொல்வதுண்டு.

Koviloor Digital Library

இப்போது தலைவி, ஏதேதோ மனோராஜ்யம் செய்து கொண்டே அங்கொரு பூவும் இங்கொரு பூவுமாகக் கொய்து வருகிறவள், திடீரென்று காதலரையே பார்த்து விடுகிறாள்.

தாமும் விஜயகோதண்டமும் தம்பியுமாக வந்து நின்ற நிலை! தேஜோரூபமான மேனி! அதிசயமான அந்த வீர சிங்கார சௌந்தரியம்! எல்லாம், காதலியை வெறிகொள்ளச் செய்கின்றன. முன்கூட்டியே திட்டம் போட்டிருந்தபடி, இவள் அவனோடு சம்பாஷிக்கவுமில்லை; வழக்காடவு மில்லை.

காதலர் போனதும், தோழியைப் பார்த்துச் சொல்லுகிறாள்:

மைவண்ண நறுங்கு ஞ்சிக்
குழல்பின் தாழ,
மகரம்சேர் குழைஇருபா(டு)
இலங்கி ஆட,

எய்வண்ண வெஞ்சிலையே
துணையா, இங்கே
இருவராய் வந்தார், என்
முன்னே நின்றார்:

கைவண்ணம் தாமரை, வாய்
கமலம் போலும்,
கண்ணிணையும் அரவிந்தம்
அடியும் அஃதே;

அவ்வண்ணத்(து) அவர்நிலைமை
கண்டும் தோழீ!
அவரைநாம் தேவர்என்(று)
அஞ்சி னோமே!

(நறுங்குஞ்சிக்குழல் - பரிமளம் மிகுந்த சுருளோடு கூடிய தலைமயிர். மகரம் சேர்குழை - மகர குண்டலம்.

Koviloor Digital Library

இருபாடு - இருபுறத்திலும். எய்வண்ண வெஞ்சிலை - எய்யும் தன்மையுள்ள, விரும்பத்தக்க வில். துணையா - துணையாக. கைவண்ணம் - கைநிறம். கண்இணை - இரண்டு கண்கள். அரவிந்தம் - தாமரை.)

'பின்னே மலர்சூடித் தழைந்து விளங்கிய அந்தச் சிகைக்கு இயற்கையாகவே ஒரு சுகந்தமும் இருக்கலாமோ என்றுகூட எண்ணுகிறேன். அந்த மகர குண்டலங்கள் எப்படிப் பளபளத்தன இரண்டு காதுகளிலும்! ஆபரணத்திற்கும் ஆபரணமாகத் தோன்றிய மேனியை வில்லும் ஓர் ஆபரணமாக அழகு செய்தது. வில்லைப் போலவே லட்சுமணனும் துணையாக வந்தான்.

'என்னைக் கண்டதும் தலைவர் மேலே அடியெடுத்து வைக்க முடியாமல் அப்படியே நின்றுவிட்டார். மௌனமாகவே பொழுது போக்கினோம். இதோ, இங்கேதான் வந்து நின்றார், அடி! எனக்கு நிதி கிடைத்த இடம் இது!' ('நிதியைப் பறிகொடுத்த இடமும் இதுவே!' என்பது குறிப்பு.)

'முதல் முதல் முகத்தைப் பார்க்கக் கூசி நின்றேன். அந்தக் கைகளின் அழகை என்னவென்று சொல்லுவேன்! பிறகு துணிந்து நோக்கினேன்; ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டிருந்ததுபோல் மலர்ச்சி பெற்று விளங்கிய வாயின் அழகைத்தான் எப்படி வருணிப்பேன்!

'ஏதேதோ தூது சொல்லிக்கொண்டிருந்த கண்களில் அவ்வளவு அன்பும் அப்படியே பிரகாசித்தது. மறுபடியும் கூசித்தலை குனிந்தேன். அந்தத் திருவடிகளும், ஆ! எப்படிப் பட்ட அற்புதமான தாமரை மலர்கள்!

'பூவும் மணமும்போல் இருந்தன அந்த மங்கள ரூபமும் சுபாவமும்! இந்த விதமாக அவரைக் கண்டும், 'இவர் மனிதர் அல்லர்; தெய்வம்தான்!' என்று பயந்திருந்தோமே, என்ன பேதைமை! குறைகளையெல்லாம் சொல்லி மன்றாடாமல்,

Koviloor Digital Library

ஐயோ! - மோசம் போனோமே!' என்று சீதை சொல்லி முடிக்கிறாள்.

தோழி பதில் சொல்ல வாய் திறப்பதற்குள், திரை விழுகியது. இந்த நாடகத்தில் சீதாபிராட்டியாக நடித்தவரும் திருமங்கையாழ்வார்தாம்!

காதலும் வீரமும்

கிருஷ்ண செளந்தரியத்திலும் ராம செளந்தரியத்திலும் தம்மை முழுக்க இழந்த பக்தமணியின் மனோலோகத்திலே இந்த நாடகங்கள் நடைபெறுகின்றன. இவர் பாடல்களின் வாயிலாகத்தான் பார்க்கிறோம் இத்தனை காட்சிகளையும் கனவுகளையும் நினைவுகளையும்.

உண்மையில், சீதைக்கு ராமனிடத்திலும், கோபிகா ஸ்திரீகளுக்குக் கிருஷ்ணனிடத்திலும் எவ்வளவு காதலுண்டோ, அவ்வளவு காதல் உண்டு திருமங்கை யாழ்வாருக்கும் பகவானிடத்திலே! காதலனுக்குக் காதலியும், காதலிக்குக் காதலனும் எவ்வளவு உண்மையாக இருக்கிறார் களோ அவ்வளவு உண்மையாக இருக்கிறது இவருக்கும் இஷ்ட தெய்வம்.

காதல் எத்தனையோ துறைகளில் வெளிப்படுகிற தல்லவா? ஆழ்வாரின் பக்திக் காதலும் தன்னைப் பல துறைகளில் வெளியிட்டுக் கொள்கிறது.

குளிர்ந்த சந்திரனைக் கொள்ளிபோலக் கண்டு தவிக்கும் காதலர்களுக்கு விரகதாபம் எப்படியோ, அப்படியே இவருக்கும் பகவத்விரகம்! இப்படிப்பட்ட பக்திக் கொள்கையின் ஜீவநாதம் என்ன? அது,

அவரைநாம் தேவரென்(று)
அஞ்சி னோமே!

Koviloor Digital Library

என்ற காதலி வார்த்தையில் ஒலி செய்கிறதென்று ஊகிக்கலாம். பக்தி காதலாகும்போது பயத்திற்கு இடமேது?

பழைய தமிழர் குணாதிசயத்தின் சாராம்சமான காதலும் வீரமும் தமிழர் நாகரிகத்தை வளர்த்தன என்று தெரிந்து கொண்டிருக்கிறோமல்லவா? அந்தக் காதலும் வீரமுந்தான் திருமங்கையாழ்வார் பக்தியநுபவங்களின் சாராம்சமுமாகும்.

ஆதியில் பகவானுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டு பக்தி செய்யும்போது இவருக்கும் பயம் ஏற்பட்ட தாம். 'இந்த அழுக்குடம்பு பக்திக் காதலுக்கு உரியதா? எச்சில் வாயாலும் சுத்தமில்லாத உள்ளத்தினாலும், பாவியாகிய நான் சொல்லக் கூடியதுதானா, வேதரிஷிகள் தொடக்கமான பெரியோர்களால், சொல்லப்பட்டு வந்த திருநாமம்? நான் பிழை செய்துவிட்டேனா?' என்று பயந்ததும், 'பயப்படாதே!' என்ற அபயக்குரல் கேட்டதாம்.

உலகங்களுக்கெல்லாம் ஒருயிரான பகவானே இவருக்கும் அந்தராத்மாவாக அபயதானம் செய்தானாம். அவன் உள்ளுக்குள்ளேயிருந்து கண்ணுக்குள்ளே பிரகாசிக் கிறான் என்று (அறிவினால் அல்ல, அநுபவத்தினால்) தெரிந்து கொண்டால், உடம்பும் உள்ளமும் அந்தப் பரமாத்மாவின் பரிசுத்தமான கோவில் என்பதும் தெரிந்துவிடும்.

அப்போது பாவம் ஏது? 'அழுக்குடம்பு' ஏது? உடம்பை ஹிம்ஸிப்பதற்குத்தான் நியாயம் என்ன? இந்த அநுபவத்தைத் திருமங்கையாழ்வார் எப்படி வெளியிடுகிறார் பாருங்கள்:

ஆவியை அரங்க மாலை
அழுக்குடம்(பு) எச்சில் வாயால்,
தூய்மையில் தொண்ட னேன், நான்
சொல்லினேன் தொல்லை நாமம்:
'பாவியேன் பிழைத்தவா(று)! என்(று)
அஞ்சினேற்(கு), 'அஞ்சல்!' என்று

Koviloor Digital Library

காவிபோல் வண்ணர் வந்(து), என்
கண்ணுளே தோன்றி னாரே!

(மால் - விஷ்ணு. தூய்மையில் - பரிசுத்தமில்லாத. தொல்லை - பழமை. பிழைத்தவாறு - பிழை செய்த விதம். அஞ்சினேற்கு அஞ்சின எனக்கு. அஞ்சல் - பயப்படாதே. காவி - ஒருவகை நீலமலர். வண்ணர் - வடிவை உடையவர்.)

உயிர்க்குயிரான அந்த வடிவழகே பயத்தைப் போக்கிக் காதலை வளர்க்கும ஓர் அருமருந்தாயிற்று!

★ ★ ★

இறைவன் தன் அழகைக் காட்டிக்கொடுத்து இவர் உள்ளத்திலே காதல் விளைத்து இவரைத் திருத்திப் பணிகொண்டான்.

Koviloor Digital Library

16. திருமங்கை மன்னன் அருளிய திருநெடுந்தாண்டகத்திலிருந்து

பட்(டு) உடுக்கும்; அயர்த்(து) இரங்கும்;
பாவை பேணாள்;
பனிநெடுங்கண் நீர்ததும்ப,
பள்ளி கொள்ளாள்;
எட்டுணைப்போ(து)என்குடங்கால் இருக்க கில்லாள்;
'எம்பெருமான் திருவரங்கம்
எங்கே?' என்னும்;
மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்
மடமானை இதுசெய்தார்
தம்மை மெய்யே,
கட்டுவிச்சி! சொல்என்னச், சொன்னாள்: 'நங்காய்!
கடல்வண்ணர் இது செய்தார்;
காப்பார் யாரே?

(அயர்த்து இரங்கும் - மோகித்து வருந்துகிறாள். பாவை - பொம்மை; மரப்பாச்சி. பள்ளி கொள்ளாள் - உறங்குகிறாளில்லை. எட்டுணைப்போது - எள்துணைப் போது; ஒரு நொடிப்பொழுதும். என் குடங்கால் - என்னுடைய மடியிலே. இருக்கில்லாள் - இருப்பும் கொள்ளாமல் அவஸ்தைப்படுகிறாள். மட்டுவிக்கி - தேன் விக்கி. மணிவண்டு - அழகிய வண்டுகள். மடமானை - அழகிய மான் போன்ற இப்பெண்ணை. இது செய்தார் தம்மை - இந்த நிலைமையைச் செய்தவரை; இந்த நிலைமையை இவள் அடையுமாறு செய்தவர் இன்னார் என்பதை. கட்டுவிச்சி - குறி சொல்லுகிறவள். கடல் வண்ணர் - கடல் போன்ற நிறத்தையுடைய பெருமாள்.)

Koviloor Digital Library

பரகாலர் என்ற இந்த ஆழ்வார் பரகால நாயகியாகி அநுபவிக்கும் காதலைத் தாய் வார்த்தையாக வெளியிடுகிறது இப்பாசுரம். புருஷோத்தமனாகிய பகவானது பேராண்மைக்கு முன் உலகம் பெண் தன்மையது என்பர். சிருங்கார ரஸத்திலே பக்தி ரஸத்தைக் காண்கிறோம்.

'கல்லெடுத்துக் கல்மாரி
காத்தாய்!' என்றும்,
'காமருபூங் கச்சிஊர்
அகத்தாய்!' என்றும்,
'வில்லிறுத்து மெல்லியல்தோள்
தோய்ந்தாய்!' என்றும்
'வெஃகாவில் துயில்அமர்ந்த
வேந்தே!' என்றும்,
'மல்லடர்த்து மல்லரை அன்(று)
அட்டாய்!' என்றும்,
'மாகீண்ட கைத்தலத்(து)என்
மைந்தா!' என்றும்,
சொல்லெடுத்துத் தன்கிளியைச்
சொல்லே என்று,
துணைமுலைமேல் துளிசோரச்
சோர்கின் றாளே!

(கல் எடுத்து - ஒரு மலையை எடுத்து. கல்மாரி - கல்மழையை. காத்தாய் - தடுத்தவனே. காமருபூங்கச்சி ஊரகத்தாய் - விரும்பத்தக்க அழகு வாய்ந்த காஞ்சீபுத்தில் ஊரகம் என்ற திருப்பதியில் இருப்பவனே. இறுத்து - முறித்து. மெல்லியல் - சீதாபிராட்டி. வெஃகாவில் - திருவெஃகா என்ற திருப்பதியில். மல் அடர்த்து - வலிமையை அடக்கி. அட்டாய் - ஒழித்தவனே. மா - குதிரை; குதிரை வடிவம்கொண்ட கேசி என்ற அசுரனை. கீண்ட - பிளந்தொழித்த. மைந்தா - இளங்காளை போன்றவனே. சொல் எடுத்து - பெயரின் முதற் சொல்லை எடுத்துக் கொடுத்து. சோர்கின்றாள் - துவள்கின்றாள்.)

Koviloor Digital Library

பரகாலநாயகி ஒரு கிளி வளர்த்திருந்தாளாம். அதற்குத் தன் தெய்வக் காதலனுடைய திருப்பெயர்களைக் கற்பித்திருந்தாள். இப்போது காதலி இருக்கும் நிலையில், இந்தச் சோர்வைப் போக்க வேண்டுமென்று தாய் அந்தக் கிளியை மகள் முன்னே கொண்டுவந்து விடுகிறாள்.

கிளி இந்த நாயகிக்குப் பிரியமான பெயர்களைச் சொல்லி மகிழ்விக்கவேண்டும் என்பது தாயின் விருப்பம். நாயகியும் தான் கற்பித்திருந்த பெயர்களின் தலைப்பை எடுத்தெடுத்துக் கொடுக்கிறாள். கிளி அந்தப் பெயர்களைச் சொல்லச் சொல்ல நாயகியின் சோகம் அதிகரிக்கிறது என்பது தாயுரை.

நெஞ்சுருகிக் கண்பனிப்ப
நிற்கும்; சோரும்;
நெடி(து)உயிர்க்கும்; உண்(டு)அறியாள்;
உறக்கம் போனாள்;
'நஞ்சரவில் துயிலமர்ந்த
நம்பீ!' என்னும்;
'வம்(பு)ஆர்பூ வயல்ஆலி
மைந்தா!' என்னும்;
அஞ்சிறைய புட்கொடியே
ஆடும், பாடும்;
'அணியரங்கம் ஆடுதுமோ?
தோழீ!' என்னும்;
என்சிறகின் கீழ்அடங்காப்
பெண்ணைப் பெற்றேன்,
இருநிலத்(து)ஓர் பழிபடைத்தேன்
ஏபாவமே!

(கண்பனிப்ப - கண்ணீர் பெருக. சோரும் - சோர்ந்து போகிறாள். நெடிது உயிர்க்கும் பெருமூச்சு விடுகிறாள். நஞ்சு அரவில் - நஞ்சை உமிழ்கின்ற அனந்தன்மீது. நம்பீ - புருஷோத்தமனே. வம்புஆர் - வாசனை நிறைந்த.

Koviloor Digital Library

ஆலிமைந்தா - திருவாலியில் நித்திய யௌவன ஸௌந் தரியத் துடன் இருப்பவனே. அஞ்சிறைய - அழகிய சிறகையுடைய. புள்கொடியே - பட்சியாகிய கொடியை நினைத்துக்கொண்டு. அணியரங்கம் ஆடுதுமோ - திருவரங்கத் துறையில் படிந்து ஆடப்பெறுவோமோ? இரு நிலத்து - விசாலமான இந்தப் பூமியிலே. ஓர்பழி - ஒப்பற்ற பழி.)

''இந்த லோகத்திலே என்னைப்போல் பெண் பெற்றவரும் இல்லை, என்னைப்போல் பழிபடைத்தவரும் இல்லை' என்றும் 'என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன்' என்றும் தாய் சொல்வதில் பரகாலநாயகியின் மட்டுப்படாத பக்திப் பெருங்காதல் புலனாகிறது.

முளைக்கதிரைக், குறுங்குடியுள்
முகிலை, மூவா
மூவுலகும் கடந்(து)அப்பால்
முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை,
அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர்தம்
சிந்தை யானை,
விளக்கொளியை மரதகத்தைத்,
திருத்தண் காவில்,
வெஃகாவில் திருமாலைப்
பாடக் கேட்டு,
'வளர்த்ததனால் பயன்பெற்றேன்;
வருக' என்று
மடக்கிளியைக் கைகூப்பி
வணங்கி னாளே.

(முளைக்கதிரை - இளங்கதிரவனை. குறுங்குடியுள் - திருக்குறுங்குடியில். முகிலை - மேகத்தை. மூவா மூவுலகும் - நித்தியமாயுள்ள மூவகைப்பட்ட உலகங்களும். முதலாய் - முதல்வனாகி. அளப்பரிய - அளவிட முடியாத. அந்தணனை -

Koviloor Digital Library

அழகிய அருளை உடையவனை. விளக்கொளியை - இருட்டிலே விளக்கொளிபோல் காட்சி கொடுப்பவனை. மரகதத்தை - மரகதத்தை. மடக்கிளி - அழகான கிளி.)

பரகாலநாயகி உல்லாஸமாக இருந்து தன் காதலன் பெயர்களைக் கிளி சொல்லக் கேட்டுத் தன் பெருமகிழ்ச்சியை வெளியிடுகிறாள் இப் பாசுரத்திலே. கிளி பேசுவதைப் பாட்டாகவே ஆனந்தமாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறாள்.

இதுவும் தாய் சொல்லும் பாசுரந்தான். 'ஆபத்துக்கு உதவாமல் காதலன் ஆபத்தை விளைத்துப்போனான். அந்த நிலைமையில் நீ உதவி செய்கிறாயே; அருகே வா' என்கிறாள் என்று தன் மகள் கூறுவதாகத் தாய் சொல்லுகிறாள்.

'கல்லுயர்ந்த நெடுமதில்சூழ்
கச்சி மேய
களி(று)என்றும், 'கடல்கிடந்த
கனியே!' என்றும்,
'அல்லியம்பூ மலர்ப்பொய்கைப்
பழன வேலி
அணியழுந்தூர் நின்றுகந்த
எம்மான்!' என்றும்,
சொல்லுயர்ந்த நெடுவீணை
முலைமேல் தாங்கித்,
தூமுறுவல் நகைஇறையே
தோன்ற நக்கு,
மெல்விரல்கள் சிவப்பெய்தத்
தடவி ஆங்கே
மென்கிளிபோல் மிகமிழற்றும்
என்பே தையே

(கல் உயர்ந்த நெடுமதில்சூழ் - கல்லாலே செய்யப்பட்டு ஓங்கின பெரிய மதில்கள் சூழ்ந்த. கச்சி - காஞ்சீபுரம். மேய - மேவிய; பொருந்தின. களிறு - யானையே; யானை போன்றவனே. அல்லியம்பூ மலர்ப்பொய்கை - தாதுகள்

Koviloor Digital Library

மிகுந்து வாசனையுள்ள அழகிய பூக்களையுடைய நீர்நிலைகள். பழனம் - நீர்வளமுள்ள நிலங்கள். அணிஅழுந்தூர் - அழகான திருவழுந்தூரில். தூமுறுவல் நகை - தூயபுன்முறுவலோடு கூடிய பல் வரிசை. இறையே - சிறிதே. நக்கு - நகைத்து. சிவப்பு எய்த - சிவக்கும்படியாக. என் பேதை - என் பெண்.)

இப்போது பரகாலநாயகி தன் வாயாலே திருப்பெயர் களைச் சொல்லிக்கொண்டு வீணாகானம் செய்யத் தொடங்குகிறாள்.

வாயால் சொல்ல முடியாத இவளுடைய உணர்ச்சிகளை யெல்லாம் நாதத்தால் பேசிவிடுகிற வீணையைச் 'சொல் உயர்ந்த நெடுவீணை' என்று குறிப்பிடுகிறாள் தாய். கணையாழி கண்ட சீதைபோல் காதலனைக் கண்டதாகவே மகிழ்ந்து போகிறாள் இவளும் என்பது தாயுரை.

'கன்றுமேய்த்(து) இனி(து)உகந்த
காளாய்!' என்றும்,
'கடிபொழில்சூழ் கணபுரத்(து)என்
கனியே!' என்றும்,
'மன்(று) அமரக் கூத்தாடி
மகிழ்ந்தாய்!' என்றும்,
'வடதிருவேங் கடம்மேய
மைந்தா!' என்றும்,
'வென்(று) அசுரர் குலம்களைந்த
வேந்தே!' என்றும்,
'விரிபொழில்சூழ் திருநறையூர்
நின்றாய்!' என்றும்,
'துன்றுகுழல் கருநிறத்(து)என்
துணையே!' என்றும்,
துணைமுலைமேல் துளிசோரச்
சோர்கின் றாளே.

(காளாய் - இளங்காளை போன்றவனே. கடிபொழில் - மணம் மிக்க சோலை. கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே;

Koviloor Digital Library

மன்று அமரக்கூத்தாடி - வீதியாரக் குடக்கூத்தாடி. மகிழ்ந்தாய் - மகிழ்ந்தவனே. விரிபொழில் - விரிந்த சோலை. துன்றுகுழல் - அடர்ந்து சுருண்ட மயிர் முடியுள்ள. துளி - கண்ணீர்த் துளிகள். சோர - பெருகும்படி.)

கன்று மேய்த்த திருவிளையாட்டைச் சொல்லி அழைத்தும், குடக்கூத்தாடிய லீலையைப் பாராட்டி அழைத்தும், கண்ணபுரம் முதலான திருப்பதிகளில் காட்சி வழங்கும் கருணையைப் போற்றி அழைத்தும், துஷ்ட நிக்கிரகம் செய்த மறக்கருணையை வாழ்த்தி அழைத்தும், எல்லாவற்றுக்கும் மேலாக அவனுடைய ரூப சௌந்தரியத்தைக் குறிப்பிட்டு, 'என் துணையே!' என்று அழைத்தும் ஆறியிருக்க முடியாமல் கண்ணும் கண்ணீருமாயிருக்கிறாளே என் மகள் என்பது தாயுரை.

கார்வண்ணம் திருமேனி,
கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும்
கமல வண்ணம்,
பார்வண்ண மடமங்கை
பத்தர், பித்தர்
பனிமலர்மேல் பாவைக்கு!'
பாவம் செய்தேன்
ஏர்வண்ண என்பேதை
என்சொல் கேளாள்,
'எம் பெருமான் திருவரங்கம்
எங்கே?' என்னும்;
'நீர்வண்ணன் நீர்மலைக்கே
போவேன்' என்னும்,
இதுஅன்றோ நிறை(வு)அழித்தார்
நிற்கு மாறே?

(கார் வண்ணம் திருமேனி - திருமேனி கருமேகத்தின் நிறம் உடையது. கமலவண்ணம் - தாமரைப் பூவின் நிறம்

Koviloor Digital Library

உடையன. பார்வண்ண மடமங்கை - பூமி தேவி. பத்தர் - (இங்கே) காதலர். பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு - குளிர்ந்த செந்தாமரைப்பூவில் கோயில் கொண்டிருக்கும் மகாலட்சுமி யைப் பைத்தியமாகக் காதலிப்பவர். பாவம் செய்தேன் என் - பாவம் செய்த என்னுடைய. ஏர்வண்ண என் பேதை - அழகிய வடிவையுடைய என் பெண். நிறை அழிந்தார் - உள்ளத்தை அடக்கி நிறுத்தும் ஆற்றலை இழந்தவர்கள்.)

தன் கருத்துக்குப் பெண் இணங்கவில்லையென்று கண்டதும் தாய், ''பெண்ணே! உன் கருத்துக்களைத்தான் சொல்லு, கேட்கலாம்'' என்று சொல்ல, மகளும் அவன் மேனியழகை வருணிக்கத் தொடங்குகிறாள். மண்மகளுக்கும் திருமகளுக்கும் அவன் பித்தன் என்பதையும் சொல்லிப் புலம்புகிறாள். ''அவன் ஊர் எங்கே? போய்ச் சேருவேன்'' என்கிறாள். நிறையழிந்தார் நிலை இது என்பது தாயுரை.

தேராளும் வாளரக்கன்
செல்வம் மாளத்
தென்னிலங்கை முன்மலங்கச்
செந்தீ ஒல்கி,
போராளன் ஆயிரம்தோள்
வாணன் மாளப்
பொருகடலை அரண்கடந்து
புக்கு, மிக்க
பாராளன், பார்இடந்து
பாரை உண்டு
பார்உமிழ்ந்து பார்அளந்து
பாரை ஆண்ட
பேராளன் பேர்ஓதும்
பெண்ணை மண்மேல்
பெருந்தவத்துள் என்(று)அல்லால்
பேச லாமே

Koviloor Digital Library

(தேராளும் வாளரக்கன் - ராவணன். மலங்க - கலங்க. செந்தீ ஒல்கி - செந்தீயால் கொளுத்தி. பொருகடலை அரண் கடந்து புக்கு - அலை யெறிகின்ற கடல் போன்ற அரணைக் கடந்து பாணபுரத்தில் புகுந்து. மிக்க - வெற்றி மிகப்பெற்ற பாராளன் - பூமிக்குத் தலைவன். பார் இடந்து - வராகாவ தாரத்தில் பூமியைக் குத்தியெடுத்து. பேராளன் - பெருமை பொருந்தியவன். பேசலாமே - பேசலாமோ.)

காதலியின் நிலையைத் தாய் நன்கு உணர்ந்துகொண்டு, 'என் மகள் பாக்கியசாலி' என்கிறாள். பெண்ணிடம் அநுதாபம் மட்டும் அல்ல; இவளுடைய கொள்கைக்கும் ஆதரவு காட்டுகிறாள்.

நைவளம் ஒன்(று) ஆராயா
நம்மை நோக்கா,
நாணினார் போல்இறையே,
நயங்கள் பின்னும்
செய்வளவில், என்மனமும்
கண்ணும் ஓடி
எம்பெருமான் திருவடிக்கீழ்
அணைய, இப்பால்
கைவளையும் மேகலையும்
காணேன்; கண்டேன்
கனமகரக் குழைஇரண்டும்
நான்கு தோளும்;
'எவ்வளவுண்(டு) எம்பெருமான்
கோயில்?' என்றேற்கு,
'இதுஅன்றோ எழில் ஆலி?'
என்றார் தாமே

(நைவளம் - நைவளம் என்கிற பண். ஆராயா - ஆராய்ந்து பாடி. நம்மை நோக்கா - நம்மை நோக்கி. நாணினார் போல் - வெட்கமடைந்தவர்போல நின்று. இறையே - கொஞ்சம். நயங்கள் பின்னும் செய்வளவில் - அதற்குப்

Koviloor Digital Library

பின்னும் நயங்கள் செய்த அளவில்; அதாவது, நயமான சொற்களைப் பண்ணில் இட்டுப் பாடின அளவில். இப்பால் - இதன் பின், கனமகரக் குழை - கனமான மகர குண்டலங்கள். எவ்வளவு உண்டு எம்பெருமான் கோயில் - எம்பெருமானது இருப்பிடம் இவ்விடத்திலிருந்து எவ்வளவு தூரம் உண்டு. என்றேற்கு - என்று கேட்ட எனக்கு. எழில் ஆலி - அழகிய திருவாலி என்ற ஊர்.)

தோழியை நோக்கித் தலைவி சொல்லும் பாசுரம் இது. காதலன் எப்படித்தன்னை வசப்படுத்திக்கொண்டான் என்பதை விவரமாகச் சொல்லுகிறாள் தோழிக்கு.

உள்ஊரும் சிந்தைநோய்
எனக்கே தந்(து), என்
ஒளிவளையும் மாநிறமும்
கொண்டார் இங்கே;
'தெள்ஊரும் இளந்தெங்கின்
தேறல் மாந்திச்
சேல்உகளும் திருவரங்கம்
நம்ஊர்' என்னக்,
கள்ஊரும் பைந்துழாய்
மாலை யானைக்
கனவிடத்தில் யான்காண்பன்;
கண்ட போது,
'புள்ஊரும் கள்வா! நீ
போகேல்' என்பன்;
என்றாலும் இதுநமக்(கு)ஓர்
புலவி தானே?

(உள் ஊரும் - உள்ளுக்குள்ளே படர்கின்ற. மாநிறம் - சிறந்த மேனி நிறம். இங்கே - இதே இடத்தில். தெள் ஊரும் - தெளிவாகப் பெருகுகின்ற. தெங்கின் தேறல் - தென்னங் கள். சேல் உகளும் - சேல் மீன்கள் களித்துத் தடித்து உலாவுகிற. என்ன - என்று சொல்லிப் போக. கள் ஊரும் - தேன்

Koviloor Digital Library

பெருகுகிற. புள் ஊரும் கள்வா - கருடப் பறவையை ஏறி நடத்தும் கள்வனே. போகேல் - என்னை விட்டுப் பிரிந்து போகாதே. புலவி - வருத்தம்.)

'அவருக்கு வாழ்க்கைப்பட்ட எனக்கு அவர் தந்துபோன செல்வம் உள்ளே ஊர்ந்து கொண்டிருக்கும் சிந்தை நோய்தான்; பிரேம வியாதிதான்! அவர் என்னிடம் கொள்ளைகொண்டு போனவை வளையும் மேனி நிறமும்!' என்று காதலி, தோழியை நோக்கிச் சொல்லுகிறாள். ஓர் அழகான காதல் - இசைப்பா இந்தப் பக்திப் பாசுரம்.

மின்னிலங்கு திருவுருவும்,
பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும்,
கண்ணும் வாயும்,
தன்னலர்ந்த நறுந்துழாய்
மலரின் கீழே
தாழ்ந்திலங்கு மகரஞ்சேர்
குழையும் காட்டி,
என்நலனும் என்நிறையும்
என்சிந் தையும்
என்வளையும் கொண்(டு), என்னை
ஆளும் கொண்டு,
பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப்
பொழிலி னூடே
புனல் அரங்கம் ஊர்என்று
போயி னாரே.

(மின் இலங்கு திருவுருவும் - மின்னல் போலப் பளிச்சுப் பளிச்சென்று மின்னுகிற திருமேனியும். கரிமுனிந்த - குவலயா பீடம் என்ற யானையைச் சீறிப்புடைத்த. மகரம் சேர்குழை மகரகுண்டலங்கள். என் நலனும், என்னுடைய அழகும், என்னை ஆளும் கொண்டு - என்னையும் ஆட்கொண்டு, பொன் அலர்ந்த - பொன் போல் மலர்ந்த. நறு -

Koviloor Digital Library

வாசனையுள்ள. செருந்திப்பொழில் - சுரபுன்னைச்சோலை. புனல் அரங்கம் - நீர்வளம் மிக்க திருவரங்கம்.)

இந்தக் காதற் பாசுரம் ஓதி ஓதி இன்புறத்தக்கது. இது கவிச்சக்கரவர்த்தியான கம்பனையும் பெரிதும் வசீகரித்தது.

சிந்தை யும், நிறை யும், மெய்ந்
நலனும் பின்செல,
மைந்தனும் முனியொடு
மறையப் போயினான்

கம்பன் வாக்கை ஒப்பிட்டுப் பாருங்கள்.

தேமருவு பொழிலிடத்து
மலர்ந்த போதைத்
தேனதனை வாய்மடுத்(து), உன்
பெடையும் நீயும்
பூமருவி இனிதமர்ந்து
பொறியின் ஆர்ந்த
அறுகால சிறுவண்டே!
தொழுதேன் உன்னை;
ஆமருவி நிரைமேய்த்த
அமரர் கோமான்
அணியழுந்தூர் நின்றானுக்(கு)
இன்றே சென்று,
நீமருவி அஞ்சாதே
நின்(று), 'ஓர் மாது
நின்நயந்தாள்' என்(று)இறையே
இயம்பிக் காணே.

(தே மருவு - தேன் பொருந்திய. பொழிலிடத்து - சோலைப் புறத்தில். மலர்ந்த போதைத் தேன் அதனை - மலர்ந்த பூக்களில் உண்டான தேனை. பெடை - பேடை. பூ மருவி - பூவில் பொருந்தி. பொறியின் ஆர்ந்த - மேனியில் ஒளி அதிகரிக்கப்பெற்ற. அறுகால சிறுவண்டே - ஆறு

Koviloor Digital Library

கால்களையுடைய சிறிய வண்டே. ஆமருவி நிரை மேய்த்த - பசுக்கூட்டங்களை விரும்பி மேய்த்த. மருவி அஞ்சாதே நின்று - அஞ்சாமல் பொருந்தி சென்று. ஓர் மாது நின் நயந்தாள் - ஒரு பெண் உன்னை ஆசைப்பட்டிருக்கிறாள். இறையே - சிறியதொரு வார்த்தையை. இயம்பக்காண் - சொல்லிப் பார்.)

வண்டுவிடு தூது இது. 'அணியழுந்தூர் நின்றானுக்கு' என்பதில் திருவாலி திருநகரியிலுள்ள பரகாலநாயகியிட மிருந்த ஆள் வருவது எப்போதோ என்று எதிர்பார்த்த வண்ணம் காதலன் நின்றுகொண்டிருக்கிறான் என்பது குறிப்பு.

நிறைந்தது

மணவாள மாமுனிகளின் ஈடுபாடு

அணைத்த வேலும், தொழுத கையும், அழுந்திய திருநாமமும்,

ஓம் என்ற வாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்த முகமும்,

பரந்த விழியும், பதிந்த நெற்றியும் நெறித்த புருவமும்,

இருண்ட குழலும், சுருண்ட வளையமும், வடிந்த காதும்,

அசைத்த காதுகாப்பும், தாழ்ந்த செவியும், செறிந்த கழுத்தும்,

அகன்ற மார்பும், திரண்ட தோளும், நெளித்த முதுகும், குவிந்த இடையும், அல்லிக் கயிறும், அழுந்திய சீராவும்,

தூக்கிய கருங்கோவையும், தொங்கலும், தனிமாலையும்,

தளிரு மிளிருமாய் நிற்கிற நிலையும், சாத்திய திருத்தண்டையும்.

26736

Koviloor Digital Library

Koviloor Digital Library